Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 07 ஞாயிற்றுக்கிழமை (22.07.2012) பக்கங்கள் 20 ஓசை – 295



















## கொழும்பு சென்ற பஸ் இயக்கச்சியில் விபத்து

### இருவர் பலி; பத்துப் பேர் காயம்

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்குச் சென்ற தனியார் பஸ், இயக்கச்சிச் சந்திப்பகுதியில் விபத்துக்குள்ளானதில் சம்பவ இடத்தில் இருவர் பலியானதுடன் பத்திற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். நேற்றிரவு பத்து மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு கொழும்பு நோக்கிப் புறப்பட்ட 8631 இலக்கமுடைய தனியாருக்குச் சொந்தமான சொகுசு ரக பஸ் 'அவ்ரோ' இயக்கச்சி சந்திப் பகுதியிலுள்ள வளைவில் குடைசாய்ந்ததில் இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை குறித்த பஸ்ஸின் சாரதி பஸ்ஸை விட்டு தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (77)

## சிசுவைப் புதைத்தவர் பரந்தனில் கைது

பரந்தன் 10 ஆம் வீதிப் பகுதியில் பிறந்து ஒரு நாளேயான சிசுவொன்று சடலமாக மீட்கப்பட்டதுடன் இச் சம்பவத்துடன் தொடர்புடைய தாயார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, கடந்த 18 ஆம் திகதி இரவு குழந்தையைப் பிரசவித்த மேற்படி யுவதி பூரணமாக கட்டிமுடிக்கப்படாத தமது வீட்டினுள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஓடுகளுக்கிடையில் குழந்தையைப் புதைத்து ஓடுகளால் மூடியுள்ளார். குறித்த திகதியில் கிளினிக்குக்கு யுவதி சமூகம் கொடுக்காததை அடுத்துப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்துப் பொலிஸார் மேற்கொண்ட சோதனையின் போது குறித்த வீட்டில் இருந்து சிசுவின் சடலம் மீட்கப்பட்டதுடன் சம்பவத்துடன் தொடர்புடைய யுவதியும் அவரின் பேத்தியாரும் பொலிஸாரினால் கடந்த 20 ஆம திகதி கைதுசெய்யப்பட்டுள்ளனர். சடலமாக மீட்கப்பட்ட சிசு மரண விசாரணைக்காக கிளிநொச்சி பொது மருத்துவ மனையில். ஒப்படைக்கப்பட்டுள்ளது. (கே)

# மீள்குடியமர்ந்த மக்களுக்கு ஐம்பது மில்லியன் ஒதுக்கீடு



(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மீள் குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினூடாக ஐம்பது மில்லியன் ரூபாவைப் பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இடங்களில் உடனடியாக மேற்கொள்ளப் படவேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ். மாவட்ட செயலரின் அலுவலகத்தில் நேற்றையதினம் கலந்துரையாடல் இடம்பெற்று இக் கலந்துரையாடலின்போது மாவட்டத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேச செயலர் பிரிவுகளில் மக்களின் அத்தியாவசிய

19 ஆம் பக்கம் பார்க்க

## ஆலயத்தில் யுவதியின் சடலம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலமீன்மடு பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றுக்குள் எரிந்த நிலையில் யுவதியொருவரின் சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர். நேற்றுக் காலை பாலமீன்மடு வேம்படி சித்திவிநாயகர் ஆலயத்திலேயே இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளதாகவும், இவர் பாலமீன்மடு, தண்ணிக்கிணற்றடி வீதி நந்தகுமார் சீதா (வயது-22) என இனங்காணப்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். இது தற்கொலையாக இருக்கலாம் எனத் தெரிவித்த பொலிஸார் இது தொடர்பில் விசாரணை

19 ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்கத் தூதுவர் ஆயருடன் பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு நேற்றைய தினம் விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டினீஸ் யாழ். ஆயா தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையை சந்தித்து குடாநாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளார். நேற்றுக் காலை 9 மணிக்கு யாழ். ஆயர் இல்லத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் யாழ்ப்பாணத்தில் மக்கள் எதிர் நோக்கி வருகின்ற பிரச்சினைகள் தொடர்பாக அமெரிக்கத் தூதுவர் கேட்டறிந்துள்ளார்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக



யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தெரிவிக்கையில், போருக்குப் பின்னரான காலப்பகுதியில் மக்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகள் மற்றும் உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக மீள்குடியேற்றம் செய்வதில் உள்ள தாமதங்கள், இராணுவப் பிரசன்னங்கள், கல்வி அபிவிருத்தி போன்ற விடயங்கள் குறித்து அமெரிக்கத் தூதுவர் கேட்டதாகவும்

19 ஆம் பக்கம் பார்க்க

## களவாடப்பட்ட சிலைகள் கிளிநொச்சியில் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முருகன் கோவிலில் இருந்து கடந்த மாதம் களவாடப்பட்ட மூன்று சிலைகளில் இரண்டு கடந்த 7 ஆம் திகதி குறித்த கோயிலுக்கு அண்மையில் உள்ள மதகின் கீழ் இருந்து கிளிநொச்சிப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்தே இந்த இரண்டு சிலைகளும் மீட்கப்பட்டுள்ளன. ஏற்கனவே கடந்த மாதம் 6 ஆம் திகதி குறித்த ஆலயத்தில் இருந்து மூன்று சிலைகளைக் களவாடிச் சென்றவர்கள் அதில் இரண்டை இடைநடுவே போட்டுவிட்டு ஒன்றை மட்டும் எடுத்துச் சென்றிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (பா)

### கிளிநொச்சி பொதுச்சந்தை இடமாற்றம்

## கரைச்சிப் பிரதேச சபையின் செயற்பாட்டில் அதிருப்தி

கிளிநொச்சிப் பொதுச்சந்தை இடமாற்றம் செய்வது தொடர்பான கரைச்சிப் பிரதேச சபையின் நடவடிக்கையில் வர்த்தகர்கள் பலர் அதிருப்தி அடைந்துள்ளனர். சில தினங்களுக்கு முன்பு பொதுச்சந்தை இடமாற்றம் செய்வது தொடர்பான கலந்துரையாடல் என்று அழைப்புக் கடிதங்கள் வர்த்தகர்களுக்கு அனுப்பப்பட்ட போதிலும் அந்தக் கலந்துரையாடலில் இடமாற்றம் தொடர்பில் எதுவுமே பேசப்படவில்லை என கலந்துரையாடலுக்குச் சென்று திரும்பிய வர்த்தகர்கள் பலரும் கவலை தெரிவித்தனர். இறுதிப் போர் வரை வாணிபங்களை நடத்திய வாணிபர்கள் அனைவருமே போரின் போது தமது வாணிப உடைமைகளை இழந்தவர்களே இவர்களில் பெரும்பாலானவர்கள். சுமார் 10 இலட்சத்திற்கும் அதிகமான சொத்துக்களை

19 ஆம் பக்கம் பார்க்க

# 4 பாடசாலை புதிய கட்டடங்கள் வைபவரீதியாக திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நான்கு பாடசாலைகளில் புதிய வகுப்பறைக் கட்டடங்கள், நூலகம் மற்றும் பொது மண்டபம் ஆகியவற்றை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுத் திறந்து வைத்தார்.

வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் மூன்று மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரியில் 4 வகுப்பறைகளைக் கொண்ட கட்டடத் தொகுதி, அச்சுவேலி மத்திய கல்லூரியில் மாகாண அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டின் 1.9 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய நூலகம், மாகாண அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டின் கீழ் 3 மில்லியன் ரூபா செலவில் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட நாவலர் மண்டபம், மாகாண அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டின் கீழ் 1.4 மில்லியன் ரூபா செலவில் செங்குந்தா இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத் தொகுதி ஆகியனவே நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வுகளில் ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், பதில் மாகாணப் பணிப்பாளர் உதயகுமார், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வராஜா, ஈ.பி.டி.பியின் கோப்பாய் பிரதேச அமைப்பாளர் ஐங்கரன், ஈ.பி.டி.பியின் அச்சுவேலி பிரதேச அமைப்பாளர் தர்மராசா, ஈ.பி.டி.பியின் நல்லூர் பிரதேச அமைப்பாளர் இரவீந்திர தாசன் மற்றும் கல்வி அதிகாரிகள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.


அச்சுவேலி மத்திய கல்லூரியில்...


அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரியில்...


கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில்...


செங்குந்தா இந்துக் கல்லூரியில்...

## கூட்டுறவுச் சங்கங்களால் சில்லறை வியாபாரிகள் திணறல்

நெல்லியடியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் சீனி ஒரு கிலோ 105 ரூபா விற்பதனால் சில்லறை வியாபாரிகள் சீனி விற்கமுடியாது திணறுகின்றனர்.

மொத்த வியாபாரிகளிடம் சீனி ஒரு மூடை 5300 தொடக்கம் 5350 வரை விற்கப்படுகின்றது. இதன்படி சீனி ஒரு கிலோ 106 தொடக்கம் 107 ரூபா வரை கொள் விலையாகும். இதனால் சில்லறைக் கடைகளில் சீனி விற்கமுடியாமல் தாம் தவிப்பதாக சில்லறை வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (18)

## கூட்டமைப்பு பிரதேச சயையின் வீதி அபிவிருத்திப் பணி



வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் வீதிப் புனரமைப்பு என்ற பெயரில் பெரும் ஆரவாரத்தின் மத்தியில் போடப்பட்ட வீதி படு மோசமான நிலையில் காணப்படுகின்றது.

வலி. கிழக்கு அச்செழு கொலனி குறுக்கு வீதியை புனரமைப்புச் செய்கின்றோம் என்ற பெயரில் இடிந்த வீடுகளின் சிதைவுகளையும் குறிப்பாக ஓடுகளையும் கொட்டி வீதி அமைத்துள்ளனர் வலி. கிழக்கு பிரதேச சபையினர். அதனால் மக்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியம் பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தேர்தலில் வெல்லுவதற்காக தமிழ்த் தேசியத்தை மட்டுமே தமது மூலதனமாக வைத்திருக்கும் த.தே.கூட்டமைப்பினர் கடந்த உள்ளூராட்சி தேர்தலிலும் தேசியம் பேசி மக்களின் வாக்குகளை கவர்ந்தமை உலகறிந்த விடயமாகும்.

மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் நாட்டின் கீழ்மட்ட நிர்வாக அமைப்பான உள்ளூராட்சி தேர்தலிலும் அபிவிருத்தி குறித்து பேசாது தமிழ் தேசியம் பேசி யாழ். தேர்தல் தொகுதியில் பல உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றிய த.தே. கூட்டமைப்பின் சாயம் தற்போது வெளுத்து வருகின்றமை மனங் கொள்ளத்தக்கது.

## விளையாட்டு விழா

ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.

அடைக்கலநாயகி பாலர் பாடசாலையின் விளையாட்டு நிகழ்வு இன்று பிற்பகல் 1.00 மணியளவில் அடைக்கலநாயகி ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அருட்தந்தை ஜோதிநாதன் மற்றும் அருட்தந்தை றொசான் அடிகளார் (பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர்) ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

❖ ❖ ❖

கோப்பாய் மக்கள் நலன் காக்கும் அமைப்பின் பாலர் பாடசாலை விளையாட்டு விழா இன்று பி.ப. 2.00 மணிக்கு கோப்பாய் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் மக்கள் நலன் காக்கும் அமைப்பின் தலைவர் கோ.சிவசுந்தரமூர்த்தி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.கிழக்கு பிரதேச செயலர் மா.பிரதீபன் கலந்து கொள்ளவுள்ளார். (135)

## சமய அறிவுப் போட்டி

(வேலணை)

வேலணை பெருங்குளம் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத்தின் பெரும் திருவிழா வினையொட்டி வேலணை இந்து வளர்ச்சிக் கழகமும் இந்து இளைஞர் மன்றத்தினரும் இணைந்து வருடா வருடம் நடத்தி வருகின்ற சமய அறிவுப் போட்டியானது இவ்வருடமும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வெற்றிபெற்ற முதல் மூன்று பேருக்கு சிறப்பான பரிசுகளும் 7 பேருக்கு ஆறுதல் பரிசுகளும் வழங்குவதற்கு மன்றத்தினர் முன்வந்துள்ளனர். (05)

## வருடாந்த மஹோற்சவம்

❖ ❖ ❖ ❖ ❖

அச்சுவேலி தெற்கு உலவிக்குளம் அருள்மிகு சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்வசம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி. தொடர்ந்து பதினொரு தினங்கள் உற்சவம் இடம்பெறவுள்ளது.

மஹோற்சவக் கொடியேற்றக் கிரியைகள் காலை ஆலய பிரதம குருக்கள் விருத்தகிரீஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெறும் அதே வேளை எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் புதன்கிழமை காலை 9.00 மணிக்கு தீர்த்ததோற்சவமும் மாலை 7.00 மணிக்கு திருவூஞ்சல் நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (03)

❖ ❖ ❖ ❖ ❖

(அச்சுவேலி)

ஆவரங்கால் கிழக்கு புத்தகலட்டி அருன்மிகு ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று காலை கொடியேற்றக் கிரியைகளுடன் ஆரம்பமாகி தொடந்து பன்னிரண்டு தினங்கள் இடம்பெறும்.

மஹோற்சவத்தின் தேர்த்திருப்பவனி எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கும் முதலாம் திகதி புதன் கிழமை காலை 10.00 மணிக்கு தீர்த்ததோற்சவமும் மாலை திருவூஞ்சலும் மறுநாள் மாலை 07.00 மணிமுதல் பூங்காவன உற்சவமும் இடம்பெறும். (03)

❖ ❖ ❖ ❖ ❖

(யாழ்ப்பாணம்)

தென் கோப்பாய் கற்பக விநாயகர் ஆலயத்தில் விநாயகருக்கு சிறப்பாக கொண்டாடப்படும் சதுர்த்தி உற்சவம் இன்று மாலை 4.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. (135)

## பரிசளிப்பு விழா

(நீர்வேலி)

நீர்வேலி ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2.00 மணிக்கு திருமுருகன் திருமண மண்டபத்தில் ந.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை.எங்கரசுவும் கோப்பாய் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் தே.மிலாசினியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் மகிந்தினி விஜயகுமார் கௌரவிக்கப்படவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மண்டைதீவு சந்தியில் திரு இருதயநாதர் சிலை

மண்டைதீவு சந்தியை அண்மித்த திரு இருதயநாதர் சொரூபம் ஒன்று அப்பகுதியின் ஊடாகச் செல்லும் மக்களின் வழிபாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளது.

முன்பு எடுக்கப்பட்ட முயற்சி சில எதிர்ப்புகள் காரணமாக கைகூடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# அடிப்படைக் கல்வியில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும்

— இளைப்பாறிய அதிபர் நடராசா —

(வடமராட்சி)

“தேசிய முயற்சிகளுக் கேற்றவகையில் மனிததிறன்கள் ஆற்றல்கள் கல்வி மூலம் ஒழுங்குபடுத்தப்பட்டு வளர்க்கப்பட வேண்டும். எமது கல்வியில் சீர் திருத்தம் என சில மாற்றங்கள் செய்யப்பட்டனவேயன்றி அடிப் படைக் கல்வியில் மாற்றங்கள் செய்யப்படாமையே நாட்டின் இன்றைய நிலைக்கு காரண மாகும்.

உடுப்பிட்டி அமெரிக் கன் மிஷன் கல்லூரி பரிசளிப்பு விழாவிலே பரிசுதின உரையை நிகழ்த்திய கல்லூரியின் இளைப பாறிய அதிபர் கே.நடராஜா தெரிவித்துள்ளார்.

கல்லூரி அதிபர் கே. தர்ம லிங்கம் விழாவிற்குத் தலைமை தாங்கினார். விழாவிலே பிரதம விருந்தினராக யாழ். பிரதிக் கல்விப்பணிப்பாளர் வை. ரவீந் திரன் கலந்து கொண்டார். இளைப்பாறிய அதிபர் நட ராஜா மேலும் உரையாற்றுகை யில்,

அறிவியல் வளர்ச்சி, தக வல் தொழில்நுட்பம், தொழில் நுணுக்கவளர்ச்சி, மனிதசக்தி யைப் பயன்படுத்தும் ஆற்றல் என்பவற்றினை அடிப்படையா கக் கொண்டே நாட்டின் அபிவி ருத்தி அமையும். மனிதன் கல் வியினால் தன் ஆற்றல்களை நாட்டு நலனுக்காக முற்றாகப் பயன்படுத்த வேண்டும். நாட் டின் தேசிய முயற்சிக்கு அடிப் படையான கல்வி, அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்க ளுக்கு வலுவான சாதனமாகும். நாட்டின் அபிவிருத்திக்கான திட்டங்கள் பாடசாலைகளில் இருந்தே ஆரம்பிக்கப்பட வேண டும்.

கல்விச் கொள்கையாக்கத் தில் ஈடுபடுபவர்கள் ஆட்சியி லிருக்கும் அதிகாரவர்க்கத்தி னால் அரசியல் பொருளாதார சிந்தனைகளுக்கு ஏற்பவே தொழிற்படுகின்றனர். இது நாட் டின் கல்வித்துறை வளர்ச்சி யைப் பெரிதும் பாதிக்கின்றது. கல்விக் கொள்கையின் உட்கரு வாக அமையும் பாடத்திட்டம், பாடசாலை என்ற தளத்தில் தான் செயலாக்கம் பெறுகின்றது. எதிர் காலச்சந்ததியினர்க்குச் சமூகம் அளிக்க விரும்பும் ஒழுக்கநெறி, அறிவுத்திறன்கள், விழுமி யங் கள், பண்பாட்டுக் கோலங் கள், என்பன நிறைவு செய்யப்பட வேண்டும் என்றார். (01)

## ஸ்ரீ நீலாயதாக்ஷி அம்பிகா ஸமேத ஸ்ரீ காயாரோஹனா சுவாமிகள் தேர் வாரீர்



**திருநெல்வேலிப் பதியில் உறை அம்பிகையே**
**தியாகராஜ மூர்த்திகள் சகிதம் பஞ்சமூர்த்திகள்**
**பஞ்ச இரதோற்சவம் ஆடி மகத்திலின்று**
**சுந்தரத்தேரில் வீதி உலா சங்கரியே சங்கரி**
**அடியவர் பிணி நீங்க மாரி பொழியட்டும்.**
**ஆடிப் பூரமதில் புனித தீர்த்தோற்சவம் வாரீர்**
**அன்று மாலையில் அவரோகண கொடியிறக்கம்**
**சண்டேஸ்வரர் உற்சவமும் காண்போம் வாரீர்.**

க.தேவி (நல்லூர்)

# திருத்தப்படாத நிலையில் நயினாதீவு விநாயகர் வீதி

(நயினாதீவு)

நயினாதீவு விநாயகர் பிரதான வீதி பல வருடங்களாக திருத் தப்படாத நிலையில் காணப்படுகின்றது. நயினாதீவு விநாயகர் வீதி, 7ஆம் வட்டாரம் கூடுதலாக மக்கள் பயன்படுத்தும் வீதியா கும். இறந்தவர்களின் அத்தியேட்டி கிரியைகள் மேற்கொள்ள தீர்த்தக்கரை அத்தியேட்டி மண்டபத்திற்கு இவ்வீதியூடாகத்தான் பயணத்தைமேற்கொள்ள வேண்டும்.

மேலும் வெளிஇடங்களுக்கு பிரயாணத்தை மேற்கொள்வோர், பாடசாலைமாணவர்கள் என பல தரப்பட்ட தேவைகளுக்காக இவ்வீதியைத்தான் மக்கள் பெரிதும் பயன்படுத்த வேண்டியுள்ளது. ஆனால் பல வருடங்களாக பாதிதிருத்தப்பட்டும் பாதி திருத் தப்படாமலும் இருப்பதனால் மக்கள் பயணத்தை இவ்வீதியூடாக மேற்கொள்ள முடியாமல் வீதி குண்டும் குழியுமாக உள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர். (175)

## அறிவுறுத்தல்கூட்டம்

ஆகஸ்ட் 6ஆம் திகதி நடை பெறவுள்ள க.பொ.த.உயர்தரப் பரீட்சைப் பணிகளில் ஈடுபட வுள்ள வலிகாமம் கல்விவலய அதிபர், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோருக் கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கி ழமை காலை 9.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூ யில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு இணைப்பு நிலைய மேற்பார்வையாளர், இணைப்பு நிலை உதவி மேற் பார்வையாளர், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர், நிரந்தர நோக்குநர்களாக தெரிவு செய் யப்பட்ட பரீட்சைப் பணியாளர் கள் அனைவரும் அழைக்கப் பட்டுள்ளனர். (06)

## ரம்ழான் நற்சிந்தனை



**மனிதர்களே உங்களிடம் ஓர் மகத்தான மாதம் வந்துள்ளது. அது பறகத் செய்யப்-பட்ட மாதமாகும் இம் மாதத்தில் நோன்பு நோற்பதை அல்லாஹீதஆலா கடமை யாக்கியுள்ளான். இரவு நேரங்களில் நின்று தொழுபவர் அல்லாஹ்வின் நெருக்க-த்தை பெற்றுக் கொள்வார்.**

அறிவிப்பு - ஸல்மான்(ரவி)
(105)

# வேகம் குறைந்த பேருந்துசேவை பயணிகள் பெரும் சிரமம்

(நயினாதீவு)

யாழ்ப்பாணம் குறிகட்டு வான் பேருந்து சேவை சீரின் மையால் பயணிகள் பெரும் சிர மங்களை எதிர்நோக்கி வருவ தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பாதையில் சேவையில் ஈடுபட்டுள்ள பேருந்து நல்ல நிலையில் இல்லாதிருப்பதனா லேயே சேவையில் பாதிப்புக் கள் ஏற்படுவதாகத் தெரியவரு கிறது. இப்பாதையில் சேவை யில் ஈடுபடும் பேருந்து பிற்ப கல் 6.00 மணிக்கு குறிகட்டுவா னில் இருந்து புறப்பட்டு இரவு 7.00 மணிக்கு யாழ்ப்பாணம் வரவேண்டிய நிலையில் 8.00 மணியளவில் வந்து சேர்வதால் அதில் பயணம் செய்யும் கொழும்பு செல்லும் பயணிக ளும் பருத்தித்துறை மற்றும் வலிகாமம் பகுதிகளுக்கு செல் லும் பயணிகளும் தமது பேருந் துகளைத் தவறவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளா வதாகத் தெரிவிக்கப்படுகின் றது.

எனவே நல்ல நிலையில் உள்ள பேருந்தை யாழ்ப்பாணம் குறிகட்டுவான் பாதையில் சேவைக்கு விடுமாறு பயணிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர். (175)



**காரைநகர் வியாவில் ஐயப்ப சுவாமி கோவில் தேர்திருவிழாவில் பூரணா புஸ்பகலா சமேதராக ஹரிஹரபுரத்திரன் ஐயப்பன் தேரில் ஆரோகணித்து வரும் காட்சியையும், பக்தர்கள் காவடி தூக்கி தமது நிவர்த்திக்கடன் முடிப்பதையும் காணலாம்.** (50)

# ஆசிய சிறுவர்களுக்கான சித்திரப்போட்டியும் விழாவும்

மிட்சுபிசி ஆசிய சிறுவர்க ளின் சித்தரப்போட்டியும், சித்திர விழாவும் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளது. இலங் கையின் யுனெஸ்கோ தேசிய ஆணைக் குழு சபையும், மிட்சு பிசி பொதுச் செயற்பாட்டுக் குழுவும் இணைந்து இதனை நடத்தவுள்ளன.

ஆசிய சிறுவர்களினால் ஆக்கப்பட்ட சித்திரங்கள் மூலம் சர்வதேச புரிந்துணர்வை விருத்தி செய்யும் நோக்குடன் இலங்கையி லுள்ள பாடசாலை மாணவர் களிடையே நடைபெறவுள்ளது. இப்போட்டிக்கான விண்ணப்பங் களும், சித்திர ஆக்கங்களும் கோரப்பட்டுள்ளன.

இப்போட்டியில் 6 வயது முதல் 12 வயதிற்கு இடைப்பட்ட மாணவர்கள் கலந்து கொள்ள லாம். போட்டி இருகட்டங்களாக இலங்கையில் நடைபெறவுள் ளன. முதலாம் கட்டம் மேற் குறிப்பிட்ட வயதெல்லையுடைய சிறுவர்களின் சித்திர ஆக்கங் கள் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்படும்.

2ஆம் சுற்றுப் போட்டிக்காக 300 சித்திர ஆக்கப் போட்டி யாளர் தெரிவுசெய்யப்பட்டு இவர்கள் கொழும்புக்கு அழைக கப்பட்டு, இச்- சித்திரங்கள் தொடர்பான மேலதிக ஆலோ சனை வழங்கப்பட்டு அன்றைய தினம் மீண்டும் இந்த 300 போட்டியாளர்களிற்கும் போட்டி நடத்தப்படும்.

2ஆம் கட்டத்தில் இந்த 300 போட்டியாளர்களில் 8 போட் டியாளர்கள் தெரிவு செய்யப் பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு மீண்டும் ஆக்கங்கள் ஆக்க வேண்டும். இப்போட்டியில் ஒருவர் 5 சித்திரங்கள் வீதம் ஆக்கவேண்டும். ஆக்கங்களிற் கான கருப்பொருளாக ‘எனது வாழ்வு’ என்ற தலைப்பில் இடம் பெறும் எந்த விடயத்தை யும் வரையமுடியும். குடும்பம், நண்பர்கள், பாடசாலை வாழ்வு, விழா, பழக்க வழக்கம், மக் கள், நகரம் போன்றவை வரை யலாம்.

சித்திரங்கள் 297 மி.மீx210 மி.மீ(A4அளவு) தாளில் வரை யப்பட வேண்டும். தாளில் நிலைக்குத்துப் பக்கமாக வரை யவேண்டும். தாளின் 2/3 பகுதி சித்திரமும், 1/3 பகுதி காட்சி யின் விவரணத்தை வசனத்தில் விளங்குவதாய் அமையும் விவ ரண வசனம் 3-5 வரையான வரி யைக் கொண்டிருக்க வேண்டும்.

சித்திரத்தாளின் மறுபக்கத் தில் மாணவர் பெயர், பிறந்த திகதி, வயது, பால், பாடசாலை முகவரி, தொலைபேசி இலக் கம், வகுப்பு, சொந்த முகவரி, பெற்றோர் தொலைபேசி இலக் கம் போன்ற விபரங்கள் எழுதப்பட வேண்டும்.

சித்திர ஆக்கங்களை 2012 ஆகஸ்ட் 20ஆம் திகதிக்குப் பிந்தாமல் செயலாளர் நாயகம், இலங்கையுனெஸ்கோ தேசிய ஆணைக்குழுசபை, 5ஆம் மாடி, கல்வியமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப் பட்டுள்ளது. மேலதிக தகவல் தேவைப்படுவோர் 0112177002 இலக்கத் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (06)

முதலில் வேலைக்காரனாயிருக்கக் கற்றுக்கொண்டால், எஜமானாகும் தகுதி பின்னர் தானாகவே வரும். - பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## நம் வாழ்வைக் கூவி விற்போர்!

தமிழர் தாயகப் பிரதேசங்களில் இருந்து முற்றுமுழுதாக இராணுவத்தை வெளியேற்றுவதே சமகாலத்தில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வாகும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்திருப்பதாக நேற்றைய பத்திரிகைகளில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தாவை கூடடமைப்பினர் சந்தித்தபோதே இதை அவர்கள் வலியுறுத்தினார்கள் என்பது யாழ்ப்பாண ஊடகங்கள் சிலவற்றின் தலைப்புச் செய்தியாக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வு இப்போது இராணுவத்தினரை இங்கிருந்து வெளியேற்றுவது ஒன்றுதான் என்பதைத் தவிர, அரசியல் தீர்வு குறித்த வேறு எந்தத் திட்டங்களும் தமிழ்மக்களின் தலைமையாகத் தங்களைச் சொல்லிக் கொள்கிறவர்களிடம் இல்லை என்பது உண்மையிலேயே அதிர்ச்சியளிக்கிறது.

முப்பது வருடம் நீடித்த உள்நாட்டுப்போர் முடிவடைந்து மூன்றாண்டுகளில், போர் நடந்த பகுதிகளை விட்டு அரசின் இராணுவத்தை முற்றாக வெளியேற்றிவிட வேண்டும். அதைத்தவிர வேறெந்தப் பேச்சுக்கும் ஒத்துக்கொள்ள மாட்டோம் என்ற "சின்னப்பிள்ளைத்தனத்தை" ஒரு கோரிக்கையாகக் கேட்கும் எந்த உலக நாடும் கொடுப்புக்குள் சிரிக்காமல் எப்படி இவர்களுடன் பேசும்?

போர் முடிந்த அடுத்தடுத்த வருடத்தில் வடக்கின் வீதிகளில் இராணுவத்தினரின் நடமாட்டம் முழுத்துக்கொன்றாகத் தெரிந்ததைப் போல் இப்போது தென்படுவதில்லை. வீதியெங்கும் இருந்த பலநூறு காவலரண்கள் அகற்றப்பட்டு விட்டன; அகற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது கண்ணில் தெரியும் நிஜம். நாலு மாதத்திற்கு முன் வடக்கிற்கு வந்துசென்ற வெளிநாட்டு இராஜதந்திரிகள் இப்போதும் வந்து பார்த்துவிட்டு, இராணுவப் பிரசன்னம் குறைந்து வருவதாக வெளிநாட்டு ஊடகங்களுக்குச் சொல்வதைப் படிக்கிறோம். வடக்கு மக்களின் வாழ்வில் தலையிடுவதை முற்றாக நிறுத்தி இராணுவத்தினர் முகாம்களுக்குள் முடங்கிவிட இன்னும் சிறிது காலம் தேவைப்படும் என்பது எந்த வெளிநாட்டுப் பிரதிநிதிக்குத்தான் தெரியாதிருக்கும்?

இந்நிலையில், எமது மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வாக இராணுவத்தினர் முற்றுமுழுதாக வெளியேற வேண்டும் என்ற உணர்ச்சிகரக் கோஷத்தை மட்டுமே அயல் நாட்டுப் பிரதிநிதியிடம் உளறிவிட்டு வருவது, இவர்களது அரசியல் வங்குரோத்தை அவர்களிடம் காட்டிவிட்டு வருவதல்லாமல் வேறென்ன? "இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்று இந்தியாவிடம் அழுத்தியுரைத்தோம்" என்ற வசனவீரத்தைப் பத்திரிகைகளில் வரச்செய்து, கிழக்குத் தேர்தலையொட்டி தமிழ் மக்களுக்கான உணர்ச்சியேற்றல் நாடகமிது என்பதையும் இராஜதந்திரிகள் இப்போதும் புரிந்துகொள்ளாமலா இருப்பார்கள்?

அதன்பால்தான், இவர்களது உணர்ச்சிகரக் கூத்தைக் கேட்டுவிட்டு, இந்தியத் தூதர் அமைதியாக, இலங்கை அரசாங்கத்துடன் தொடர்ந்து பேசுமாறு அறிவுறுத்தியிருக்கிறார். அதற்கு இவர்கள், "கடந்த ஒருவருட காலமாகப் பேசிவருகிறோம். எந்த முடிவும் காணமுடியவில்லை" என்று வெட்கத்தை விட்டுப் பரிதாபமாகச் சொன்னார்களாம். அதற்கு இந்தியத் தூதுவர் பொறுமையாக, "ஆனாலும் தொடர்ந்து பேசுவதன் மூலமே உங்களுக்கும் சில விடயங்கள் தெரியவரும்" என்று சொல்லி பக்குவமாக அனுப்பி வைத்தாராம்.

இப்படித்தான் அந்தப் பத்திரிகைச் செய்தி சொல்கிறது. ஆனால் இவர்கள் இதற்குப் பிறகும், "சர்வதேசம் எங்களுடன் இருக்கிறது. இலங்கை அரசுடன் பேசிப் பயனில்லை" என்றே தமிழ் மக்களுக்கு உசுப்பேற்றிக் கொண்டிருக்கப் போகிறார்கள். நம் பத்திரிகைகளும் இதையே கூவி விற்கப் போகின்றன. - ஆசிரியர்

# வேள்வி விழாக்களில் கேள்வி அதிகரித்த யமுனாபாரி ஆட்டுக்கடாக்கள்

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் உள்ள குலதெய்வ ஆலயங்களில் நடைபெற்ற வேள்வி விழாக்களில் யமுனாபாரி ஆட்டுக்கடாக்களுக்கு இம்முறை சடுதியாக விலை அதிகரித்துள்ளது.

தற்போது யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு யாழ்.கொழும்பு ஏ-9 பாதை திறக்கப்பட்டதன் பின்னர் யமுனாபாரி ஆட்டுக்கடாக்கள் தென்னிலங்கைக்கு இன விருத்திக்காகவும் இறைச்சிக்காகவும் கொண்டு செல்லப்படுகிறது. இங்கு ஆட்டிறைச்சிக் கடைகளுக்கு தினமும் பல ஆட்டுக்கடாக்கள் இறைச்சிக்காக வெட்டப்படுகின்றது. இதனாலேயே கொள்வனவுக்கேற்ப இன விருத்தி இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

யமுனாபாரி ஆட்டுக்கடா ஒன்று 25 ஆயிரம் தொடக்கம் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட விலைகளில் கூறி விற்பனை செய்யப்பட்டது. குறிப்பாக கொற்றவத்தை ஆண்டாவளவு வைரவர், அல்வாய் கிழக்கு வடமுகவலை விறுமர் கோவில், குரும்பை கட்டி வைரவர் ஆலயம், நவிண்டில் நாச்சிமார் கோவில், பொலிகண்டி வீரபத்திரர் ஆலயம், திக்கம் பணிக்கர் கோவில், தும்பளை நெல்லண்டை அம்பாள் ஆலயம், வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலயம் போன்ற குலதெய்வ ஆலயங்களில் வைகாசி மாதம் தொடக்கம் ஆடி வரையான காலப்பகுதிகளில் வேள்வி விழா நடைபெறும்.

எதிர்காலத்தில் கொள்வனவுக்கேற்ப இனப்பெருக்கம் இல்லாவிட்டால் யாழ்ப்பாணத்தில் உள்ள யமுனாபாரி ஆட்டினம் அழிந்துவிடக் கூடிய அபாயம் உள்ளதாக கால்நடைத் துறையினர் தெரிவிக்கின்றனர். கால்நடைத்திணைக்களங்கள் யாழ்ப்பாண யமுனாபாரி ஆட்டினங்களை அழிந்து விடாமல் பாதுகாக்க கிராம மட்ட விழிப்புணர்வுகளையும் ஊக்குவிப்புகளையும் வழங்க வேண்டும் எனவும் கோரியுள்ளனர். (116)

# சரஸ்வதி சனசமூக நிலையத்தில் "அரியாலை தின" நிகழ்வுகள்

(அரியாலை)

சர்வதேச அரியாலை தினம் எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வானது நீண்டகாலமாக புலம்பெயர் நாடுகளில் பிரிந்திருந்த அரியாலை கிராமத்தைச் சேர்ந்த உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஒரே இடத்தில் சந்திக்கும் நிகழ்வாக நடைபெறவுள்ளது.

பகல் முழுவதும் அமரத்துவம் அடைந்தவர்களின் ஞாபகார்த்தமாக சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், பாலர் ஓட்டம், கிளித்தட்டு, கயிறு இழுத்தல், சங்கீதக்கதிரை, விநோத உடைப் போட்டி போன்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

புலம் பெயர்ந்தவர்களின் நிதிப்பங்களிப்பின் மூலமும் இடம் பெயர்ந்து மீண்டும் அரியாலைப்பகுதியில் குடியேறியுள்ள ஊரவர்களுக்கு உதவுதல், அவர்களில் வறுமைக்கோட்டின் கீழ்வாழும் ஊனமுற்றவர்கள் பெண்களை தலைமைத்துவமாகக்கொண்ட குடும்பங்களின் விபரங்களைக் கிராம சேவையாளரூடாக திரட்டி உதவுவதே இவ் விழாவின் முக்கிய நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரவு மின்னொளியில் நடனம், நாடகம் ஆகிய நிகழ் வுகள் மாலை 7.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரையும் நடைபெறும் பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது. என சர்வதேச அரியாலை தினக்குழுவின் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் மற்றும் இணைப்பாளர் எஸ். உருத்திரேஸ்வரன் ஆகியோர் அறிவித்துள்ளனர். (116)

# பெருங்குளம் அம்மனுக்கு இன்று மஹோற்சவம்

(வேலணை)

சரித்திர பிரசித்திபெற்று விளங்கிவருகின்ற வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்றைய தினம் காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு தினங்களுக்கு திருவிழாக்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7.00 மணியளவில் ஆலய முன்றலில் பிரமாண்டமான தீ மிதிப்பு வைபவம் இடம்பெறும்.

30ஆம் திகதி திங்கட்கிழமை பெரிய சப்பரமும், 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் தேர்த் திருவிழாவும நடைபெறவிருக்கின்றது. மறுதினம் முதலாம் திகதி புதன் கிழமை காலை தீர்த்தத்திருவிழாவும், 2 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு பூங்காவனத் திருவிழாவும் நடைபெற்று உற்சவங்கள் முடிவடையவுள்ளது.

திருவிழாக் காலங்களில் ஆலயத்திற்கு வருகின்ற அடியார்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்படவிருக்கின்றது. ஆலயத்தின் திருவிழாவில் கலந்து கொள்ள வருவோர்களினது போக்குவரத்து வசதிகளைக் கருதி யாழ். நகரில் இருந்து ஆலயம் வரை பஸ் சேவை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. (05)

## மீன் சந்தை இருந்தும் நடைபாதையில் மீன் விற்பனை

(நயினாதீவு)

நயினாதீவு தெரு ஓரத்தில் மீன் விற்பனை செய்யப்பட்டுவதால் வீதியில் பயணம் மேற்கொள்ளும் மக்கள் அசௌகரியத்தை எதிர் நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. ஏற்கனவே வேலணைப் பிரதேச சபையினால் நயினாதீவு வடக்கு, நயினாதீவு தெற்கு போன்ற இடங்களில் மீன்சந்தை அமைக்கப்பட்டிருந்தும் அச் சந்தையைப் பயன்படுத்தாமல் எழுந்தமானத்தில் தான்தோன்றித் தனமாக தங்கள் வியாபாரத்தினை நடைமுறைப்படுத்தும் மீன் வியாபாரிகள் வீதிகளை அசுத்தம் செய்கின்றனர். இந்த விடயத்தில் வேலணைப் பிரதேச சபையினர் ஆக்கபூர்வமான ஒழுங்கு முறையை மேற்கொள்ள வேண்டுமென இப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (175)

# அனலைதீவு நூலகத்தின் அபிவிருத்திப் பணிகள்

ஊர்காவற்றுறை பிரதேசசபையின் அனலை தீவு பொதுநூலகமானது கனடாவிலுள்ள அனலை தீவு கலாசார ஒன்றியத்துடன் இணைந்து பல்வேறு நூலக அபிவிருத்திப்பணிகளை மேற்கொண்டு வருகின்றது. நூலக வலுவூட்டல் செயற்றிட்டத்தின் கீழ் அனலைதீவு பொது நூலக நூலகர் ச.தர்மிளா மற்றும் நூலக வாசகர் வட்டம் விடுத்த கோரிக்கையை ஏற்று சபையின் அனுமதியுடன் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரதேசத்தின் மாணவர்கள் அனைவரையும் மற்றும் குடும்பத்தில் குறைந்தது ஒருவரை நூலக அங்கத்தவராக்குதல் என்ற இலக்கோடு நூலகத்தில் அங்கத்தவர்களாக இணைய விரும்புவோர்களுக்குரிய வைப்புப்பணம் மற்றும் அங்கத்துவப் பணத்தை கலாசார ஒன்றியம் செலுத்துதல், பொது நூலக சுற்றுமதிலை புனரமைத்து வர்ணம் பூசுதல், நூலகத்துக்கான நுழைவாயிலில் வில்வடிவிலான பெயர்ப்பலகையை அமைத்தல், நூலகப் பயன்பாட்டுக்கான நவீன வசதிகளுடன் கூடிய மலசல கூடத்தை அமைத்தல், பெறுமதியான நூல்த் தொகுதி அன்பளிப்புப் போன்ற நூலகத்துக்கான அபிவிருத்திப் பணிகளுடன் அனலைதீவு பொது இந்து மயானத்துக்கான நுழைவாயில் மற்றும் மதில் அமைப்பு போன்ற அபிவிருத்திப் பணிகளையும் கனடாவிலுள்ள அனலைதீவு கலாசார ஒன்றியம் மேற்கொண்டு வருகின்றது. இந்நிலையில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வரும் கனடாவிலுள்ள அனலைதீவு கலாசார ஒன்றியத்துக்கு ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தவிசாளர், செயலாளர் மற்றும் அனலைதீவு பொது நூலக வாசகர்கள் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

# கொள்கை இல்லாத அரசியலை கூட்டமைப்பிலேயே பார்க்கிறோம்

கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் சமர்ப்பிக்கும் காலம் முடிவடைந்து அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரசாரம் சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கின்றது. இத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும், தமிழ்த்

**புலிகளின் வழிகாட்டலில் செயற்பட்ட காலத்தில் தனிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது தீர்வுக்காக எந்தக் கொள்கையையும் முன்வைக்க இயலாத நிலையில் இருக்கின்றது. தமிழ் மக்களின் தனித் தலைமைக்கு உரிமை கோருபவர்கள் அம்மக்களின் பிரதான பிரச்சினையான இனப்பிரச்சினையின் தீர்வுக்காக ஒரு கொள்கையை வெளிப்படுத்த இயலாதிருப்பதையிட்டு வெட்கப்படவேண்டும்.**

**- சங்கர சிவன்**

தேசியக் கூட்டமைப்புக்குமிடையேதான் பிரதான போட்டி என்று அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மாகாண சபையின் ஆட்சியை மீண்டும் கைப்பற்றுவதற்காகப் போட்டியிடுகின்றது. தேர்தல் அறிவிப்பு வெளியாகிய நாளிலிருந்து சம்பந்தன் பல தடவைகள் கூறியதைப் பார்க்கும்போது, பிள்ளையான் முதலமைச்சராக வருவதைத் தடுப்பதே கூட்டமைப்பின் பிரதான இலக்கு எனத் தெரிகின்றது. தமிழ் மக்களின் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் தலைமை என்று உரிமை கோரும் கூட்டமைப்பு ஒரு தனி நபர் பதவிக்கு வருவதைத் தடுப்பதற்காகப் போட்டியிடுகின்றது என்றால் எவ்வளவு கீழ் மட்டத்துக்கு இறங்கியிருக்கின்றது என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும். பிள்ளையானைத் தவிர எவர் முதலமைச்சராக வந்தாலும் பரவாயில்லை என்பதே இதன் அர்த்தம். ஆட்சி அமைப்பதற்காகப் போட்டியிடுகின்றோம் என்று சொல்லும் திராணி இவர்களுக்கு ஏன் இல்லை என்று மக்கள் கேள்வி எழுப்பலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தோற்றம் தனி நாட்டு நிகழ்ச்சி நிரலுடன் இணைந்ததாகவே இருந்தது. தனித் தனியாகச் செயற்பட்ட கட்சிகளைப் புலிகள் ஒரு அணிக்குள் கொண்டுவந்துகூட்டமைப்பைத் தோற்றுவித்தார்கள். சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வு ஆலோசனைகள் நடைமுறைக்கு வரவிடாமல் தடுப்பது அந்த நேரத்தில் புலிகளின் உடனடி இலக்கு. சமஷ்டித் தன்மை கொண்டதும் ஏறக்குறைய முழுமையான அதிகாரப் பகிர்வை வழங்குவதுமான அந்தத் தீர்வுத் திட்டத்தைப் புலிகளின் கட்டளைக்குப் பணிந்து எதிர்த்தவர்கள் இப்போது அதனிலும் பார்க்கக் குறைவான தீர்வுக்காக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றார்கள் என்பதையும் தீர்வுத் திட்டத்தை இவர்கள் ஆதரித்திருந்தால் தமிழ் மக்கள் அண்மைக் காலத்தில் அனுபவித்த இழப்புகள், அழிவுகள், துயரங்கள் அனைத்தையும் தவிர்க்க முடிந்திருக்கும் என்பதையும் இங்கு கூறாமலிருக்க முடியாது.

ஆரம்ப நாளிலிருந்து தனி நாட்டு நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகச் செயற்பட்டு வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முள்ளிவாய்க்காலில் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின் தனிநாட்டு நிலைப்பாட்டைக் கைவிட்டுவிட்டதாக அரையும் குறையுமாகக்கூறுகின்ற போதிலும் இனப்பிரச்சினைக்குத் தாங்கள் முன்வைக்கும் தீர்வு என்ன என்பதை இன்று வரை வெளிப்படுத்தவில்லை. கூட்டமைப்பிடம் தீர்வுக்கான கொள்கை இருக்குமேயானால் அதை வெளிப்படுத்துவதற்கு மாகாண சபைத் தேர்தல் நல்ல சந்தர்ப்பம்.

தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் இனப்பிரச்சினையின் தீர்வுக்குக் கொள்கையொன்றை முன்வைக்காத தலைமையை இப்போதுதான் பார்க்கின்றோம். தமிழரசுக் கட்சி சமஷ்டிக் கொள்கையை முன்வைத்தது. பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி தனி நாட்டுத் தீர்மானத்தை வட்டுக்கோட்டையில் நிறைவேற்றியது. புலிகளின் வழிகாட்டலில் செயற்பட்ட காலத்தில் தனி நாட்டுக் கொள்கையைப் பின்பற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது தீர்வுக்காக எந்தக் கொள்கையையும் முன்வைக்க இயலாத நிலையில் இருக்கின்றது. தமிழ் மக்களின் தனித் தலைமைக்கு உரிமை கோருபவர்கள் அம்மக்களின் பிரதான பிரச்சினையான இனப்பிரச்சினையின் தீர்வுக்காக ஒரு கொள்கையை வெளிப்படுத்த இயலாதிருப்பதையிட்டு வெட்கப்படவேண்டும். மாகாண சபைத் தேர்தலின் போதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்வுக்கான ஒரு கொள்கையை முன்வைக்க வேண்டுமென மக்கள் விரும்புகின்றார்கள். ஆனால், கூட்டமைப்புத் தலைவர்கள் இனப்பிரச்சினையின் தீர்வு பற்றி எதுவும் பேசுகின்றார்களில்லை. அவர்கள் பேசுவது குழப்பகரமாக இருக்கின்றது. வடக்கு-கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டதாலேயே கிழக்கு மாகாண சபையின் முன்னைய தேர்தலில் போட்டியிடவில்லை என்கிறார் சம்பந்தன். தமிழ் மக்கள் அடிமைகளாக வாழ விரும்பவில்லை என்பதை வெளிப்படுத்தும் விதத்தில் வாக்களிக்க வேண்டும் என்று சொல்கிறார்.

இப்போதும் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டுத்தானே இருக்கின்றன. பிரிக்கப்பட்டதற்காக முன்னர் போட்டியிடவில்லை என்றால், இப்போது ஏன் போட்டியிடுகின்றார்கள்? இரண்டு மாகாணங்களும் பிரிக்கப்பட்டதை இப்போது ஏற்றுக்கொண்டு விட்டார்களா? சும்மா கதை விடக்கூடாது. புலிகள் அனுமதிக்காததாலேயே போட்டியிடவில்லை. இவர்கள் விரும்பினாலும் போட்டியிட்டிருக்க முடியாது.

அடிமை வாழ்க்கை பற்றிக் கூட்டமைப்புத் தலைவர்கள் தாராளமாகப் பேசலாம். ஏனெனில் அவர்களும் அப்படியான வாழ்க்கையை வாழ்ந்து விட்டுத்தான் வந்திருக்கின்றார்கள். அந்த நாட்களில் தாங்களே தீர்மானித்து எதையும் செய்யும் உரிமை இவர்களுக்கு இருக்கவில்லை. புலிகள் சொன்னதையே செய்தார்கள். தேர்தலில் வேட்பாளர்கள் யார் என்பதையும் புலிகளே தீர்மானித்தார்கள். பாராளுமன்றத்தில் இவர்கள் என்ன பேச வேண்டும் என்பதையும் புலிகளேமுடிவு செய்தார்கள். இப்போது அந்தஅடிமை வாழ்க்கையிலிருந்து விடுபட்டு வந்திருப்பதால் தமிழ் மக்களின் அடிமை வாழ்க்கை பற்றிப் பேசுகின்றார்கள். இது காலாதி காலமாகக் கேட்டுக்கேட்டுப் புளித்துப்போன கதை. அமிர்தலிங்கம், இராசதுரை, ஆலாலசுந்தரம் போன்ற பல பேச்சு மன்னர்கள் ஒவ்வொருதேர்தல் மேடையிலும் இதையே பேசினார்கள். இந்த வீர உரைகளைக் கேட்டு உணர்ச்சிவசப்பட்ட மக்கள் அளித்த வாக்குகளைப் பெற்றுத்தலைவர்கள் பாராளுமன்றத்துக்குச் சென்றார்கள். மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை. மக்களின் நாளாந்த வாழ்க்கை வரவர மோசமான நிலைக்குச்சென்றது. இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற வடிவத்தில் தமிழ் மக்களுக்குக் கிடைக்கவிருந்த சிறிதளவு நன்மைகளைக்கூடக் கிடைக்க விடாமற் தடுத்தது தான் இத்தலைமைப் பாரம்பரியத்தின் பங்களிப்பு.

**பேச்சு மன்னர்கள் ஒவ்வொரு தேர்தல் மேடையிலும் இதையே பேசினார்கள். இந்த வீர உரைகளைக் கேட்டு உணர்ச்சிவசப்பட்ட மக்கள் அளித்த வாக்குகளைப் பெற்றுத் தலைவர்கள் பாராளு மன்றத்துக்குச் சென்றார்கள். மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற வடிவத்தில் தமிழ் மக்களுக்குக் கிடைக்கவிருந்த சிறிதளவு நன்மைகளைக்கூடக் கிடைக்க விடாமற் தடுத்தது தான் இத்தலைமைப் பாரம்பரியத்தின் பங்களிப்பு.**

தமிழ் மக்களுக்கு அவர்களின் நியாயபூர்வமான அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டிருப்பதையும் நாளாந்த வாழ்க்கையில் அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகளையுமே அடிமை வாழ்க்கை என்று சம்பந்தன் கூறுகின்றார் போலும். மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதன் மூலம் இந்த நிலை எப்படி மாற்றமடையும் என்பது விளங்கவில்லை. சம்பந்தன் அதை விளக்கிக் கூறவேண்டும். இனப்பிரச்சினைக்குத் தீர்வு இல்லாததே இந்த நிலைக்குக் காரணம். இந்த நிலைமை மாறவேண்டுமானால் இனப்பிரச்சினையின் தீர்வுக்காகச்செயற்படவேண்டும். அதை விட்டு, அடிமைகளாக வாழவிரும்பவில்லை என்பதை வெளிப்படுத்தும் விதத்தில் கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள் எனக் கூறுவதால் இந்த நிலைமைமாறாது. தமிழ்த் தலைவர்களின் கையாலாகாத்தனத்தாலும் சுயநல அரசியலாலும் இனப்பிரச்சினை இன்று சிக்கலான நிலைமை அடைந்திருக்கின்றது. அதே தலைமையின் வழி வந்தவர்கள் பிரச்சினையை மேலும் சிக்கலாக்காமல் யதார்த்தத்தை விளங்கிச் செயற்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

**அடிமை வாழ்க்கை பற்றிக் கூட்டமைப்புத் தலைவர்கள் தாராளமாகப் பேசலாம். ஏனெனில் அவர்களும் அப்படியான வாழ்க்கையை வாழ்ந்துவிட்டுத்தான் வந்திருக் கின்றார்கள்.**



தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்புடன் இணைந்து நில அபகரிப்புக்கும், சிங்களக் குடியேற்றத்துக்கும் எதிராக ஆர்ப்பாட்டம் செய்கின்றார்கள். சிறையிலுள்ள தமிழ் இளைஞர்களை விடுவிப்பதற்குப் போராட்டம் நடத்துகின்றார்கள். இந்த ஆர்ப்பாட்டங்களும்,போராட்டங்களும் தேவையற்றவை எனக் கூறவரவில்லை. இப்பிரச்சினைகள் எல்லாவற்றுக்கும் நதி மூலமான இனப் பிரச்சினையை மறந்திருப்பது தான் தவறு. தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சி என்ற வகையில் அம்மக்களின் பிரதான பிரச்சினையான இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயற்படவேண்டிய தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அவ்வாறு செயற்படுவதற்கு இயலாத நிலையில் நிற்கின்றது. அந்த இயலாமையைமறைப்பதற்காக உணர்ச்சிக் கோஷங்களுடன் வேறு போராட்டங்களில் ஈடுபடுகின்றது. இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜே.வி.பி. என்ற மக்கள் விடுதலைமுன்னணிக்குமிடையே வேறுபாட்டைக் காண முடியவில்லை. நில அபகரிப்புக்கும் திட்டமிட்ட குடியேற்றங்களுக்கும் எதிராக ஜே.வி.பி.யும் ஆர்ப்பாட்டம் செய்கின்றது. சிறையிலுள்ள தமிழ் இளைஞர்களை விடுவிக்கக் கோரி ஜே.வி.பியும் போராட்டம் நடத்துகின்றது. இனப்பிரச்சினையின் தீர்வுக்கு இரண்டு கட்சிகளிடமும் கொள்கை இல்லை. தீர்வுதொடர்பாக இரண்டு கட்சிகளும் நடைமுறைச் சாத்தியமற்ற கோஷங்களையே முன்வைக்கின்றன.

கூட்டமைப்புத் தலைவர்கள் நடைமுறைச் சாத்தியமான வழியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிக்காமல் வாக்குகளுக்காக ஆவேச உரைகள் மூலம் தமிழ் மக்களைத் தொடர்ச்சியாக உணர்ச்சிக் கொந்தளிப்பில் வைத்துக் கொண்டிருப்பார்களேயானால் அழிவுகளும் இழப்புகளும், துயரங்களும் தொடர் கதையாகவே இருக்கும்.

# ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுக்க அவுஸ்ரேலியா ஒத்துழைப்பு வழங்கவில்லை

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளைகட்டுப்படுத்த அவுஸ்ரேலிய அரசாங்கம் போதியளவு ஒத்துழைப்பு வழங்குவதிலல்லை என இலங்கை அரசாங்கம் குற்றம் சுமத்தியுள் ளது.

இலங்கை கடற்படைத் தளபதி சோமதிலக்க திஸாநா யக் கவிற்கும், இலஙகைக்கான அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகர் ரொபின் மூடிக்கும் இடையில் அண்மையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கைக் கடற்படையின் புலனாய்வுப் பிரிவினரும்நாட்டின் ஏனைய படையினரும் கால நேரம் பார்க்காது சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முயற்சி மேற்கொண்டு வருவதாக கடற்படைத் தளபதி சோமதிலக்க திஸாநாயக்கதெரிவித்துள்ளார்.

கடற்படை மீது குற்றம் சுமத்தும் தரப்பினர் கடந்தஇரண்டு வாரங்களுக்குள் 400 சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்கள் கைது செய்யப்பட்ட விவகாரத்தை கவனத்திற் கொள்ளத் தவறிவிட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக் கடற்படையினருக்கு அவுஸ்ரேலியா போதியளவு ஒத்துழைப்பு வழங்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பணம் சம்பாதிக்க விரும்பும் நபர்கள் அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் புகலிடம் பெற்றுக கொள்ள எதை வேண்டுமானாலும் செய்வார்கள்என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சட்டவிரோதமாக அவுஸ்ரேலியா விற்குள்பிரவேசிக்கும் இலங்கையர்கள் நாடு கடத்தப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த காலங்களில் பிரித்தானியா சுமார் 1000இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்தியுள்ளதாகவும், இவ்வாறு நாடுகடத்தப்பட்ட காரணத்தினால் பிரித்தானியாவிற்குள் சட்டவிரோதமான பிரவேசிக்க முயற்சிக்கும் இலங்கையர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக கடற்படைத் தளபதிசோமதிலக்க திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கைப் புகலிடக்கோரிக்கையாளர்கள் அவுஸ்ரேலியாவிற்குள் பிரவேசிப்பதனை தடுக்க கடற்படையினர் உரியநடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாக அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகர் ரொபின் மூடிசுட்டிக்காட்டியுள்ளார்.

புகலிடக் கோரிக்கையாளர் கடல் வழியாக செல்வதனைதடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்.

# சுவாரசியமான கிழக்குத் தேர்தல் களம்



சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுத்த முடிவின் காரணமாக கிழக்கு தேர்தல் முடிவு கேள்விக்குறியாகியுள்ளது என அக் கட்சியின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் சேர்ந்து போட்டியிட்டால் முடிவைப் பற்றி யாரும் எந்தவித சந்தேகமும் கொள்ளப் போவதில்லை ஆனால் தனித்து போட்டியிட்டதன் காரணமாவே தேர்தல் முடிவு கேள்விக் குறியாகியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக கிழக்கு தேர்தல் களம் சுவாரசியம் அடைந்துள்ளதாக ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இந்த தேர்தலில் தனித்து போட்டியிடுவதற்கு கட்சி போராளிகளின் அழுத்தம் காரணமாக இருந்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின்போது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# சர்வதேச நாணய நிதியம் 415 மில்லியன் டொலர் கடனுதவி

இலங்கைக்கு 415 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வழங்கப்படஉள்ளதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

எட்டு தவணைகளின் அடிப்படையில் இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் இறுதிக் கட்ட தவனைக் கடன் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இதன்படி சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 2.49 பில்லியன் அமெரிக்கடொலர்களை கடனாக வழங்கியுள்ளது.

இலங்கையின் பேரினப் பொருளாதாரக் கொள்கை திருப்தி அளிக்கும்வகையில் அமையப் பெற்றுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் நயோக்கிசின்ஹோரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேலும் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாகப்பெற்றுக் கொள்வது தொடர்பில் அரசாங்கம் சாவதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

# கிராமசேவையாளர்கள் தொடர்பில் மக்களின் மனங்கள் மாறும்



(கொழும்பு)

நாட்டில் உள்ள கிராம சேவையாளர்கள் தொடர்பில் மக்கள் கொண்டுள்ள நிலைப்பாட்டை மாற்றும் காலம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் நவீன் திஸாநாயக தெரிவித்துள்ளார்.

பொகவந்தலாவையில் நேற்று இடம்பெற்ற கிராம சேவையாளர்களுக்கான பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

விசேடமான ஒரு சில அரச அதிகாரிகளால் அனைத்து அரச சேவையாளர்களுக்கும் அபகீர்த்தி ஏற்படுகின்றது.

இந்த நிலையில் கிராம சேவகர்கள் மக்கள் மத்தியில் நல்ல மதிப்பு கொண்ட்வர்களாக திகழ்கிறார்கள். இதனை அவர்கள் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் நவீன் திஸாநாயக குறிப்பிட்டார்.

# எசல பெரகராவிற்கு 1500 அபாலிஸார் பாதுகாப்பு

கதிர்காமம் எசல பெரஹெராவிற்கு செல்லும் பக்தர்களின் பாதுகாப்பு கருதி 1,500 பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸ் சீருடையுடனும், சிவில் தோற்றத்துடனும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இங்கு வரும் பக்தர்களின் நலன் கருதி பொலிஸார் பாதுகாப்பற்ற இடங்களில் கடமையில் ஈடுபடுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்ட பெரஹெரா ஆகஸ்ட் மாதம் இரண்டாம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

# மாகாணசபைத் தேர்தல் சட்ட மீறல்கள் 14



மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்புமனு ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ள நிலையில், 13 சட்ட விரோத ஊர்வலங்கள் உட்பட 14 தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக சுதந்திர மானதும், நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை மகாண சபைக்கான தேர்தல் நடைபெறுகின்ற ஒவ்வொரு மாவட்டத்திலும் சட்டவிரோத பிரசாரங்கள் தொடர்பில் பதிவாகியுள்ளதாக பெ.்.ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

எனினும் தேர்தல் தொடர்பில் குறிப்பிடத்தக்க சம்பவங்கள் எதுவும் இதுவரை பதிவாகவில்லை என தேசிய தேர்தல்கள் கண்காணிப்பு நிலையத்தின் தேசிய இணைப்பாளர் சட்டத்தரணி ரசாங்க ஹரிஸ்சந்திர தெரிவித்துள்ளார்.

# கஹவத்தை இரட்டைக் கொலை திட்டமிடப்பட்ட நடவடிக்கை

கஹவத்தை, கொட்டகெத்தன தாய் - மகள் இரட்டைக் கொலையை செய்தவர்கள் சடலங்களை எரித்துவிட்டதனால் ஏறத்தாழ சகல தடயங்களையும் அழித்திருந்த இவர்கள் மிக திட்டமிட்டு இந்த கொலையை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் குழு உட்பட நான்கு பொலிஸ் குழுக்கள் தற்போது விசாரணை செய்து வருகின்றன. இதுரையில் இவர்கள் 55 பேரிடம் வாக்குமூலம் பெற்றுள்ளனர.

விசாரணைக் குழுக்கள் தேடுதல் நடத்தியபோது கொல்லப்பட்டவர்களின் வீட்டுக்கு பின்னால் 50 மீற்றர் தூரத்தில் பயன்பாட்டில் இல்லாத காணியொன்றில் பல சாராய போத்தல்களையும் மிக்ஸர் பக்கெற்றுக்களையும் கண்டுள்ளனர், இதைவிட வேறு தடயம் எதுவும் கிடைக்கில்லை.

கொல்லப்பட்ட 63 வயது பிரேமாவதியும் அவரது 32 வயது மகளான புஸ்பகுமாரியும் வாழ்ந்துவந்த வீட்டுக்கு 200 மீற்றர் தூரத்தில் அமைந்த பொலிஸ் சவாடியிலிருந்தோர் கடமையை அலட்சியப் படுத்தியுள்ளதாக தென்படுகிறது எனவும் இதை சந்தேக நபர்கள் சாதகமக பயன்படுத்தி இந்த கொலைகளை செய்துள்ளனர் எனவும் பிரதேசவாசிகள் கூறியுள்ளனர்.

இந்த பொலிஸ்சாவடியில் கடமையிலிருந்த உப இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட 12 பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் மீது விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமென விசாரணையை மேற்கொண்டுவரும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் கூறினார்.

ஊடகங்கள் இந்த சம்பவம் பற்றி தகவல் பெறுவதை பொலிஸார் தடுத்துள்ளனர். முன்னர் இங்கு நடந்த கொலை சம்பவங்களை சந்தேக நபர்கள் பிடிப்படும்வரை ஊடகங்கள் முக்கியப்படுத்தி செய்திகள் வெளியிட்டு வந்தன.

வியாழக்கிழமை மு.ப.3.15 அளவில் எரிந்துக்கொண்டிருந்த அறைக்குள் புகுந்து பிரதேசமக்கள், கருகிய உடல்களை கண்டனர்.

இதேவேளை, நீதவான் விசாரணையின்பின் கருகிய உடலங்கள் இரத்தினபுரி வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# மன்னார் சம்பவம் தொடர்பில் முழு விசாரணைக்கு உத்தரவு



(மன்னார்)

மன்னார் சம்பவம் தொடர்பில் முழுமையான மற்றும் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி காவல்துறை மா அதிபர் என் கே இளங்கோனுக்கு நேற்று இரவு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு செல்ல குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அனுமதி அனுமதியளிக்கும் படியும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக, தராதரம் பார்க்காது விசாரணை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

அரசாங்க அமைச்சரினால் கடந்த 18 ஆம் திகதி மன்னார் நீதவானுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை, நீதிமன்ற கட்டடதொகுதியை தாக்கி சேதம் ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் நேற்று சகல சட்டதரணிகளும் தமது பணிகளில் இருந்து விலகியிருந்தனர்.

சட்டத்தரணிகளில் இந்த பணி நிறுத்தம் காரணமாக நேற்று நாட்டின் பல நீதிமன்றத்தின் சகல நடவடிக்கைகளும் தடைப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# தனியார் பேருந்து சங்கம்
# சட்டத்திற்கு உட்பட்டு செயற்பட வேண்டும்



யாழ்.மாவட்ட தனியார் பேருந்து சங்கங்களின் அங்கத்தவர்கள் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்திற்கு நேற்று முன்தினம் வருகை தந்த மேற்படி சங்கத்தினர் தாம் எதிர்நோக்கி வருகின்ற இடர்பாடுகள் தொடர்பாக எடுத்து விளக்கினர். பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்ட அமைச்சர் அவர்கள் சட்டத்திற்கு உட்பட்ட வகையிலும மக்களுக்கு சேவையாற்றும் நோக்கத்தை முன்னிறுத்திய தாகவும் அனைவரும் செயற்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் பிரச்சினைகள் தொடர்பில் துறைசார்ந்தவர்களுடன் கலந்துரையாடி விரைவில் தீர்வினைப் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் உறுதிமொழி வழங்கினார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், ஈபிடிபியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப் பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத் தலைவர் கெங்காதரன் ஆகியோர் உடனிருந்தனர்.



வேலணை பிரதேச சபையின் செயற்பாடுகள் பற்றியதான தெருக்கூத்து காவேரி கலாமன்றத்தின் ஆற்றுகையின் கீழ் கடந்த செவ்வாய்க்கிழமை வேலணை வங்களாவடிச் சந்தியில் இடம்பெற்றது. இதில் வேலணை பிரதேச சபைத் தவிசாளரும், ஈ.பி.டி.பி.யின் வேலணைப்பிரதேச அமைப்பாளருமான சி.சிவராசா, வேலணை பிரதேச சபை பொதுசன தொடர்பு உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். (85)

# க.பொ.த.உயர்தரப் பரீட்சை ஆகஸ்ட் 06 இல் ஆரம்பம்

க.பொ.த உயர்தரப்பரீட்சை ஆகஸ்ட் மாதம் 06 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்காகப் பரீட்சை நிலையங்களை நாடு முழுவதும் அமைக்கும் பணிகளிலும், இணைப்பு நிலையங்களை அமைக்கும் பணிகளிலும் பரீட்சைத்திணைக்கள அதிகாரிகள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இப்பரீட்சைக்கு நாடளாவிய ரீதியில் இரண்டு இலட்சத்து 77 ஆயிரத்து 97 பேர் தோற்றவுள்ளதாகப் பரீட்சை ஆணையாளர் நாயகம் டபிள்யூ.என். எம்.ஜே குமாரசிறி அறிவித்துள்ளார். அதில் பழைய பாடத்திட்டம், புதிய பாடத்திட்டம் என்ற அடிப்படையில் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (06)

# வலிகாமம் கிழக்கு விவசாயிகள் ஆடி வெங்காயச் செய்கையில் ஆர்வம்

(அச்சுவேலி)

வலிகாமம் கிழக்குப் பிரதேச விவசாயிகள் இடைப்போக ஆடிவெங்காயச் செய்கையில் மும்முரமாக ஈடுபட்டு வருவதனை பரவலாகக் காணக்கூடியதாகவுள்ளது. குறிப்பாக அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், சிறுப்பிட்டி, நீர்வேலி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயிகள் அண்மையில் குடாநாட்டின் பல பகுதிகளிலும் பெய்த மழயினைத் தெடர்ந்து நிலத்தினைப் பண்படுத்திக் கொள்வதிலும், ஏற்கனவே பண்படுத்தி தயார் நிலையில் வைத்திருந்த தோட்டங்களில் வெங்காய நடுகையில் ஈடுபட்டு வருவதனையும் காணமுடிகின்றது.

இதேவேளை கடந்த வருடங்களில் ஆடிப்போகத்தில் அதிகளவு விவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டு பெரும்போகத்திற்கான விதை வெங்காயத் தேவையினை பூர்த்தி செய்திருந்த போதிலும் இவ்வருடம் ஆடிவெங்காயச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் எண்ணிக்கை ஒப்பீட்டு ரீதியில் மிகவும் குவைாகவே உள்ளதாக விவசாயிகள் மத்தியில் பேசப்படுகின்றது. (03)

# விலங்கு விசர் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த பசார் பொதுப்பரிசோதகர் பிரிவுக் குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி (A.R.V) கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்பட திட்டமிடப் பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியினை ஏற்றிக் கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

24 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை, முற்பகல் 9.00 முற்பகல் 11.00 மணிவரை OLR தேவாலயம், 4 ஆம் குறுக்குத் தெரு, முற்பகல் 11.00 முற்பகல் 1.00 மணிவரை தாராக்குளம் குடியிருப்புப் பகுதி. 25 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 9.00 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை பேக்கரி லேன், ஆஸ்பத்திரி வீதி, முற்பகல் 11.00 மணியிலிருந்து பிற்பகல் 1.00 மணிவரை குருநாதர் சுவாமி கோயிலடி, பருத்தித் துறை வீதி. 26 ஆம் திகதி 9.00 மணி தொடக்கம் 11.00 மணி வரை கச்சேரி நல்லூர் வீதி, சித்திவிநாயகர் சந்தி. முற்பகல் 11.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணிவரை பாப்பையா கடைச் சந்தி, நாவலர் வீதி. 27 ஆம் திகதி முற்பகல் 9.00 மணியிலிருந்து 11.00 மணிவரை றக்கா வீதி, இளஞ்சிங்கம் சனசமூக நிலையம். முற்பகல் 11.00 மணி தொடக்கம் 1.00 மணிவரை மாட்டீன் வீதி, சப்பல் வீதிச் சந்தி.

# காப்பெற்கலவை வந்துசேரவில்லை; யாழ்.பருத்தித்துறை வீதி புனரமைப்பு தாமதம்

(அச்சுவேலி)

வீதி அமைக்கும் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் காப்பெற் கலவை யாழ்ப்பாணத்திற்கு வந்து சேர்வதில் ஏற்பட்டுள்ள கால தாமதத்தினால் யுாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதியின் மீள் நிர்மாணப்பணிகளில் காப்பெற் இடும் பணிகள் சுணக்கமடைந்து வருகின்றன.

மேற்படி வீதியின் கோப்பாய் முதல் ஆவரங்கால் வரையான பகுதிக்கு காப்பெற் இடும் பணிகள் நிறைவடைந்துள்ள போதிலும் மீதமாய் உள்ள சில கிலோமீற்றர் தூரத்திற்கு காப்பெற் இடுவதற்கு காப்பெற் கலவை இதுவரை வந்து சேரவில்லை. இதனால் இப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் பாரிய இயந்திரங்களும் நீண்ட நாட்களாகளாகவே வீதி ஓரங்களிலேயே காத்துக்கிடக்கின்றன.

எனவே பயணத் தாமதங்களை தவிர்த்துக் கொள்ளும் வகையில் இப்பணியினை விரைவுபடுத்த வேண்டும் எனப் பலரும் விரும்புகின்றனர். (03)

# நாகம்பாள் கும்பாபிஷேகத்தில் காட்சி தந்த நாகபாம்பு

சரவணை ஸ்ரீ செல்வக்கதிர்காம முருகன் தேவஸ்தான பொன்னி சாமி அம்மா ஆலயத்தில் ஜீனோத்தாரண மஹா கும்பாபிஷேக பெருவிழா கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

காலை 8.24 மணி முதல் 10.04 வரையுள்ள சிங்க லக்கின சுப மூகூர்த்தத்தில் முருகப்பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. யாகசாலையில் கிரியா பூர்வமாக கடந்த 03 தினங்களும் பூசிக்கப்பட்ட திருக்கும்பங்கள் பவனி வந்து தூபிகளின் அபிஷேகம், பிரதான மூர்த்திகளின் அபிஷேகம் ஆரம்பித்த பொழுது மேகம் கறுத்து இடிமுழக்கத்துடன் கூடிய மழை சோ வெனப் பொழிந்தது. அடியவர்களின் அரோகரா கோஷத்துடன் நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து பரிவார மூர்த்திகளுக்கும் நடைபெற்றது.

ஆலய வீதியில் அமைக்கப்பட்ட பரிவாரக் கோயில்களில் ஒன்றாக விளங்கும் நாகம்பாளின் மகா கும்பாபிஷேகம் நடைபெற்ற பொழுது இங்கு நாகம் காட்சி கொடுத்து அனைவரையும் மெய் சிலிர்க்க வைத்த ஒரு நிகழ்வு அமைந்தது.

பொன்னிசாமி அம்மா என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட ஆலயத்தில் அவரின் வழியில் சீதைச்சாமி அம்மா அவர்கள் 47 ஆண்டுகள் பூசைப்பணியாற்றியவர்களாக அவர்களது சமாதியும் ஆலய வீதியில் அமைந்து காணப்படுகின்றது. பக்கதிப்பரவசமாக நடைபெற்ற கும்பாபிஷேக விழாவில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள், வர்ணனைக்கலாநிதி மதுரகவி காரை எம்.பி அருளானந்தன், சைவப்புலவர் கந்த.சத்திய தாசன், வேலணைப்பிரதேச சபைத்தலைவரும், ஈ.பி.டி.பி.யின் வேலணைப் பிரதேச அமைப்பாளருமான சி.சிவராசா, யாழ்.மாவட்ட பொலிஸ் அதிகாரி, ஊர்காவற்றுறை பிரதம பொலிஸ் அதிகாரி இந்து கலாசார திணைகளை யாழ்.பிராந்திய உத்தியோகத்தர் உதயபாலன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பல ஆண்டுகளின் பின் சரவணை வாழ் மக்களின் குலதெய்வமாக விளங்கும் செல்வக்கதிர்காம முருகனின் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

# முரசின் இன்றைய பலன்

(22.07.2012 - ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் ஆடி மாதம் 07 ஆம் திகதி. திருதியை பிற்பகல் 9.29 வரை. நட்சத்திரம் மகம். மரணயோகம். பிற்பகல் 12.54 வரை.
இராகுகாலம் 4.32 - 6.02 வரை. சுபநேரம் 9.02 - 10.32 வரை.
எமகண்டம் 12.02 - 1.32 வரை. குளிகன் காலம் 3.02 - 4.32 வரை.
நாக சதுர்த்தி விரதம் .

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | திறமை வெளிப்படல், நெருக்கமானவர்களை அனுசரிக்கவும், வீண்பழி கேட்டல். |
| ரிஷபம் | உற்சாகம், சுபகாரியம் நிறைவேறும், உறவினர் இல்லம்தேடி வருவார், வேலைப்பளு குறையும். |
| மிதுனம் | சாதாரணமான நாள், தகுதிக்கேற்ற வேலை, பெரிய மனிதர் ஆதரவு, அவப்பெயர் நீங்கும். |
| கடகம் | நன்மைகள், புத்திரரால் கவலை, உறவினர்களை அனுசரிக்கவும், எதையும் சமாளிப்பீர். |
| சிம்மம் | உடலில்சோர்வு, தெய்வ தரிசன பயணம், மேலதிகாரிகள் பாராட்டுவர், வியாபாரத்தில் போட்டி. |
| கன்னி | போட்டிகள், பணவரவில் நெருக்கடி நிலை, புதிய முதலீடுகள், பெற்றோருடன் மனக்கசப்பு. |
| துலாம் | கடன் தீரும், சேமிப்பில் கவனம் செலுத்தவும், பிள்ளைகள் மீது கண்காணிப்பு, ஒற்றுமை. |
| விருச்சிகம் | கடன் தொல்லைகள், புத்திரரால் பிரச்சினை, திடீர் முடிவு வேண்டாம், கவனக்குறைவு. |
| தனுசு | மகிழ்ச்சி, குடும்பத்தில் நற்பெயர், உடல் ஆரோக்கியம், கடன் வசூலாகும். |
| மகரம் | சந்திராட்டமம் உஷார், பூர்வீக சொத்தில் வில்லங்கம், கடவுள் பக்தி, கடன் வசூலாகும். |
| கும்பம் | சந்திப்புக்கள், இலட்சுமி கடாட்சம், குடும்ப சௌக்கியம், இரட்டிப்புச் செலவுகள். |
| மீனம் | எதிலும் வெற்றி, வாக்குப்பிலிதம், திட்டமிட்டு செயற்ப்படவும், எதிரிகள் நண்பராவார். |

# தென்னாபிரிக்க அணிக்கு செமன்யா தலைமை

(ஜோகனஸ்பேர்க்)

லண்டன் ஒலிம்பிக் போட்டி தொடக்க விழாவில் தென்னாபிரிக்க அணிக்கு தலைமை தாங்கி 800 மீற்றர் ஓட்ட முன்னாள் உலக சம்பியன் கேஸ்டர் செமன்யா தேசிய கொடியை ஏந்தி செல்வார் என்று அந்த நாட்டு ஒலிம்பிக் சங்கம் அறிவித்துள்ளது.

21 வயதான செமன்யா 2009ஆம் ஆண்டில் பேர்லினில் நடந்த உலக போட்டியில் 800 மீற்றர் ஓட்டத்தில் சம்பியன் பட்டம் வென்றார். அப்போது அவர் மீது பாலின சர்ச்சை எழுந்தது. அவர் ஆண் என்று விமர்சனம் எழுந்தது. ஆனால் பல கட்ட மருத்துவ பரிசோதனைக்கு பின்னர் அவர் பெண் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. இந்த சர்ச்சையால் செமன்யா 11 மாதங்கள் போட்டிகளில் பங்கேற்க முடியாமல் போனது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கௌரவம் எனக்குக் கிடைத்தமை பெருமகிழ்ச்சி என செமன்யா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# லண்டன் ஒலிம்பிக் பதக்க சுவாரசியம்

(லண்டன்)

லண்டன் ஒலிம்பிக் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு வழங்கப்படவுள்ள பதக்கங்களின் வடிவமைப்பு குறித்து சில சுவாரஸ்சியமான தகவல்கள். இதே போல லண்டன் ஒலிம்பிக் போட்டியில் வழங்கப்படவுள்ள பதக்கத்தை கைப்பற்ற உலகம் முழுவதும் இருந்து வீரர்கள், வீராங்கனைகள் லண்டன் நகரில் குவிந்து வருகின்றனர். ஆனால் ஒலிம்பிக் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு வழங்கப்பட உள்ள பதக்கங்கள் எப்படி வடி-வமைக் கப்படுகிறது என்பது குறித்து பலருக்கும் தெரியாது.

இது குறித்து சில சுவாரஸ்யமான தகவல்கள்:

# ஒவ்வொரு ஒலிம்பிக் பதக்கமும் உருவாக்கும் போது, சுமார் 1,300 பரனைட் வெப்பநிலைக்கு உட்படுத்தப்பட் டுள்ளது. அதன்பிறகு 2 மில்லியன் எடையுடன் கூடிய அச்சு வைத்து 15 நிமிடங்கள் அழுத்தம் அளிக்கப்படுகிறது.

#2012 லண்டன் ஒலிம்பிக் போட்டியின் வெற்றியாளர்களுக்கான பதக்கம் தயாரிப்பில் மொத்தம் 800 பேர் ஈடுபட்டனர்.

# இதுவரை வழங்கப்பட்டுள்ள ஒலிம்பிக் பதக்கங்ளிலேயே, 2012 லண்டன் ஒலிம்பிக்கில் வழங்கப்பட உள்ள பதக்கங்களின் எடை சற்று அதிகமாக உள்ளது.

# 2012 லண்டன் ஒலிம்பிக் போட்டியின் பதக்கங்களை வடிவமைத்தவர் பிரபல இங்கிலாந்து கலைஞர் டேவிட் வாக்கின்ஸ்.

# ஒவ்வொரு பதக்கத்தின் உருவாக்கத் திற்கும் சுமார் 10 மணி நேரம் தேவை ப்படுகிறது. இதற்காக கொலோசஸ் என்ற பிரத்யேக அழுத்த முறை பின் பற்றப்படுகிறது.

# ஒலிம்பிக் பதக்கத்தின் முன் பக்கத்தில் சிறகுகளுடன் இருக்கும் நபரின் உருவம் கிரேக்க விளையாட்டு கடவுளான நைக்கை குறிக்கிறது. இவர் பாத்தினானில் இருந்து இங்கிலாந்து நகருக்குள் நுழைவது போல வடிவமைக்கப்பட்டுள்ளது.



# ஒவ்வொரு ஒலிம்பிக் தங்கப் பதக்கத்திலும் 1.34 சதவீதம் மட்டுமே தக்கம் இருக்கும். மீதமுள்ளபகுதி தாமிரத்தால்ஆனது. (ஒவ்வொரு தக்கப் பதக்கத்திலும் 6 கிராம் அளவு தங்கம் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்பது சர்வதேச ஒலிம்பிக் குழுவின் உத்தரவு)

# ஒவ்வொரு ஒலிம்பிக் வெள்ளிப் பதக்கமும் 92.5 சதவீதம் வெள்ளியினால் செய்யப்பட்டது.

# லண்டன் ஒலிம்பிக் போட்டிக்காக 4,700 பதக்கங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

# பதக்கம் தயாரிப்பிற்கு பயன்படுத்தப்பட்ட உலோகத்தாது சர்வதேச தரத்திலானது. இதற்காக சால்ட் லேக் சிட்டி, உத் மற்றும் மங்கோலிய பகுதிகளில் உள்ள சுரங்கங்களில் இருந்து உலோகத் தாது பெறப்பட்டுள்ளது.

# லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கான பதக்கங்கள், இங்கிலாந்தில் உள்ள வால்ஸ் பகுதியை அடுத்த போன்டைக் குலன் என்ற கிராமத்தில் உள்ள த ராயல்மின்ட் என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது. லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கான பதக்கங்கள் இவ்வளவு சிறப்பு அம்சங்கள் கொண்டவையாகும்.

# ஊக்க மருந்தால் அதிரடி நீக்கம்

(பாரீஸ்)

பிரான்ஸ் வீரர் நோர்டின் ஜெஸ்ஸர், ஸ்பெயினின் ஏஞ்ஜெல் முல்லெரா ஆகியோர் ஊக்கமருந்து உட்கொண்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ஒலிம்பிக்கில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் லண்டன் ஒலிம்பிக் போட்டியில் 3000 மீ. ஸ்டீபிள்சேஸ் பிரிவில் பங்கேற்கவிருந்தனர். நோர்டின் ஜெஸ்ஸரின் பி மாதிரி சோதனையில் அவர் ஊக்கமருந்து உட்கொண்டது உறுதி செய்யப்பட்டால் அவர் ஆயுள் தடை பெறுவார்.

ஏற்கனவே 2006ஆம் ஆண்டு ஃபின்லாந்தின் ஹெல்சிங்கில் நடைபெற்ற ஐரோப்பிய சம்பியன்ஷிப் போட்டியின்போது ஊக்கமருந்து உட்கொண்டதாக ஜெஸ்ஸர் சிக்கினார். இதனால் அவருக்கு 2 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவர்கள் இருவருடைய பி மாதிரி சோதனை முடிவுகள் அடுத்த வாரம் வெளியா-கலாம் என்று தெரிகிறது.

# நிரூபிக்க வாய்ப்பு வேண்டும்

(லாகூர்)

இளைய வேகப்பந்து வீச்சாளர்களுக்கு தங்களை நிரூபிப்பதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் பயிற்றுவிப்பாளரும், தற்போதைய நேர்முக வர்ணனையாளருமான வக்கார் யுனிஸ் தெரிவித்துள்ளார். பாகிஸ்தானில் போதுமானளவு வேகப்பந்து வீச்சுத் திறமை காணப்படுகிறது. தங்களை நிரூபிப்பதற்கான வாய்ப்புக்கள் அவர்களுக்கு வழங்கப்படாமல் போகக்கூடாது. அத்தோடு எல்லா இளைய வீரர்களுக்கும் போதிய வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.



இலங்கை போன்ற பலமான துடுப்பாட்ட வரிசைக்கெதிராக இளைய வேகப்பந்து வீச்சாளரான ஜுனைட் கான் சிறப்பாகப் பந்துவீசியமை மிகுந்த சிறப்பான ஒன்று. உமர் குல், மொஹமட் சமி போன்ற அனுபவ வேகப்பந்து வீச்சாளர்கள் இலங்கையில் சிறப்பாகச் செயற்படாத போதிலும் ஜுனைட்கான் சிறப்பாகப் பந்துவீசியமைக்கான காரணம் அவர் சரியான இடங்களில் பந்து வீசியமையாகும். ஜுனைட் கான் மிகச்சிறந்த திறமையுள்ள வீரர். அவர் சரியாகப் பராமரிக்கப்பட்டால் மிகச்சிறந்த வீரராக வலம் வருவார். ஏராளமான இளைய வேகப்பந்து வீச்சாளர்கள் வாய்ப்புக்காகக் காத்துக் கொண்டிருக்கும் போது சமி போன்றவர்களுக்குத் தொடர்ச்சியான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வருவது கவலை அளிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நிதான ஆட்டம்

(ஓவல்)

இங்கிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா நிதா-னமாக ஆடி வருகின்றது.



இங்கிலாந்து, தென்னாபிரிக்க அணிகளுக் கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 385 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குக் 115, ட்ரொட் 71, மட் பிரியர் 60 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் எம். மோர்கல் நான்கு, ஸ்டொயின், ஜக் கலிஸ் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிவரும் தென்னாபிரிக்க அணி போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, ஒரு விக்கெட்டை இழந்து 86 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் அணித் தலைவர் ஸ்மித் 37 ஓட்டங்களுடனும், அம்லா 47 ஓட்டங்களுடனும் களத்திலிருந்தனர். பந்து வீச்சில் அண்டர்சன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். இதேவேளை, 100ஆவது டெஸ்ட் போட்டியில் ஆடும் ஸ்மித் கருத்துத் தெரிவிக்கையில் இப்போட்டியில் ஆட்டமிழக்காமல் உள்ளமை மகிழ்ச்சி. இப்போட்டியில் சாதிக்க முற்படுவோன் என்றார்.

# தொடரை வென்றது பங்களாதேஷ்



அயர்லாந்து அணிக்கெதிரான இரண்டாவது ருவென்ரி -20 கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் அணி ஓர் ஓட்டத்தால் வெற்றிபெற்றுள்ளது. இதன் மூலம் ருவென்ரி -20 தொடரை பங்களாதேஷ் அணி வசப்படுத்திக் கொண்டது.

பெல்பாஸ்ட்டில் இடம்பெற்ற இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் பங்களாதேஷ் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நசீர் ஹொசைன் 33 பந்துகளில் 50 ஓட்டங்களையும், மொஹமட் அஷ்ரபுல் 46 பந்துகளில் 38 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மக் சொரென்சென் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

147 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 20 ஓவர்களில் 145 ஓட்டங்களை மாத்திரம் பெற்று ஓர் ஓட்டத்தால் தோல்வியடைந்தது.

இதில் எட் ஜொய்ஸ் 44 பந்துகளில் 41 ஓட்டங்களையும், கரி வில்சன் 27 பந்துகளில் 37 ஓட்டங்களையும், போல் ஸ்ரேர்லிங் 20 பந்துகளில் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் எலியஸ் சணி 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், மஹமதுல்லா 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். போட்டியின் நாயகனாக நசீர் ஹொசைன் தெரிவானார்.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரை பங்களாதேஷ் அணி 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

# முன்பள்ளி விளையாட்டு

கொக்குவில் மேற்கு சனசமூக நிலைய சுப்பிரமணியம் மாலதி முன்பள்ளி மழலைகளின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று பின்றபல் 2.00 மணிக்கு சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. டாக்டர் லயன் வி. வேதநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப. வசந்தகுமார் பிரதமவிருந்தினராகவும், சட்டத் தரணி செல்வி ஞானலோஜினி சிவஞானம், நல்லூர் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளரும், நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான அ. இரவீந்திரதாசன், நல்லூர் கோட்டக் கல்வி முன்பள்ளி இணைப்பாளர் திருமதி மலாதிதேவி விவேகானந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

∴

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினரும் குமரன் விளையாட்டுக் கழகத்தினரும் இணைந்து நடத்தும் குட்டிசுட்டி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பல் 2.00 மணிக்கு நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

# போதைப்பொருள் பயன்படுத்தியமை சோதனையில் ஊர்ஜிதம்

மும்பையில் விடுதி விருந்தில் கலந்து கொண்ட இந்திய வீரர் ராகுல் ஷர்மா, தென்னாப்பிரிக்க வீரர் பார்னல் இருவரும் போதைப்பொருள் பயன்படுத்தியிருப்பது சோதனையில் ஊர்ஜிதம் ஆகியுள்ளது. மும்பையின் ஜுகு பகுதியில் உள்ள நட்சத்திர விடுதியில் கடந்த மே 20ஆம் திகதி பொலிஸார் அதிரடியாக சோதனை நடத்தினர். விடுதியில் நடந்த விருந்தில் கோகைன் உள்ளிட்ட போதை பொருட்கள் சப்ளை செய்யப்படுவதாக கிடைத்த தகவலின் பேரில் பொலிஸார் இந்த வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது அங்கு போதை பொருளை உட்கொண்ட பல இளைஞர்களும், அரைகுறை உடையுடன் இளம்பெண்களும் ஆட்டம் போட்டு கொண்டிருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். இதையடுத்து கூத்தும் கும்மாளமுமாக இருந்த 90 பேரை பொலிஸார் கைது செய்தனர். இவர்களில் ஐ.பி.எல். கிரிக்கெட்டில் புனே வாரியர்ஸ் அணிக்காக விளையாடிய ராகுல் ஷர்மா, வெய்ன் பார்னல் ஆகியோரும் உண்டு. பின்னர் அவர்களிடம் இருந்து சிறுநீர், ரத்தம் மாதிரிகள் எடுக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். அவர்களிடம் இருந்து எடுக்கப்பட்ட ரத்தம், சிறுநீர் மாதிரிகள் மருத்துவ பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன. இதற்கிடையே, தாங்கள் போதை பொருள் எதுவும் பயன்படுத்தவில்லை, அப்பாவி என்று கிரிக்கெட் வீரர்கள் இருவரும் மறுத்தனர். தான் போதை மருந்து பயன்படுத்தியது நிரூபிக்கப்பட்டால் கிரிக்கெட்டை விட்டே விலக தயார் என்று ராகுல் ஷர்மா சவால் விடுத்தார். பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட மொத்தமுள்ள 90 பேரில் முதற்கட்டமாக 46 பேரின் பரிசோதனை முடிவின் அறிக்கைகள் கடந்த ஜூன் 22ஆம் திகதி வெளியிடப்பட்டன. இதில் 44 பேர் போதைப் பொருள் பயன்படுத்தி இருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டு இருந்தது. 25 வயதான ராகுல் ஷர்மா வளர்ந்து வரும் இந்திய சுழற்பந்து வீச்சாளர் ஆவார். இந்திய அணிக்காக 3 ஒரு நாள் போட்டியும், இரண்டு 20 ஓவர் போட்டியிலும் விளையாடி இருக்கிறார். இன்று தொடங்க உள்ள இலங்கை தொடருக்கான இந்திய அணியிலும் இடம் பிடித்துள்ளார். போதைப் பொருள் பிரச்சினையில் சிக்கி இருப்பதால் அவர் அணியில் இருந்து விடுவிக்கப்படுவார் என்று தெரிகிறது. ராகுல் ஷர்மா மீது அவசரப்பட்டு நடவடிக்கை எடுக்கமாட்டோம். பரிசோதனை அறிக்கையை முழுமையாக ஆராய்ந்த பிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்திய கிரிக்கெட் சபை தலைவர் என்.சீனிவாசன் நேற்று முன்தினம் தெரிவித்தார். இந்திய அணியின் மேலாளரும், கிரிக்கெட் சபை நிர்வாகிகளுடன் தொடர்பில் உள்ளார். 22 வயதான வெய்ன் பார்னல் தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஆவார். இந்த விவகாரம் கிரிக்கெட் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



# சிறந்த பயிற்றுநர் கிடைத்தமையே தேசியத்தில் சாதிக்க முடிந்தது



## யூனியன் கல்லூரியின் அணித் தலைவி வக்சலா சிவலிங்கம்

(யாழ்ப்பாணம்)

வலைப்பந்தாட்டத்தில் யூனியன் கல்லூரியில் சிறந்த வீராங்கனைகள் உள்ளனர். அதன் மூலமே நாம் மாகாண ரீதியிலும், தேசிய ரீதியிலும் சாதிக்க முடிகின்றது என தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் அணித் தலைவி செல்வி வக்சலா சிவலிங்கம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

யூனியன் கல்லூரியில் ஆறு வருடங்களாக பாடசாலை அணியில் விளையாடினேன். ஒவ்வொரு வருடமும் எமது அணி தேசிய மட்டப் போட்டி வரை முன்னேறியிருந்தது. மாகாண மட்டத்தில் முதலிடத்தைப் பெற்று எமது கல்லூரிக்கு பெருமை சேரத்தோம்.

2005இல் 19 வயதுப் பிரிவில் நான் விளையாடியிருந்தேன். அந்த வருடம் அகில இலங்கை ரீதியில் எமது அணி மூன்றாமிடத்தைப் பெற்றது. எமக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. 2006இல் அணித் தலைவியாக இருந்தேன். பின் திறந்த போட்டிகளிலும் எமது கல்லூரிக்காக விளையாடி வருகின்றேன்.

2010இல் மலேசியாவில் நடைபெற்ற போட்டிகளில் பங்குபற்றியிருந்தது எனக்கு மனமகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இவ்வருடம் நடைபெற்ற தேசிய இளைஞர் சேவையின் தேசிய மட்டப் போட்டியில் எமது ஆசிரியரும், பயிற்றுநருமான திருமதி ஜெயந்தி ஜெயதரன் அவர்கள் விளையாட்டின் ஆர்வம் காரண-மாகவும், கல்லூரி பயிற்றுநர் காரணமாகவும் என்னை இவ் அணியின் தலைவியாக இணைத்துக் கொண்டமை நான் செய்த பாக்கியமே.

இதற்கு காரணமாக எமக்கு பல வழிகளிலும் உதவிய அதிபர், உப அதிபர், பிரதி அதிபர், பெற்றோர், பழைய மாணவர்கள் அனை-வரினதும் ஒத்துழைப்பு இவ்வெற்றிகளுக்கு உதவி புரிந்தது.

எமது ஆசிரியரும், அணி பயிற்றுநருமான திருமதி ஜெயந்தி ஜெயதரன் முழுமனதுடன் எமது அணியைப் பயிற்றுவித்து எமது திறமைகளை வெளிப்படுத்தி இவ் வெற்றிக்கு வித்திட்டுள்ளார். எமது கல்லூரிக்கு அவர் பயிற்றுநராக கிடைத்தமையையிட்டு நாம் பெரு மகிழ்வடைகின்றோம். அவர் போன்ற பயிற்றுநர்கள் மூலமே நாம் இந்த நிலையை அடைய முக்கிய காரணம்.

கடந்த கால அனுபவங்கள் வாயிலாக யாழ். மாவட்டத்திலும் சரி, தேசிய மட்டத்திலும் சரி நடுவர்களின் தவறான தீர்ப்பினாலும், பழிவாங்கல்களினாலும் எமது அணிகள் மட்டுமல்ல, வேறு பாடசாலை அணிகளும் பாதிக்கப்பட்டுவது மனவேதனைக்குரிய விடயமே.

அது மட்டுமல்ல, இவ்வாறான நடுவர்கள் சிலரது தீர்ப்பினால் பலப்பரீட்சையில் ஈடுபட்டு கடுமையான கஷ்டமான நிலையிலேயே நாம் வெற்றிகளை பெறவேண்டிய துர்ப்பாக்கிய நிலைகளிலும் சிலசமயங்களில் சந்திக்க வேண்டியுள்ளமை கவலைக்கிடமான ஒரு விடயம்.

மேலும் இவ்வாறான வெற்றிகளைப் பெற்றுக் கொண்டே இருப்போம் என்ற நம்பிக்கையுடன் எமது பயிற்சியைத் தொடர்ந்து மேற்கொண்டு சர்வதேசத்திலும் கால்பதிப்போம் என்ற கனவுடன் உழைத்து வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (93)




## வடமாகாண மட்ட கரப்பந்து இன்று கைதடியில் ஆரம்பம்

(கைதடி)

கைதடி வளர்மதி விளையாட்டுக்கழகத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான போட்டித் தொடர் ஒன்றை வளர்மதி விளையாட்டுக்கழகம் தீர்மானித்துள்ளது.

இப்போட்டித் தொடர் இன்று முதல் கைதடி வளர்மதி விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. இதில் 20இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குகொள்கின்றன. மின்னொளியில் இடம்பெற்றும் இப்போட்டித் தொடர் ஒரு நாளைக்கு இரண்டு போட்டிகள் விதம் இடம்பெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இப்போட்டித் தொடரில் கிண்ணத்தை வெல்லும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களும் வழங்கப்படும் எனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (118)

## விக்டோரியாக் கல்லூரி அபாரமான வெற்றி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணி 132 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஆட்டம் ஒன்று கடந்த 17ஆம் திகதி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணி 42. 5 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரி. ஜங்கரன் 50, கே. பிரசாந் 40 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜனார்த்தனன் ஏழு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 175 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி ஜங்கரனின் பந்து வீச்சை எதிர்கொள்ளத் திணறியதுடன் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் விக்டோரியாக் கல்லூரி அணி 14.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 42 ஓட்டங்களை மட்டுமே பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் எந்தவொரு வீரரும் நிலைத்து நின்று ஆடவில்லை. பந்து வீச்சில் ரி. ஜங்கரன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (12)

## வென்றது ஹாட்லிக் கல்லூரி

(பருத்தித்துறை)

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி 19 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி 35 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பவன் 26, நிசாந்தன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மைத்திரேயன் மூன்று, ஸ்ரிபன்ராஜ், சிந்துஜன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 125 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி 32.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் பிரதீஸ் 27, அருள்பிரியன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஜித்குமார் ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (17)

## சென். ஜோன்ஸ் கல்லூரி வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரி அணிக்கெதிரான சிநேகபூர்வ ஒருநாள் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மூன்று விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்ற இப்போட்டி யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென். ஜோன்ஸ் கல்லூரி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய யாழ். இந்துக் கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 268 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மதுசனன் 82 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுவநீதன் மூன்று, லோகதீஸ்வர். இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 269 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 47.3 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கௌரங்கன் 72, சுவநீதன் 40 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதேவேளை, 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் இப்பிரிவு அணிகள் சிநேகபூர்வமான போட்டிகளில் விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இரண்டாவது சுற்று ஆட்டங்கள் விரைவில் இடம்பெறவுள்ளதாகப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (எஸ்.பி.)



**வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் இடம்பெற்ற மாகாண மட்ட கராத்தேப் போட்டியில் வெற்றியீட்டி தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்ற கிளிநொச்சி மகாவித்தியாலய வீரர்களுடன் பொறுப்பாசிரியர் சிவலிங்கம் மற்றும் கராத்தே பயிற்றுநர் சென்சே விஜயராஜ் ஆகியோரைக் காணலாம். (எஸ்.பி.)**



# மீளக்குடியமர்ந்த மக்களின் இன்றைய நிலையும் எதிர்காலமும்

- சாலையூரான் -





வடக்கே போருக்குப் பின்னர், மீளக்குடியமர்ந்த மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கென அரசு பெருந்தொகை நிதியினை செலவிட்டு வருவது யாவரும் அறிந்த விடயம். நீண்ட போருக்குப் பின்னர் அழிவுகளை எதிர்கொண்ட கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மீளவும் ஏற்படுத்திக் கொடுக்கும் பணிகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுயதொழில் முன்னேற்றத்துக்கென விவசாயம், கடற்றொழில், கால்நடை வளர்ப்பு மற்றும் கைத்தொழில் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக வெளிநாடுகளிலிருந்தும், சர்வதேச மற்றும் உள்நாட்டு மனிதாபிமானப் பணி நிறுவனங்கள் ஊடாகவும் பெருமளவு நிதி பெறப்பட்டு இந்த இடப்பெயர்வுக்குள்ளான மக்களின் மேம்பாட்டுக்காக அரசு செலவிட்டு வருகிறது.

யுத்தத்துக்கு பின்னரான இந்த மூன்றாண்டு காலத்தில் வடக்கின் அபிவிருத்திக்காக பெருந்தொகை நிதியினை முன்னர் எப்போதுமில்லாத வாறு அரசு செலவிட்டு வருகின்றது.

இந்த நிதிஒதுக்கீடுகளும் அபிவிருத்திச் செயற்பாடுகளும் மீளக்குடியமர்ந்த மக்களின் மேம்பாட்டில் எத்தகைய தாக்கத்தை செலுத்தியிருக்கின்றன என்பது கவனத்திற்குரிய விடயமாகும்.

முதலாவது, கட்டம் கட்டமாகவே இந்த மீளக்குடியமர்வு நடைபெற்றிருக்கிறது. இதன்போது கூட இருந்த உறவுகள் பலவும் இழக்கப்பட்டிருக்கின்றன. அவை பற்றிய ஏக்கங்களுடன் தமக்கான வாழ்க்கைச் சாதனங்கள் அனைத்தையும் இழந்த நிலையில் தமது வாழ்க்கையை ஆரம்பிக்க இம்மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள்.

இரண்டாவதாக, இடம்பெயர்வுக்குள்ளான அனைவருமே ஏறத்தாழ ஒரே நிலையிலேயே இப்போது குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் அனைத்துக் குடும்பங்களுக்காக குறிப்பிட்ட ஒரு உதவித்திட்டத்தை ஏககாலத்தில் நடைமுறைப்படுத்த முடியாத நிலை எதிர்பார்க்கக் கூடியதே எனினும் பயனாளிகளை முன்னுரிமைப்படுத்துவது எவ்வாறு என்பது தீராப்பிரச்சினையாகவே அங்கு பணியாற்றும் அதிகாரிகளுக்கும் உள்ளூரமைப்புக்களுக்கும் இருந்து வருகிறது.

சுயதொழில் ஊக்குவிப்புக்காக பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன. உதாரணமாக கால்நடைவளர்ப்பு வீட்டுத்தோட்டச் செய்கை கோழிவளர்ப்பு என்பவற்றுக்காக பல சமூகப்பணி நிறுவனங்கள் நிதிக் கொடைகளை நேரடி யாகவும், அரச நிறுவனங்கள் ஊடாகவும் வழங்கியிருந்த போதும் பரந்த சந்தை வாய்ப்புக்கள் இல்லாமையும் சடுதியான எரிபொருள் விலையேற்றமும், இம்மக்களின் முயற்சிகளில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருக்கின்றன.

கணிசமான வீட்டுத் திட்டங்களுக்கு மூன்றேகால் ரூபா லட்சம் உதவி நிதியாக வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், இவ்வீடுகளை நிர்மாணித்து முடிக்க ஐந்து இலட்சம் ரூபாவுக்கு மேல் ஒரு பயனாளி செலவிட நேரிட்டிருக்கிறது. மேலதிகமாகத் தேவைப்பட்ட ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பணம் சுயதொழிலுக்காக வங்கிகளிடமிருந்து பெற்ற கடன் நிதியைக் கொண்டும் தம்மிடமிருந்த நகைகளை விற்றும் அடகுவைத்தும் பெறப்பட்டி ருக்கிறது.

தமது தொழில் முயற்சிகளை முன்னெடுக்கவென வைத்திருந்த சிறுதொகை சேமிப்புக்களையும் வீடு நிர்மாணத்திற்காக செலவழித்த பின்னர், நாளாந்த வாழ்க்கையை கொண்டு செல்வதற்கான நிதியை எங்கும் பெற முடியாது இந்த மக்கள் அல்லற்படுவது குறிப் பிடப்பட வேண்டிய ஒரு விடயம்.

மீளக்குடியமர்ந்த பகுதிகளில் பிரதேச சபைகளினூடான அபிவிருத்திச் செயற்பாடுகள் குறிப்பிடத்தக் கவையாக அமைய வில்லை. வடக்கின் வசந்தம் மற்றும் பொரு ளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்டங்கள் மூலம், கிராமங்கள் தோறும் பொது நோக்கு மண்டபங்கள் மீள்நிர்மாணத்துடன், உள்ளூர் வீதிகள் பலவும் பெருந்தொகை நிதியில் செப்பனிடப்பட்டிருக்கின்றன.

சுயதொழில் முயற்சிகளுக்கென ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அரச வங்கிகளிடமிருந்து கடனைப் பெற்றிருக்கின்றன. இம் மக்களுக்கு உதவும் நோக்கில் இக் கடன் வழங்கும் திட்டத்தை அரசு நடைமுறைப் படுத்தியிருந்தாலும், பெற்ற கடனைக் கொண்டு நிரந்தரமான தொழில் முயற்சிகளை ஏற்படுத்தாமையின் விளைவாக, வங்கிக்கடனை மீளச் செலுத்துவதில் இம் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதை தேவையற்ற ஒரு துன்பமாகவே நோக்க வேண்டியுள்ளது.

போருக்குப் பிறகு, வன்னி பெருநிலப்பரப்பை பொறுத்தவரை, சேனைப்பயிர்ச்செய்கை முற்றாக கைவிடப்பட்டிருக்கிறது என்றே கூறவேண்டும். முன்பு இச் சேனைப் பயிர்ச்செய்கையைக் கொண்டு விவசாயிகள் தமக்கான தானிய உணவுத் தேவையை நிறைவு செய்யக் கூடியதாக இருந்தது. இப்போது அனைத்து தானியங்களும் சராசரி விலை கிலோ ஒன்றுக்கு 250 ரூபாவுக்கு மேலாக உயர்ந்திருக்கிறது.

இடப்பெயர்வுக்கு முன்னர் வன்னியின் கால்நடைவளர்ப்பு சீரான விருத்தியைக் கொண்டிருந்த போதும், பாலுணவு உற்பத்திக்கான பரந்த சந்தை வாய்ப்புக்கள் பண்ணையாளருக்கு கிடைக்கவில்லை. இப்போது, வெளிமாவட்டங்களுக்கான போக்குவரத்து மற்றும் தொலைத் தொடர்பாடல் என்பன சாத்தியமாகி இருக்கின்ற போதும், சிறந்த கறவையினங்களை தேர்வு செய்து பாலுற்பத்தியை மேற்கொள்வதற்கான அரசின் உதவித் திட்டங்கள் பண்ணையாளர்களுக்கு இன்னும் முழுமையாக கிடைக்காதிருப்பது குறிப்பிடத்தக்கது.

விவசாய உற்பத்திகளுக்கு மிகக் குறைந்த விலை ஆரம்பத்தில் ஒரு சவாலாக இருந்த போதும், மரக்கறி விலைகள் அதிகரித்துள்ள தற்போதைய சூழலிலும், உற்பத்திகளை பரந்தளவில் மேற்கொள்வதில் விவசாயிகள் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளனர். அதிகரித்த எரிபொருள் விலைகள், விவசாய இடைத்தர உபகரணங்களின் விலைகள் பல மடங்காக உயர்ந்திருப்பது, அதிகரித்த போக்குவரத்துச் செலவினங்கள் என்பன வன்னியின் விவசாய முயற்சிகளில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியிருக்கின்றன.

மொத்தத்தில், தமது அசைவுடைய உற்பத்திச் சாதனங்கள் அனைத்தையும் இடப்பெயர்வின் போது இழந்துவிட்ட நிலையில், தமக்கான வாழ்வாதாரத்தை சீராக நிலை நிறுத்துவது பெரும் சவாலாக உள்ளது.

மீளக்குடியமர்ந்த மக்களின் வாழ்வை மீளக் கட்டியெழுப்புதல் என்ற விடயத்தில், போருக்குப் பிந்திய அபிவிருத்திச் செயற்பாடுகள் அனைத்தும் முறையான மீளாய்வுக்குட்படுத்தப்படுவதுடன், துறைசார்ந்த அரசின் நேரடிக் கண்காணிப்புடனும், கிராமங்களின் உள்ளூர் அமைப்புக்களது ஒத்துழைப்புடனும் முழுமையான மக்கள் பங்களிப்பு முறைமையொன்று இனங் காணப்படாத வரை மீளக்குடியமர்ந்த மக்களின் வாழ்வில் எதிர்பார்க்கும் மாற்றங்களை கொண்டு வருவது இயலாத காரியமாகும்.

# கடன்பட்டார் நெஞ்சம்



முதன்முதலாக எப்போது கடன் வாங்கினேன் என்று யோசித்தால், எட்டாவது படிக்கும்போதே வாங்கியிருக்கிறேன். எங்கள் பள்ளியில் மைசூர், பெங்களூர் சுற்றுலா அழைத்துச் சென்றார்கள். எங்கள் பக்கத்துவீட்டு கடைக்காரம்மா, தனது மகள்களுக்குத் துணையாக எங்களுடன் டூர் வந்திருந்தார். எனது தந்தை போதுமான பணம் கொடுத்திருந்தாலும், தம்பிகளுக்கு கண்ணாடி, சிறிய ..பேன்ஸி குடை என்று வாங்கியதில் கையிலிருந்த காசெல்லாம் செலவாகிவிட்டது.

கடைசி நாள் இரவு, மைசூருக்கு வெளியே, ஒரு ஹோட்டல் வாசலில் பஸ்ஸை நிறுத்தி சாப்பிட்டு விட்டு வரச்சொன்னார்கள். அனைவரும் அவரவர் காசில்தான் சாப்பிடவேண்டும். எனக்கு பயங்கர பசி. ஆனால் கையில் அஞ்சு பைசா கூட கிடையாது. எனது வகுப்பு ஆசிரியரிடம் சொல்லியிருந்தால், அவர் உணவு வாங்கித் தந்திருப்பார். ஆனால் சொல்லக் கூச்சமாக இருந்தது. ஹோட்டலுக்குச் செல்லாவிட்டாலும், வரவில்லையா என்று கேட்பார்கள். எனவே பஸ்சுக்கு பின்னால் இருட்டில், யார் கண்ணிலும் படாமல் ஒதுங்கினேன். ஆனால் இதை கடைக்காரம்மா பார்த்துவிட்டார்.

"சுரேந்திரா" நீ சாப்பிட வரல?"

"இல்ல சாந்தியம்மா. எனக்கு பசியில்ல."

"பசியில்லையா? இங்க வா" என்று என்னை அருகில் அழைத்தார். என் முகத்தைப் பார்த்துவிட்டு, "நல்ல பசி முகத்தில தெரியுது. கையில காசில்லையா?" என்றார். நான் பதில் சொல்லவில்லை.

"தம்பிங்களுக்கெல்லாம் பெரிய மனுஷன் மாதிரி வளைச்சு, வளைச்சு சாமான் வாங்கினா, காசு எப்பிடி மிஞ்சும்? வா" எங்க கூட சாப்பிடு." என்றார்.

"வேண்டாம். எனக்கு பசியில்ல."

"வாப்பு" நான் உன் பக்கத்து வீடுதான" எங்கிட்ட என்ன வெக்கம்? வந்து சாப்பிடு"

"இல்லங்க" வேண்டாம்...

"சரி" சும்மா வேண்டாம். கடனா வாங்கி சாப்பிடு... நாளைக்கு ஊருக்குப் போய்த் தந்துடு... என்று ஒரு ரூபாய்த் தாளை நீட்டினார். நான் "வேண்டாம் சாந்தியம்மா..." என்று வேகமாக நடந்தேன்.

"ஏய்" நில்லு.." என்று என் கையைப் பிடித்த கடைக்காரம்மா, நான் "வேண்டாம்" என்று சொல்ல, சொல்ல" என் கையில் பணத்தைத் திணித்துவிட்டுச் சென்றுவிட்டார். ஒரு ரூபாய்க்கு இரண்டு தோசை வாங்கித் தின்றேன்.

மறுநாள் ஊருக்கு வந்து பார்த்தால், வீட்டில் யாரும் இல்லை. ஒரு விசேஷம் என்று அனைவரும் தஞ்சாவூர் சென்றிருந்தார்கள். எதிர் வீட்டில் சாவி கொடுத்துவிட்டுச் சென்றிருந்தார்கள். எனக்கு பகீரென்றது. கடைக்காரம்மாவுக்கு ஒரு ரூபா தர வேண்டும். என்ன செய்வது? அதிகம் யோசிக்கவில்லை. வீட்டிலிருந்த உண்டியலை உடைத்து, ஒரு ரூபாயை எடுத்துக்கொண்டு சென்று கடைக்காரம்மாவிடம் கொடுத்தேன். "உங்க வீட்டில யாருமில்ல. ஏது காசு?" என்றார்.

"உண்டியலை உடைச்சுட்டேன்." என்று என் முதல் கடனைத் திருப்பிக் கொடுத்துவிட்டு திரும்பினேன். அன்று எனக்குத் தெரியாது. கடன் எனது வாழ்நாள் முழுவதும் ஒரு நிழலைப் போல துரத்திக்கொண்டேயிருக்கப் போகிறதென்று.

பின்னர் பல நண்பர்களிடம், வெட்கமின்றி பல ஆயிரம் ரூபாய் வரை கடன் வாங்கும்போதெல்லாம் நினைத்திருக்கிறேன். ஒரு ரூபாய் கடன் வாங்க கூச்சப்பட்டுக்கொண்டு, பஸ்சுக்கு பின்னால் புளியமரத்தடி இருட்டில் மறைந்த அந்த எட்டாம் கிளாஸ் பையனாகவே கடைசி வரை இருந்திருக்ககூடாதா? ஆனால் இந்த வாழ்க்கை நம்மை அவ்வாறு வாழ அனுமதிப்பதில்லை.

- ஜி.ஆர்.சுரேந்திரநாத் -

# பில்லாலங்கடி!

- அதிஷா -

தியேட்டரின் அருகினில் கூடிய கூட்டங்கள் கடலா கடல் அலையா.. ஆஆஆஆஆஆஆ... என்று பிரமிக்கும் அளவுக்கு இளசுகள் எல்லாம் தலவெறி தலைக்கேறி கையில் டிக்கட்டோடு சுற்றிக்கொண்டிருந்தனர். சில தியேட்டர்களில் டிக்கட் விலை 750ஐ தாண்டியதாம். அதிகாலை நான்குமணிக்கே நகரின் முக்கிய சாலைகள் முடங்கும் அளவுக்கு தியேட்டர் வாசல்களில் கூட்டமாம். எத்தனை ஆயிரம் வேண்டுமானாலும் காசு கொடுத்து டிக்கட் வாங்க இரசிகர்கள் காத்திருந்தது தெரிகிறது. ப.சிதம்பரத்துக்கு இதெல்லாம் தெரிந்தால் விலைவாசியை இன்னும் கூட பத்து பர்செண்ட் ஏற்றிக்கொள்ளுவார் என்பதில் ஐயமில்லை!

முதல்காட்சியிலே அஜித்தை நான்குபேர் பிடித்துவைத்து துப்பாக்கி முனையில் அடித்து உதைத்து இரத்தம் வழியும் வாயோடு பஞ்ச் டயலாக் சொல்லவைக்கிறார்கள். பேசிமுடித்ததும் அந்தப் பயலுக டுமீல்னு சுடாம தல இன்னொரு பஞ்ச் பேசுவாரோ என காத்திருக்கிறார்கள்.. அந்த கேப்பில் அஜித்தின் மகத்தான இடுப்பு பிரதேசத்தில் யாரோ பத்திரமாக இருக்கட்டுமே என குத்தி வைத்திருந்த கூரான கத்தியை உருவி நான்குக்கும் மேற்பட்டவர்களை கொன்றுவிட்டு.. கீழே கிடக்கிற துப்பாக்கியை எடுத்து நம்மை நோக்கி சுடுகிறார்! அப்போதே நாம் உஷாராகி வெளியே ஓடிவந்திருக்க வேண்டும். இந்த விதிதான் விடாதே!

இலங்கையில் போர் நடக்கிறது. குடும்பம் கொல்லப்படுகிறது. அஜித் அநாதையாகி திருடனாகிறார். (இதெல்லாம் பெயர் போடும்போதே போட்டோவில் காட்டிவிடுகிறார்கள்). அடுத்த காட்சியில் இலங்கையிலிருந்து இராமேஸ்வரம் செல்லுகிற டெய்லி சர்வீஸ் (இரவு கிளம்பினால் காலையில் வந்துசேரும் போல) அகதிகள் எக்ஸ்பிரஸ் படகில் ஒரு பெட்டியோடு தொந்தியும் தொப்பையுமாக ஆந்திரா மெஸ்ஸில் இரண்டு ஃபுல்மீல் சாப்பிட்ட தெம்போடு இரண்டு




மண்ணெண்ணெய் கேன் லூயி பிலிப்பி சட்டை சகிதம் நேராக இராமேஸ்வரம் கடற்கரையி லேயே வந்திறங்குகிறார்.

ஒவ்வொரு அகதியாக கூப்பிட்டு அழைத்து உட்காரவைத்து அரசு ஊழியர் ஒருவர் பெயர் ஊர் விபரமெல்லாம் கேட்கிறார். அதுபோல அஜித்தும் அழைக்கப்படுகிறார். விசாரிக்கப்படுகிறார். அவரும் தனக்கேயுரிய பாணியில் “ப்பில்லா... ட்டேவிட் ப்பில்லா” என்கிறார். அந்த அலுவலரும் அஜித்தை மிரட்டி பஞ்ச் டயலாக் சொல்லவைக்கிறார் அஜித்தும் அந்த சிச்சுவேசனில் ஏதாவது சொல்லியாக வேண்டுமே என தீவிரவாதிக்கும் போராளிக்கும் இருக்கிற வித்தியாசத்தினை ஒருவரியில் சொல்லிவிடுகிறார்! உடனே அஜித் அகதிகள் முகாமில் நண்பர்களோடு டீ சாப்பிடுகிறார். பொலிஸ்காரரை புரட்டி எடுக்கிறார்.

பொலிஸ் ஸ்டேஷனில் அஜித்தை கட்டிவைத்து அடிக்கிறார்கள். கடத்தலில் ஈடுபடுத்துகிறார்கள். அஜித் கொலைசெய்ய தொடங்குகிறார்!

இலங்கை அகதியான அஜித் பல ஆபரேஷன்கள் செய்து சின்ன டானாக மாறுகிறார். கொதிக்கும் வெயிலில் குளுகுளு கோட்டும், கடுமையான இருட்டு நேரத்திலும் டார்க் கூலர்ஸும் போட்டுக்கொள்கிறார். (எனக்கென்னவோ அஜித் டான் ஆவதே இந்த கோட்டு போடவும் கூலிங் கிளாஸ் மாட்டவும்தானோ என்றுகூட தோன்றுகிறது).

பிட்வீன் தன்னுடைய அக்காவை சேர்ச்சில் சந்திக்கிறார். சில காட்சிகளுக்கு பிறகு அக்கா செத்துப்போகிறார் (படத்தில் இயற்கையாக செத்துப்போகும் ஒரே ஆள் அவர்தான்). நெட்டையாக இருப்பவரும் சேர்ச்சில் பாட்டுப் பாடும் அடக்க ஒடுக்கமான அக்கா பெண்ணை அழைத்துக்கொண்டு கோவா போய் தங்கவைக் கிறார். (க்ளைமாக்ஸில் அந்தப் பெண்ணை கொன்றுவிடுகிறார்கள்) இதற்கு நடுவில் இன்டர்வெல் விட்டாக வேண்டும் என டைரக்டருக்கு திடீரென தோன்றிவிட்டது போல ஓடிப்போய் வில்லன்களை பிடித்து கூட்டிவந்து நிற்க வைக்கிறார் அஜித் பஞ்ச்டயலாக் பேசுகிறார்! நடக்கிறார் இன்டர்வெல்!

முதல் பாதியில் நாம் நிறைய எழுதுகிற அளவுக்கு மேட்டர் இருந்ததில்லையா? இரண்டாம் பாதியில் அதுமிகவும் குறைவு. ரஷ்யா வில் இருக்கிற ரஷ்ய டானோடு அஜித் மோதுகிறார். அஜித் அவனிடமும் பஞ்ச் டயலாக் பேசிவிட்டு முதலமைச்சரை கொன்று நீதிபதியை மிரட்டி சிறையிலிருந்து திரும்பி புராவியோவோ என்னவோ உலகமேப்பில் தேடி கண்டுபிடிக்க வேண்டிய நாட்டுக்கு இரட்டை ஆளாக (அஸிஸ்டென்ட்டோடு) போய் அட்ரஸ் தேடி கண்டுபிடித்து மாபெரும் டானின் ஆயுதகிடங்கில் அவர்களுக்கே தெரியாத இடங்களில் குண்டுவைத்து அழித்து, ஒரே ஒரு துப்பாக்கியின் உதவியோடு பல நூறுபேரை கொன்றுகுவித்து தர்மத்தை காக்கிறார். அதோடு இயக்குனர் வேறு வாடகைக்கு ஒரு ஹெலிகொப்டரையும் எடுத்துவிட்டதால், அஜித்தை டூப்பில்லாமல் தொங்கவிடுகிறார். ஹெலிகொப்டரில் தொங்கும் போது கூட “டேய்ய்ய்ய்ய் நான்...” என்று தொடங்கும் ஏதாவது ஒரு பஞ்ச் டயலாக்கை பேசிவிடுவாரே என்கிற அச்சத்தோடே படம் பார்க்கும் துர்ப்பாக்கிய நிலை வேறு பயமுறுத்தியது. அந்த இடத்தில் பஞ்ச் வைக்காத வசனகர்த்தாவின் திசைபார்த்து கும்பிடுகிறேன்.. நன்றி தலைவரே!

அஜித் பில்லா முதல் பாகத்தில் இருந்ததை விடவும் இதில் நிறையவே வயதானவராக தெரிகிறார். மேக்கப் கொஞ்சம் ஏற்றியிருக்கலாம். அஜித்தை மட்டுமே நம்பி எடுக்கப்பட்ட படம்! அஜித் ரசிகர்கள் அவர் நடந்தாலே கைதட்டுவார்கள். இதில் நிறைய நடக்கிறார், பஞ்ச் டயலாக் பேசுகிறார். கைதட்டி மகிழலாம்.

வெறும் தொழில்நுட்பமும் ஸ்டைலும் மட்டுமே முழுமையான திரைப்பட மாகாது. உணர்வு என்கிற ஜந்துவே இல்லாத ஒரு திரைப்படத்தை பல வருடங்களுக்குப் பிறகு இப்போதுதான் பார்க்கிறேன். என்னதான் மொக்கை மசாலா படமாக இருந்தாலும் அதன் பலம் திரைக்கதையின் சுவாரஸ்யத்தில்தான் இருக்கிறது. புளித்துப் போன தீ, ரங்கா காலத்து காட்சிகள். கொஞ்சமும் புத்திசாலித்தனமில்லாத ட்விஸ்ட்கள்.

எதை வேண்டுமானாலும் தாங்கிக் கொள்வேன்.. ஒரு விஷயம்தான் கடைசிவரை உறுத்தியது. எப்படித்தான் இரண்டு ஆண்களுக்கு பிகினியெல்லாம் மாட்டிவிட்டு ஹீரோயின்கள் என்று சொல்ல முடிந்ததோ இந்த மனசாட்சியே இல்லாத இயக்குனருக்கு!

# உடுக்கு



உடுக்கு அடிப்பது புராண காலந்தொட்டு இருக்கிறது. தொன்மையான இந்த உடுக்கு பழங்கால தோல் வாத்திய இசைக் கருவிகளில் ஒன்று. தவில் மத்தளம் போலல்லாது பெண்களின் இடைக்கு உவமையாகச் சொல்லப்படுவது போலவே நடுவே மெலிந்து ஒடுங்கியிருக்கும். இரண்டு பக்கமும் தோலினால் செய்யப்பட்டவை. ஒவ்வொரு பக்கமும் 6 துவாரங்கள் இருக்கும். இரண்டும் சேர்த்து 12 துவாரங்கள் இருக்கும். ராசி கட்டங்கள் பன்னிரண்டும் இந்த இசைக் கருவியில் அமையும் வண்ணம் செய்யப்பட்டதாம். உடுக்கை நான்கு விரல்களில் அழுத்தி அடிக் கும்போது “ஓம்” என்ற நாதம் ஒலிக்கும். சைவக் கடவுளான சிவ பெருமான் முரசொலியில் பிறந்ததாகச் சொல்லப் படுவது இந்த “ஓம்” என்ற நாதம்.

# தூறல்!

➧ இங்கிலாந்து அரசி, எலிசபெத்தின் உண்மையான பிறந்த நாள், ஏப்ரல் 21ஆம் திகதி. ஆனால், அப்போது இங்கிலாந்தில் வானிலை மந்தமாக, கொண்டாடுவதற்கு ஏற்றதாக இல்லாமலிருக்கும். ஆகையால், ஒவ்வொரு ஆண்டும், அரசியின் பிறந்த நாளை, வெயிலும், இனிய சூழ்நிலையும் சேரும், ஜூன் 5ஆம் திகதி கொண்டாடுகின்றனர்.



➧ எலிசபெத்தின் மகன் சார்ள்ஸ், (டயானாவின் முன்னாள் கணவர்) கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் படித்து வந்த போது, ஒரு பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையில், “தினமும் காலை ஏழு மணிக்கு, என் அறைக்கு வெளியே இருக்கும் குப்பைத் தொட்டியிலிருந்து, குப்பை எடுப்பதற்காக ஒருவர் வருவார். அவர் பாடிக் கொண்டே இருப்பார். அந்தப் பாட்டு தான் என்னைத் தூக்கத்திலிருந்து எழுப்பும். அவர் குரல் மிக நன்றாக இருக்கும்...” என்று குறிப்பிட்டிருந்தார். அவ்வளவுதான்! அந்தக் குப்பை வண்டிக்காரருக்கு அடித்தது யோகம். அவரை, ஒரு பிரபல இசைத்தட்டுக் கம்பெனி, உடனே ஒப்பந்தம் செய்து விட்டது.

➧ கடவுள் என்னைக் கூப்பிட்டு, “திருத்தம் செய்ய வேண்டியது இயற்கையில் என்ன இருக்கிறது?” என்று கேட்டால், “எது, எது, எப்படி எப்படி இருக்க வேண்டுமோ, அப்படி அப்படியே கச்சிதமாக இருக்கிறது. ஒன்றிலும் கை வைக்காதீர்கள் என்று பதிலுரைப்பேன்...” என்றார், உலகப் புகழ் பெற்ற சிற்பி ரோடின்.

பால்ஸாக் என்ற, பிரபல எழுத்தாளரின் உருவத்தை, சிலையாகச் செய்தார் ரோடின். பிறகு, தன் மாணவன் ஒருவனை கூப்பிட்டுக் காட்டினார். “ஆகா... சிற்பத்தின் கை ஒன்றே போதுமே... எத்தனை அற்புதமான கை...” என்று அவன் பாராட்டினான். வேறு சிலரையும் அழைத்து வந்து காட்டினார் ரோடின்.



ஒருவர் பாக்கியில்லாமல், “அடடா... என்ன அழகான கை... பிரமாதம்...” என்று புகழ்ந்தனர். ரோடின், வேகமாகப் போய், ஒரு சுத்தியலை எடுத்து வந்து, அந்த சிற்பத்தின் கையை ஒரே போடாகப் போட்டு, உடைத்து விட்டார். அத்தனை பேரும் திகைத்துப் போயினர்.

அவர்களிடம், “சிற்பமென்றால் மொத்த அம்சங்களும் சிறப்பாக அமைய வேண்டும். எந்த ஒரு பகுதியும் மற்றதைவிட, அளவுக்கு மீறி சிறப்பாக விளங்கக் கூடாது...” என்று விளக்கினார் ரோடின்.

# உளவாளியும் கூலியும்



நெப்போலியன் ஆட்சிக்காலத்தில் பிரான்ஸ் அரசன் 14ஆம் லூயி இங்கிலாந்தில் பதுங்கி யிருந்தார். அவர் கூடவே இருந்து உளவு பார்க்க நெப்போலியன் ஓர் ஆளை ஏற்பாடு செய்திருந்தார். கடைசியாக ஒருவாறு நெப்போ லியனின் ஆட்சி பிரான்ஸில் முடிவடைந்த பிறகு லூயி மன்னன் தைரியமாகப் பதவி ஏற்க பிரான்ஸ் வந்தார்.

வந்ததும் நெப்போலியனிடம் பாதுகாப்புத்துறை அமைச்சராக பணியாற்றிய ஆளைக் கூப்பிட்டார். “என்னை உளவு பார்க்க யாரை அமர்த்தியிருந்தீர்கள், சும்மா சொல்லுங்கள்” என்றார் 14ஆம் லூயி. சிறிது தயக்கத்திற்குப் பிறகு அமைச்சர், “தங்களுடைய ஆட்களில் ஒருவனான ப்ளாகாஸைத்தான் அமர்த்தியிருந்தோம்” என்றார். அதிர்ச்சி அடையவில்லை லூயி மன்னர், “அவனுக்கு என்ன கூலி கொடுத்தீர்கள்?” என்று அக்கறையோடு கேட்டார்.

“வருடத்திற்கு எண்ணாயிரம் பவுண்”

“நல்லது, அவன் நாணயஸ்தன்தான்” என்று மன்னர் மகிழ்ந்தார். அமைச்சர் புரியாமல் அவரைப் பார்த்தார். “நான் தலைமறைவாக இருந்த காலத்தில் ப்ளாகாஸ் தன் சம்பளத்தில் பாதி எனக்குத் தருவதாக வாக்களித்திருந்தான். வருடா வருடம் நாலாயிரம் பவுண் தந்து வந்தான். பரவாயில்லை யோக்கியமாகத்தான் நடந்து கொண்டிருக்கிறான்” என்றார் மன்னர்.




A.J.Nimalrajan

**கூ**கிள் நமக்கு அளிக்கும் வசதிகள் அனைத் தையும் பெறு வதற்கு நமக்கு அவசியம் தேவை ஒரு ஜிமெயில் என் பதை அறிவோம்.

தற்போது ஜிமெயில் பதிவு செய்யும்போது மொபைல் எண் வெரி∴பிகேசன் செய்ய வேண்டிய நிலை உள்ளது.

நம் மொபைல் எண்ணை வைத்து நம் ஜாதகத்தையே கூகிள் கணித்து விடும் .அதேசமயம் மொபைல் வெரி∴பிகே சன் செய்வது மிகவும் பாதுகாப்பானது. நம் கணக்கை யாரா வது களவாடிவிட்டால் நமக்கு மிகவும் பயனளிக்கும் என்பதையும் அறிவோம்.

ஆனாலும் நமது பிரைவசியில் கூகிள் தலையிடுவது பலருக்கும் பிடிக்காது. அவ்வாறானவர்களுக் காக மொபைல் எண் வெரி∴பிகேசனை எப்படி ஏமாற்றுவது என்று பார்ப்போம்.

## கூகுளிடம் ஓர் விளையாட்டு

GM HACK IT

1.தற்போது ஏராளமான வலைத்தலங்கள் இணை யத்தில் குறுஞ்செய்திகளை அனுப்பவும், வொய்ஸ் மெயில் அனுப் பவும் கூடவே ஒரு மொபைல் எண்ணும் கொடுக்கின்றன.

அப்படிப்பட்ட சில தலங் கள்

http://receive-sms-online.com/

http://k7.net/

k7.net சேவையை தற்காலிகமாக நிறுத்தியுள்ளது என்று நினைக்கிறேன்.

மேலே உள்ள தளங்கள் அல்லது இதுபோல் சேவையளிக் கும் உங்களுக்குத் தெரிந்த தளங்களுக்கு செல்லுங்கள்.

2.பதிவு செய்ய வேண்டி இருந்தால் பதிவு செய்து ஒரு எண்ணை பெற்றுக்கொள்ளுங்கள்.

3.பிறகு ஜிமெயில் உருவாக்குங்கள்.அதில் மேலே உள்ள தளங்கள் கொடுத்த எண்ணை வெரி∴பிகேசனுக்காக கொடுங்கள்.

4.மீண்டும் நீங்கள் மொபைல் எண் பெற்ற தளத்திற்கு சென்று பாருங்கள்.கூகிள் வெரி∴பிகேசன் கோட்கள் இருக்கும். அதை அப்படியே ஜிமெயில் வெரி∴பிகேசனுக்காக கொடுத்து ஜிமெயிலையும் கூகிளையும் ஏமாற்றுங்கள்.

தெரிந்துகொள்வதற்காக மட்டுமே இந்த பதிவு போடப் பட்டுள்ளது.மற்றபடி உங்கள் உண்மையான மொபைல் எண்ணை கொடுத்து ஜிமெயிலில் பதிவு செய்வதே பிற் காலத்திலும் பயன்படக்கூடியதாக இருக்கும்.

# கடிதம் எழுத ஓர் இணையத்தளம்

**அ**மெரிக்க அதிபர் ஒபாமாவிற்கோ அல்லது கிரிக்கட் நட்சத்திரம் சச் சின் டெண்டுல்கருக்கோ திறந்த மடலை எழுத விரும் புகிறீர்களா? ஆம் என்றால் மை ஓபன் லெட்டர் உங்களுக் காகவே உருவாக்கப்பட்டுள் ளது. இந்த தளத்தின் வாயி லாக நீங்கள் உலகில் உள்ள யாருக்கு வேண்டுமானாலும் திறந்த மடல் எழுதலாம்..

நாளிதழ்களில் அவப்போது பிர பலங்கள் முக்கிய பிரச்னை குறித்து திறந்த மடல்களை எழுதுவதுண்டு.



சில நேரங்களில் பத்திரிகைகளில் தொண்டர்களின் கடிதங்களும் திறந்த மடல்களாக வெளியாவதுண்டு.

திறந்த மடல்கள் மூலம் முக்கிய வி'யங்கள் குறித்து வலுவான கருத் துக்களை தெரிவிக்கலாம். ஆனால் மின்னஞ்சல் யுகத்தில் கடிதங்கள் எழுதும் பழக்கமே அரிதாகி வருகி றது. இந்நிலையில் மின்னஞ்சல் வடி வில் திறந்த மடல்களை எழுதும் வச தியை ஏற்படுத்தி தரும் தளமாக மை ஓபன் லெட்டர் தளம் உருவாக்கப்பட் டுள்ளது.

எதற்காக வேண்டுமானாலும் யாருக் காக வேண்டுமானாலும் இந்த தளத் தில் இருந்து திறந்த மடலை எழுத லாம். யாருக்கு கடிதத்தை எழுதுக் கிறீர்கள் என குறிப்பிட்டு உங்கள் பெயரையும் குறிப்பிட்டு கடித்ததை எழுத்த துவங்கலாம்.

கடிதம் எழுதுவதற்கான பகுதியில் வலைப்பதிவுகளில் காணப்படக் கூடிய அனைத்து வசதியும் இருக்கின்றன. கடித வரிகளை தேவையான இடங்களில் அடிக்குறிப்பு இடுவது, எழுத்துருக்களை மாற்றுவது, வண்ண எழுத்துக்களை சேர்ப்பது, புகைப் படங்களை இணைப்பது என பல்வேறு வசதிகள் இருக கின்றன. தேவை ஏற்பட்டால் செய்திகளை மேற்கோளாகவும் இணைக்கலாம்.ஆக வெறும் வரிகளாக இல்லாமல் தேவைக்கேற்ப அழுத்தங்களை கொடுத்து அழகான கடிதத்தை உருவாக்கலாம். இந்த கடிதத்தை இணைய வெளியில் பதிப்பிப்பதன். மூலம் திறந்த மடலை உலகின் பார்வைக்கு சமர்ப்பிக்கலாம்.

கடிதத்தின் கீழ் மற்றவர்கள் அது குறித்து கருத்து தெரிவிப்பதற்கான வசதியும் இருக்கிறது. ஆர்வம் உள்ளவர்கள் இந்த தளம் மூலமாக திறந்த மடல்களை எழுதலாம். மற்றவர்கள் எழுதியுள்ள கடிதங்களை படிததுப் பார்த்து கருத்து தெரிவிக்கலாம். இன்னும் மகத் தான கடிதங்கள் எதுவும் இந்த தளத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்றாலும் இந்த தளம் மகத்தான உரையாடலுக்கு வழிவகுக்கும் சாத்தியம் கொண்டிருக்கிறது.

இணையத்தில் கருத்து தெரிவிக்கவும் விவாதத் தில் ஈடுபடவும் எண்ணற்ற வழிகள் இருந்தாலும் கடி தம் மூலம் கருத்துக்களை தெரிவிக்கும்போது அதன் வீச்சும் பரப்பும் தனித்துவம் மிக்கதாக அமையலாம். ஒரு வலைப்பதிவிலோ, ட்விட்டர் குறும்பதிவிலோ அல்லது பேஸ்புக் அப்டேட்டிலோ சொல்லமுடியா ததை கடிதம் மூலம் சொல்லலாம். உலகின் கவனத்தை ஈர்க்கலாம். இணையதள முகவரி http://myopenletter.in/

# மவுஸ் இல்லாமல் இணையப் பக்கங்களைத் திறக்க இதோ சிறந்த வழி!

**ஒ**வ்வொரு இணைய பக்கங்களிலும் பல் வேறு காரணங்களுக்காக மற்றபதிவுகளின் லிங்க் கொடுத்து இருப்பர். மவுஸின் மூலம் அந்த லிங்கை கிளிக் செய்தால் அந்த குறிப் பிட்ட பதிவிற்கு அல்லது மற்ற இணை யதளங்களுக்கு செல்ல முடியும். இது அனை வருக்கும் தெரிந்ததே ஆனால், அந்த மவுசை தொடாமலே குறிப்பிட்ட லிங்கை எப்படி கிளிக் செய்வது என்று பார்க்கலாம். கேட் பதற்கே சுவாரஸ்யமா இருக்ககிறதல்லவா! வழிமுறையை அறிய கீழே தொடருங்கள்.

கூகுள் குரோம் பயனர்கள்:

குரோம் உலவி பயன்படுத்துபவர்கள் இந்த Dead Mouse நீட்சியை உங்கள் குரோம் உலவியில் இன்ஸ்டோல் செய்து கொள்ளுங் கள். இன்ஸ்டோல் ஆகியதும் குரோம் உலவியை reload செய்யுங்கள். பிறகு ஏதே னும் இணைய பக்கத்தை திறந்து அந்த பக்கத்தில் உள்ள லிங்கில் முதல் எழுத்துக் களை டைப் செய்யுங்கள். டைப் செய்ததும் அந்த எழுத்தில் உள்ள லிங்க் மேலும் கீழும் அசைவதை காணுங்கள்.

உதாரணமாக bbc news என்று லிங்க் கொடுத்து இருந்தால் நீங்கள் bbc என்று டைப் செய்தால் போதும். அந்த லிங்க் மேலும் கீழும் அசையும். உங்கள் கீபோர்டில் Enter அழுத்தினால் அந்த லிங்க் திறக்கும். புதிய டேபில் திறக்க Shift + Enter கொடுக்கவும்.



ஒரே பெயரில் நிறைய லிங்க் இருந்தால் Tab அழுத்தி சரியான லிங்கை தேர்வு Enter கொடுக்கவும்.

பயர்பொக்ஸ் பயனர்கள்:

பயர்பொக்ஸ் உபயோகிப்பவர்களுக்கு இது மிகவும் சுலபம். இதற்காக எந்த நீட்சியையும் உபயோகிக்க தேவையில்லை. பயர்பொக்ஸ் பிரவுசரை திறந்து ஏதேனும் இணைய பக் கத்தை ஓபன் செய்து "/" slash கீயை அழுத்தி பிறகு அந்த லிங்க் எழுத்தை அழுத்தினால் அந்த லிங்க் highlight ஆகும். பிறகு Enter கீயை அழுத்தினால் அந்த லிங்க் ஓபன் ஆகும்.

உதாரணமாக world cup என்று ஒரு லிங்க் இருக்கிறது என வைத்து கொள்வோம். / அழுத் தினால் ஒரு சிறிய விண்டோ வரும் அதில் wor என்று டைப் செய்தால் போதும் அந்த லிங்க் ஹைலைட் ஆகும் பிறகு Enter கீயை அழுத்தினால் அந்த லிங்க் திறந்து விடும்.



இந்த வழிகளில் மவுசை தொடாமல் இணைய பக்கங்களில் உள்ள லிங்கை கிளிக் செய்யலாம்.

## Custom URL வசதி தற்பொழுது அனைவருக்கும்

**ப்**ளொக்கரில் சில நாட்களுக்கு முன்னர் Permalink என்ற Custom URL வச தியை அறிமுகப்படுத் தினர். இதன் மூலம் நாம் வெளியிடும் பதிவின் URL எப்படி இருக்க வேண்டு மென்று நாமே தேர்வு செய்து கொள்ளலாம். இந்த வசதியின் மூலம் தேடி யந்திரங்கள் உங்கள் பதிவுகளை சுலபமாக கண்டறிந்து வாசகர்களுக்கு தெரிவிக்கும். இந்த வசதி முக்கியமாக பிறமொழி பதிவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

இந்த வசதியை சோதனை முயற்சியாக Draft பயனா ளிகளுக்கு மட்டுமே அளித்து வந்தனர். இன்றிலிருந்து ப்ளொக்கர் பயனர்கள் அனைவருக்கும் Permalink வெளி யிடப்பட்டுள்ளது.

எப்பொழுதும் போல பதிவு எழுத New Post பகுதிக்கு சென்று வலது ஓரத்தில் மவுஸ்கேர்சரை நகர்த்தினால் Post Settings பகுதி வரும் அதில் Permalink என்ற புதிய வசதி வந்திருப்பதை காணலாம்.




அந்த Permalink என்பதை கிளிக் செய்து அதில் உள்ள Custom URL என்பதை தேர்வு செய்யவும். அதில் உங்களுக்கு வேண்டிய URL டைப் செய்து கொள்ளுங்கள். சரியான URL டைப் செய்தவுடன் கீழே உள்ள Done என்பதை கிளிக் செய் தால் போதும் இனி நீங்கள் தமிழில் தலைப்பை வைத்து பதிவு வெளியிட்டாலும் இந்த URL தான் வரும்.




முக்கியமான விஷயம் இந்த வசதியை பதிவை பப்ளிஷ் செய்வதற்கு முன் முடியாது. மற்றும் இந்த வசதி புதிய ப்ளொக்கர் தோற்றத்தை பயன்படுத்துபவர்களுக்கு மட்டுமே. பழைய தோற்றத்தை பயன்படுத்துபவர்கள் இந்த வசதியை பெறமுடியாது.

# மறைந்து போகும் நிலையில் மட்பாண்டக் கைத்தொழில்



(கிரு-சிகரம்)

காலப்போக்கில் மட்பாண்ட கைத்தொழில் யாழ்ப்பாணத்தில் முற்றாக மறைந்துவிடும் என மட்பாண்ட உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் கவலை தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் தற்போது மட்பாண்ட பொருட்களின் விற்பனை வீழ்ச்சி அடைந்து காணப்படுகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்று முடிந்த ஆடி அமாவாசை தினத்தை முன்னிட்டு, மண்ணாலான சட்டி பானைகள் என்பன திருநெல்வேலிச் சந்தையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

இருப்பினும், இதனால் தமக்கு எந்தவித இலாபமும் கிடைக்கவில்லை என விற்பனையில் ஈடுபட்டிருந்த வியாபரி ஒருவர் குறிப்பிட்டார்.

கடந்த முறை ஆடி அமாவாசை தினத்தன்று நடைபெற்ற வியாபாரத்துடன் ஒப்பிடுகையில், இந்த வருடம் தாம் நஷ்டத்தை எதிர்நோக்கி யுள்ளதாக மற்றுமொரு வியாபாரி கூறினார்.

தற்போது யாழ்ப்பாணத்தில் எரிவாயு பாவனை மற்றும் அலுமினியப் பொருட்களின் பாவனை அதிகரித்துள்ளமையே, மட்பாண்டபொருட்களின் பாவனை குறைவடைவதற்கு காரணம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தாம் இரண்டு சுண்டு அரிசி போட்டு சமைக்கக் கூடிய, பானையை 100 ரூபாவிற்கு விற்பனை செய்யும் அதேவேளை, யாழ்ப்பாணத்தில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் ஏனைய மாவட்டத்தைச் சேர்ந்த மட்பாண்ட வியாபாரிகள் இதே பானையை 80 ரூபாவிற்கு விற்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மட்பாண்ட பொருட்களை உற்பத்தி செய்வதற்கு தேவை !!படும் மண்ணை வன்னியிலிருந்து காசு கொடுத்து வாங்குவதாகவும், ஒரு லோட் மண் 50,000 ரூபா வரை விற்பனையாவதாகவும் குறிப்பிட்ட குறித்த வியாபாரி, வன்னிப்பகுதியில் மட்பாண்டத் தொழிலில் ஈடுபடுபவர்கள் மண்ணை இலவசமாக குளங்களிலிருந்தே பெற்று தொழிலில் ஈடுபடுகின்றனர் எனச் சுட்டிக்காட்டினார்.

இதனால், அவர்களைப் போன்று தம்மால் விலை குறைத்து விற்பனை செய்யமுடியாதென வும் அவர் கூறினார்.

தொடர்ந்தும் தமக்கு நஷ்டம் ஏற்பட்டால், இந்தத் தொழிலை விட்டு விலகி வேறு தொழிலை செய்யவேண்டிய தேவை ஏற்படும் எனவும், இவ்வாறு மட்பாண்ட கைத்தொழிலாளர்கள் அனைவரும் வேறு தொழிலில் ஈடுபட்டால் காலப்போக்கில் மட்பாண்ட கைத்தொழில் யாழ்ப்பாணத்தில் முற்றாக மறைந்துவிடும் எனவும் அவர் தெரிவித்தார்.

# புத்துயிர் பெற்ற இரணைப்பாலை தேவாலயம்

புதுக்குடியிருப்பு இரணைப்பாலைப் பகுதியிலுள்ள கிறிஸ்தவ தேவாலயம் 2 கோடி ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தின்போது முற்றாகச் சேத மடைந்து காணப்பட்ட இந்த தேவாலயம், இரணைப்பாலை பகுதியைச் சேர்ந்த மக்கள் மற்றும் புலம்பெயர் மக்களின் நிதிப பங்களிப்புடனேயே புனரமைக்கப்பட்டு தற்போது புதிய தோற்றத்தில் காட்சியளிக்கின்றது.

இந்த தேவாலயம் 76 வருடங்கள் பழமை வாய்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



# வெளிநாட்டவர்களின் வருகையால் சூடுபிடிக்கும் வியாபாரம்



கடந்த ஒரு மாத காலமாக யாழ்பாணத்திற்கு வருகைதரும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் யாழ்.வர்த்தக நிலையங்களில் வியாபாரம் சூடுபிடித்துள்ளது.

இந்தக் காலப் பகுதியிலேயே பிரித்தானியா, சுவிஸ், கனடா பிரான்ஸ் போன்ற நாடுகளில் நீண்ட காலம் பாடசாலைகளுக்கு விடுமுறை விடுவதால் அங்கு வசிக்கும் பல யாழ்ப்பாணத்தவர்கள் தமது யாழ்ப்பாணத்திலுள்ள உறவினர்களைப் பார்ப்பதற்கு வருகை தருவது வழக்கம்.

அந்த வகையில், 2012 ஜுலை மாதம் தொடக்கம் வெளிநாட்டவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த வண்ணம் உள்ளனர்.

தீபாவளி, வருடப்பிறப்பு, கிறிஸ்மஸ் என பண்டிகைக் காலங்களில் மட்டுமே களைகட்டி வந்த தமது வியாபார நடவடிக்கைகள் தற்போது வருகை தந்துகொண்டிருக்கும் வெளிநாட்டவர்களால் சூடுபிடித்துள்ளதாக யாழ்.நகரில் இயங்கிவரும் பாதணி வியாபார நிலைய உரிமையாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

அதுமட்டுமன்றி, புடவை விற்பனை நிலையம், அழகுசாதனப் பொருள் விற்பனை நிலையம், எனப் பல வியாபார நிலையங்களிலும் அதிகளவான வெளிநாட்டவர்கள் கொள்வனவில் ஈடுபடுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் பெருமபாலானோர் பண்டிகைக் காலங்களில் மட்டுமே பெருமளவு கொள்வனவில் ஈடுபடுவதாகக் கூறும் புடவைக் கடை உரிமையாளர் ஒருவர், வெளிநாட்டவர்கள் வந்தால் ஏனைய காலங்களிலும் கொள்வனவில் ஈடுபடுவர் எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, பனங்கட்டி, பருத்தித்துறை வடை, வடகம், மோர் மிளகாய், பனை உற்பத்தி பொருட்களை இவர்கள் அதிகளவில் கொள்வனவு செய்வதால் யாழில் தற்போது இவற்றுக்கான கேள்வியும் அதிகரித்துள்ளது.

# பதிவிறக்கப் பெட்டகம்

புத்தகம், கைக்குள் அடங்கிவிடக் கூடிய பூந்தோட்டம்.
**– அரேபியப் பழமொழி**

எந்தப் புத்தகத்தைப் படித்தாலும் என்னில் உள்ளிருப்பதைத்தான் நாம் வாங்கிக்கொள்ள முடிகிறது. **– நகுலன்**

ஒரு நாவலால் கண்டுபிடிக்கக் கூடியதை கண்டுபிடிப்பது ஒன்றே ஒரு நாவலின் இருப்பிற்கான நியாயப்பாடு.
**– ஹெர்மன் புரோச்**

பலசமயங்களில் சிறுகதையைப் பற்றி நினைக்கும்போது நூறு அல்லது ஐம்பது கஜ ஓட்டப் பந்தயத்திற்கு ஆயத்தம் செய்து கொள்ளுகிற பரபரப்பும், நிலை கொள்ளாமையும் என்னைக கவ்விக் கொள்கிறதுண்டு. இது மைல் ஓட்டப் பந்தயமல்ல. நூறு கஜ ஓட்டப் பந்தயத்தில் ஒவ்வோர் அடியும் ஒவ்வோர் அசைவும் முடிவை நோக்கி ஓடுகிற அடி அசைவு. ஆற அமர வேடிக்கை பார்த்துக் கொண்டு செல்லவோ, வேகத்தை மாற்றிக் கொள்ளவோ இடமில்லை. சிறுகதையில் சிக்கனம் மிக அவசியம். வளவளப்பு என்றால் அதிகச் சுமை. ஓடுவது கஷ்டம்.

சிறுகதை எழுத உத்திகளைச் சொல்லித் தரலாம். உணர்வில் தோய்வதைச் சொல்லிக் கொடுக்க முடியாது. உணர்வில் லயிப்பதையும், முறுக்கேறுவதையும் சொல்லிக் கொடுக்க முடியாது. செக்கோவின் உத்திக்கு ஒரு அச்சு தயார் செய்து கொண்டு, அதில் நம் சரக்கைப் போட்டு வார்த்து விடலாம். ஆனால் அது செக்கோவ் அச்சின் வார்ப்பாகத்தான் இருக்கும். புதிதாக ஒன்றும் வந்துவிடாது. உணர்வும் நம் பார்வையின் தனித்தன்மையும் தான் முக்கியம். அவை கண்ணியமாகவும் தீவிரமாகவும் இருந்தால் நமக்கு என்று ஒரு உருவம் கிடைக்கும். **– தி. ஜானகிராமன்**

கதையில் ஒரு வார்த்தையைச் சேர்த்தாலோ அல்லது எடுத்தாலோ கதையின் போக்கே அடியோடு உருக்குலைய வேண்டும். **– அன்ரன் செக்கோவ்**

ஒரு மொழிபெயர்ப்பு தன் தாய்மொழியின் இயல்புகளைக் கொண்டிருப்பதைக் காட்டிலும் அது செல்கின்ற மொழியின தன்மைகளையே வெளிப்படுத்த வேண்டும் அப்போதுதான மூல மொழிப்பிரதிகளுக்கு நாம் நியாயம் செய்தவராவோம்.
**– ஏ.கே.ராமானுஜன்**

ஒரு இலக்கியப் பிரதி அரசியற் பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்லிவிடும் என்று நம்ப வேண்டியதில்லை. அரசியல் பிரச்சினைகளை அரசியற் களத்தில்தான் தீர்க்க முடியும். தவிரவும், இலக்கியப் பிரதிகளின் நோக்கமோ வேலையோ தீர்வு சொல்வதுமல்ல; பிரச்சினைப்படுத்துவதே.
**– அ.மார்க்ஸ்**

ஒரு நல்ல கதை தர்மத்தைச் சொல்லும்; ஒரு மகத்தான படைப்பு அதுவே தர்மமாக இருக்கும். **– காஸ்டனேடா**

எல்லா உயர் அறிவும் “போர் நுட்பம்” சார்ந்ததே என்பதை எந்தக் கலைப் படைப்பாளரும் மறந்துவிடக் கூடாது.
**– பிரேம் ரமேஷ**

விரிந்த படிப்பு இளம் எழுத்தாளர்களுக்கு நேர்த்தியான மனிதநேயப் பார்வையை அளிக்கும். தூய மனிதநேயமே நல்ல இலக்கியத்துக்கு ஆதாரம். இதற்கு விதிவிலக்கு கிடையாது. **– அசோகமித்திரன்**

ஒவ்வொரு மனமும் ஓர் இசைக்கருவி போல இருக்கிறது. காற்றையும் கதிரையும் விடச் சூட்சுமமான எண்ணங்கள் நுழைந்து, தாக்குகிற போது அது பேசுகிறது.
**– ரா.ஸ்ரீ.தேசிகன்**

இயற்கையாகவே ஆற்றல் கொண்ட எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய எழுத்துக்கள் ஊற்றுப்போல சுரந்துகொண்டே இருக்கும். என் விஷயம் அப்படி இல்லை. மிகக் கடினமாக வேலை செய்துதான் எனக்குள் அடைபட்டிருக்கும் வார்த்தைகளை என்னால் மீட்க முடிகிறது. ஊற்றுப் பிரவகிக்க எழுதுபவர்களை சந்திக்கும்போது எனக்குத் துயரமாக இருக்கும். **– டேவிட் பெஸ்மோகிஸ்**

எழுதும் திறமை எழுதுவதனால் மட்டுமே கற்றுக் கொள்ளப்பட முடியும். **– எல்.ஹுமன்ட்**

எழுதுவதை ஒரு வேலையாக மேற்கொள்ளும் போது என்னால் எழுத முடியாமல் ஆகிவிடுகிறது. **– சுந்தர ராமசாமி**

நான் எழுதுகிற அனைத்தும் தெளிவானதாகவும் புரியக் கூடியதாகவும் இருக்க வேண்டுமென நான் விரும்புகிறேன். ஏதேனும் ஒரு வாசகருக்கு புரிந்துகொள்வதற்கு கடினமாக இருக்குமென தோன்றினால் நான் மிகுந்த மனச்சஞ்சலமடைகிறேன். **– விஸ்லாவா சிம்போர்ஸ்கா**

# மீள் கட்டுமானம் மிகவும் அவசியம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டிலே நாங்கள் இன்று ஒன்று கூடியிருக்கிறோம்.



எங்கள் நாட்டை மீள்கட்டுமானம் செய்யும் முயற்சியில் ஒரு படிக்கல்லா இந்த மாநாடு இருக்கும் என்று நம்புகிறேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து 600 இற்கும் மேற்பட்ட விஞ்ஞானிகளும் ஆய்வாளர்களும் இங்கு கூடி போருக்கு பின்னரான சூழ்நிலையில் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் முகம் கொடுக்கும் சவால்கள் என்ற தலைப்பில் ஆராயவுள்ளீர்கள்.

நாங்கள் மிகப்பெரிய முரண்பாட்டில் இருந்து தற்போது மீண்டு வந்திருக்கிறோம். 3 தசாப்தங்களுக்கு மேலாக எமது நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக நாங்கள் பல்வேறு வழிகளில் பாதிக்கப்பட்டுள்ளோம். பெருமளவு மனித வளங்களை இழந்துள்ளோம், பாரிய இடப்பெயர்வுகளைச் சந்தித்தோம். உளவியல் ரீதியாக கடுமையாகப் பாதிக்கப்பட்டோம். இவற்றை விட வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத பல இழப்புகளை நாங்கள் சந்தித்துள்ளோம். எங்கள் கண் முன்பாகவே பலர் செத்து வீழ்ந்ததைக் காணும் துர்பாக்கியம் எமக்கு வாய்த்தது. தினந்தினம் எமது மக்கள் வாாத்தைகளால் வர்ணிக்க முடியாதளவு துன்பங்களை அனுபவித்து வந்தனர். நீடித்த போர் ஆயிரக்கணக்கான விதவைகளை, வலுவிழந்த வர்களை உருவாக்கியுள்ளது. மேலும் ஆயிரக்கணக்கானோர் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேறி அல்லலுறுவதற்கும் இந்தப் போர் காரணமாக இருந்தது. இந்த வலிகளும் வேதனைகளும் இன்னனும் எங்கள் நெஞ்சைவிட்டு அகலவில்லை.

இன்று இத்தகைய நீடித்த அவலங்கள் முடிவுக்கு வந்திருக்கின்றன. காயங்கள் ஆறிக்கொண்டு இருக்கின்றன. தற்போது மேன்மை தங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழிகாட்டலுடன் அபிவிருத்தி மீள் கட்டுமானப் பணிகள் இடம்பெற்று வருக்கின்றன. விசேடமாக போரினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பகுதிகளில் அபிவிருத்திப் பணிகள் மிக வேகமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல நாடுகள் இந்த அபிவிருத்திப் பணிகளுக்கு உதவி வருகின்றன. குறிப்பாக எமது அயல் நாடான இந்திய மிகக் கூடிய பங்களிப்பை வழங்கி வருகிறது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இன்று ஒழுங்கு செய்துள்ள இந்த மாநாடு குறித்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். பல்கலைக்கழகம் கல்விச் செயற்பாட்டையும் தாண்டி தற்போதைய சூழல் மற்றும் தேவை குறித்து தனது கவனத்தைச் செலுத்த ஆரம்பித்துள்ளது.

மேலும் போருக்குப் பின்னரான அபிவிருத்தியில் முகம் கொடுக்கும் சவால்கள் குறித்தும் ஆராய்வதற்கான முதற் படியை எடுத்து வைத்துள்ளது. விசேடமான மனித ஆற்றல் விருத்தி தொடர்பாக பாதையில் கவனம் செலுத்தப்படுகிறது. இந்தக் காலத்தில் ஆற்றல் விருத்தி என்பது பாரம்பரியத்தையும் தாண்டி புதிய தொழில்நுட்பப் புரட்சியூடாக முன்னெடுக்கப்படு கிறது. உலகில் பல நாடுகள், ஆற்றல் விருத்தி சம்மந்தமான துறையை முன்னெடுப்பதற்க்கு உதவ தயாராக உள்ளன. யாழ்ப்பாண பல்கலைக்கழகமானது ஆற்றல் விருத்தி தொடர்பாக முக்கியத்துவம் கொடுத்து செயற்பட முனைந்திருப்பது நாட்டின் அபிவிருத்திக்கு மிக முக்கிய பங்காற்றும்.



நாங்கள் கடந்த காலங்களில் பல்வேறு தவறுகளை இழைத்துள்ளோம் எங்களினுடைய தமிழ் தலைவர்கள் உறுதியான சரியான முடிவுகளை மேற்கொள்ள தவறிவிட்டனர். உதாரணமாக 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தை உருவாக்க போவதாக அரசாங்கம் அறிவித்தது. ஆனால் தமிழ் தலைவர்கள் குறிப்பாக தமிழர் ஐக்கிய முன்னணி இதனை கடுமையாக எதிர்த்தது. அதற்க்கான காரணம் அவர்கள் குறிப்பிட்டது, பேரளவிலான ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்கி தமிழ் மக்களை அரசு முட்டாளாக்க பார்ப்பதாக கூறினர்.

1974 ஆம் ஆண்டு ஒகஸ்ட் முதலாம் திகதி இதனை எதிர்த்து நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக இரண்டு நாள் உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பல்கலைக்கழக திறப்பு விழாவில் மக்களை கலந்து கொள்ள வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டனர். ஆனால் அவர்களால் அதனை நிறுத்த முடியவில்லை. உள்ளூரில் தயார் செய்யப்பட்டகைக் குண்டு ஒன்றை யாழ்.பல்கலைக்கழக முதலாவது துணைவேந்தர் கே.கைலாசபதி வீட்டின் மீது வீசி எறிந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

தமிழ் தலைமைகளின் இந்த முடிவு தவறானது என வரலாறு தற்போது நிரூபித்துள்ளது. தற்போது குடாநாட்டின் மிக முக்கிய பங்கை யாழ்.பல்கலைக் கழகம் வகிக்கின்றது. தங்களினுடைய திட்டங்களுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்தை நிறுவ வில்லை என்பதனாலயே தமிழர் ஐக்கிய முன்னணி இதனை எதிர்த்தது. இவ்வாறு தமிழ்த் தலைமைகளால் எடுக்கப்பட்ட பல தவறான முடிவுகளால் கடந்தகாலங்களிலும் அண்மையிலும் தமிழ் சமுகம் பாரிய விலைகொடுக்க நேரிட்டது.

நாங்கள் இந்த பாதையை பின்பற்றி செல்ல விரும்பவில்லை எங்களினுடைய பிரச்சினைகளை எந்தப் பாதை ஊடாக தற்போது தீர்த்துக்கொள்ள முடியும் என்ற உண்மையை தமிழ் சமுகம் நன்றாக அறிந்துள்ளது. 1974 ஆம் ஆண்டு பல்கலைக்கழம் அமைக்கப்படுவதை ஏற்றுக்கொண்டதன் பலனை தமிழ் மக்கள் இன்று அனுபவிக்கின்றனர். இந்த ஒழுங்கை பின்பற்றியே எமது அரசியல் பிரச்சினைகளுக்கும் நாங்கள் தீர்வு காண நினைக்கின்றோம். இனிமேலும் எமது பிரச்சினைகளுக் தீர்வு காண்பதற்க்கான வாய்ப்புக்களை இழந்து விட நாங்கள் தாயாராக இல்லை. இது தான் எங்கள் கட்சியின் கொள்கை எங்கள். முன் உள்ள ஒவ்வொரு வாய்ப்புக்களையும் எமது சமுகத்தின் நன்மைக்காக சிறப்பாக பயன்படுத்தி கொள்ள விரும்புகின்றோம்.

அதற்காகவே 13 வது திருத்த சட்டத்தினை அமுல் செய்யுமாறு நாங்கள் கோரிக்கை விடுத்து வருகின்றோம். அடுத்த கட்டமாக இந்த சட்டமூலத்தில் மேலதிக உரிமைகளை நாங்கள் வலியுறுத்தி பெறமுடியும். அதன் மூலமாக இறுதி அரசியல் தீர்வு ஒன்றை நாங்கள் அடைந்து கொள்ள முடியும். இறுதியாக இங்கே இருக்கின்ற விஞ்ஞானிகள், ஆய்வாளர்கள், ஆய்வு மாணவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, உண்மையுடனும், உறுதியுடனும், மனிதாபிமானத்துடனும் சேவையாற்றுங்கள். உங்களுக்கு இருக்கின்ற அறிவை பயன்படுத்தி இந்த நாட்டை மீளகட்டியெளுப்ப உதவுங்கள் என்றார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் போருக்குப் பின்னரான அபிவிருத்தி என்னும் தொனிப் பொருளில் சர்வதேசப் பல்கலைக்கழக கல்வி சார்ந்தவர்கள் பங்கெடுத்த சர்வதேச ஆராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணம் ரில்கோ ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆற்றிய உரை.

## இளைஞர்களின் களியாட்ட இடமாக மாறிவரும் வவுனியா குளக்கட்டுக்கள்

(வவுனியா)

வவுனியாவில் அண்மைக்காலமாக குளக்கட்டுகளில் இளைஞர்களின் களியாட்ட செயற்பாடுகள் அதிகரித்து வருவதாக கிராமவாசிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

வவுனியாவின் தாண்டிக்ககுளம், பாவற்குளம், மருக்காரம்பளை குளம் ஆகிய குளங்கள் உட்பட பல குளங்களில் இவ்வாறாக இளைஞாகள் குழுவாக இணைந்து மது அருந்துவது மற்றும் பல்வேறான தீய செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாகவும் அவர்கள் தொவித்தனர்.

இவ்வாறு இளைஞர்கள் செயற்படுவதனால் அக்கிராமங்களை சேர்ந்த மக்கள் தமது தேவையின் பொருட்டு குளங்களுக்கு செல்ல முடியாதிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மது அருந்திய வெற்றுப்போத்தலை குளங்களுக்குள்ளும் வெளியிலும் உடைத்து போடுவதனால் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் மற்றும் நீராடச்செல்பவர்கள் கடும் காயங்களுக்கு உள்ளாகுவதாகவும் கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸா கூடுதல் கவனம் செலுத்தும் பட்சத்திலேயே இவ்வாறான செயற்பாடுகளை கட்டுப்படத்த முடியுமெனவும் அதன் மூலமே கிராமத்தவர்களின் ஜீவனோபாயத்தை மேம்படுத்துவதற்கான வழியாக இருக்குமெனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (160)

## நல்லூர் ஆலயச் சூழலில் 27 திங்கள் தெய்வீகப் பேருரை

கந்தசுவாமி ஆலய மகோற்சவத்தினை யொட்டி 27 ஆம் திகதிகளும் ஆலய வடக்கு வீதியில் நாளை மறுதினம் முதல் 27 தினஙகளும் ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராசர் - பரமேஸ்வரி மண்டபத்தில் சைவத்தமிழ் பண்பாட்டுக்கழகத்தின் ஆதரவில் தினமும் 6.30 மணிமுதல் 8.00 மணிவரை கழகத்தலைவர் வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை.எம்.பி அருளானந்தன் அவர்களின் தலைமையில் தெய்வீகப் பேருரைகளும், கலை நிகழ்வு களும் இடம்பெறவுள்ளன.

நல்லூர் கந்தசுவாமி ஆலய கொடியேற்றத்தினத்தன்று ஆரம்பமாகும் இவ்நிகழ்வில் நடராசா - பரமேஸ்வரி மணி மண்டப ஸ்தாபகர் சிவத்திரு என்.சத்தியரூபன் அவர்கள் மங்களவிளக்கேற்றி வைப்பார்கள். அத்துடன் நல்லை திருஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் அருளாசியுரையுடன் முதல் நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்ந்து நடைபெறும் மகோற்சவ கால தெய்வீகப் பேருரைகளில் ஈழத்தின் தலைசிறந்த முத்த இளம் சொற் பொழிவாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள். மாணவர்களின் பேச்சு, பண்ணிசை, நாடகம் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.(60)

# க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்
G.C.E. (A/L) Examination model Paper

# கல்வி முரசு

Grade - 13

இரசாயனவியல்

| 02 | T | II |
|---|---|---|

நேரம் : 2 மணி

ஆசிரியர் :
S.T.ஜனார்த்தனன்
(Bsc.)

சென்றவாரத் தொடர்ச்சி...

37) $25^0C$ ZnS திண்மத்தினை $1dm^3$ $CuSO_4$ நீர்க்கரைசலிட்டு கலக்கிய போது கலக்கியபோது ZnS இன் ஒரு பங்கு கரைந்து CuS இன் ஒரு பகுதி வீழ்படிந்தது. இக்கரைசலில் $Zn^{2+}$ அயன்செறிவு C $moldm^{-3}$ ஆகும். ZnS, CuS என்பவற்றின் கரைதிறன் பெருக்கங்கள் முறையே b $mol^2 dm^{-6}$ எனின் கரைசலிலுள்ள $Cu^{2+}$ இன் மூல் எண்ணிக்கை யாதாகும்?

1) $\frac{bc}{a}$ mol 2) $\frac{a}{bc}$ mol 3) $\frac{ab}{c}$ mol

4) $\frac{c}{ab}$ mol 5) abc mol

38) பின்வரும் கூற்றுக்களில் எது சரியான கூற்று ஆகும்?
1) வெப்பநிலை அதிகரிக்கும் போது எந்தொரு கரைசலின் வெப்ப உள்ளுறையும் அதிகரிக்கும்.
2) ஏவற்சக்தி கூடிய தாக்கத்தின் தாக்கவீதம் எப்போதும் ஏவற்சக்தி குறைந்ததின் தாக்கவீதத்திலும் குறைவாகும்.
3) ஊக்கியானது எப்போதும் தாக்கமொன்றின் தாக்கவீதத்தினை அதிகரிக்கும்.
4) வெப்பநிலை அதிகரிப்பானது தாக்கமொன்றின் தாக்கவீதத்தினை எப்போதும் அதிகரிக்கும்.
5) வெப்பநிலை அதிகரிப்பானது எந்தவொரு தாக்கத்திலும் விளைவின் அளவை அதிகரிக்கும்.

கீழே தரப்பட்ட வரைபுகளைப் பயன்படுத்தி வினா 39, 40 இற்கு விடையளிக்க.




- ஏகவின ஊக்கி : தாக்கிகளும் ஊக்கியும் ஒரே அவத்தையில் காணப்படுகின்றன.
- பல்லின ஊக்கி : தாக்கிகளின் அவத்தையும் ஊக்கியின் அவத்தையும் வேறுபட்டதாகக் காணப்படுகின்றன.

39) பின்வருவனவற்றில் சரியான கூற்று எதுவாகும்?
1) $NO_2$ ஆனது ஊக்கியாகத் தொழிற்படுகிறது.
2) $V_2O_3$ ஆனது ஊக்கியாகத் தொழிற்படுகிறது.
3) $SO_2$, $O_2$ தாக்கத்தின்போது ஊக்கி மாறும்போது தாக்கப் பொறிமுறை மாறும்?
4) $2NO_2 + SO_2 \rightarrow SO_3 + 2NO$ தாக்கமானது $2NO + O_2 \rightarrow 2NO_2$ தாக்கத்திலும் விரைவானதாகும்.
5) ஊக்கி மாறும்போது தாக்கத்திற்கான தாக்கவேகம் மாறாது.

40. பின்வருவனவற்றில் தவறான கூற்று எதுவாகும்?
1) $2SO_2(g) + O_2 \rightarrow 2SO_3(g)$ தாக்கத்திற்கான ஏவற்சக்தி -96kJmol$^{-1}$ ஆகும்.
2) ஊக்கியுள்ளபோதும் தாக்கத்திற்கான ஏவற்சக்தி மாறாது.
3) ஊக்கியுள்ளபோது தாக்கத்திற்கான வெப்ப உள்ளுறை மாற்றம் மாறாது.
4) NO(g) ஏகவின ஊக்கியாகும்.
5) $V_2O_5$ பல்லின ஊக்கியாகும்.

**வினா 41 தொடக்கம் வினா 50 வரை கீழ்த்தரப்படும் ஷஅறிவுறுத்தலைப் பின்பற்றுக.**

1) a,b சரி 2) b,c சரி 3) c,a சரி
4) d,a சரி 5) வேறு சரியானால்

41) கிரபைற்று, வைரம் இரண்டும் காபனின் பிறதிருப்பங்கள் ஆகும். இவை பற்றிய சரியன கூற்று, சரியான கூற்றுக்கள்
1) ஒரே கொதி நிலை உடையவை.
2) ஒரே உருகு நிலை உடையவை.
3) ஒரே மூலர்க்கனவளவு உடையவை.
4) ஒரே வடிவமுடையவை.

42) ஒரு மூலகத்தின் இரு சமதானிகள் பற்றிய கூற்றுக்களில் சரியானது / சரியானவை எது / எவை ஆகும்?
1) ஒரே கொதி நிலை உடையவை.
2) இரண்டும் ஒரே அடர்த்தி உடையவை.
3) இரண்டும் ஒரே இரசாயன இயல்பு உடையவை.
4) இரண்டும் ஒரே கருவேற்றம் உடையவை.

43) $FeSO_4(NH_4)_2SO_46H_2O$ பளிங்கு அலம் பற்றிய கூற்றுக்களில் உண்மையானது / உண்மையானவை?
a) இதனது நீர்க்கரைசல் கரும்பச்சை நிறமுடையதாகும்.
b) $(NH_4)_2SO_4$ இனால் $FeSO_4$ நீர்ப்பகுப்பு அடைதல் மந்தப்படுகிறது.
c) இதனது நீர்க்கரைசல் அமிலத் தன்மையுடையதாகும்.
d) இக்கரைசலில் $n_{NH_4^+} : n_{SO4^{2-}} = 2:1$ மூல் விகிதமாகும்.

44) $Na_2S_2O_3(aq) + 2HCI(aq)$ $2NaCI(aq) + S(s) + H_2Ol) + SO_2(g)$ இத் தாக்கம் பற்றிய கூற்றுக்களில் உண்மையான கூற்றுக்கள் எது / எவையாயகும்?
a) கநதகம் உருவாகும் வீதம் கந்தகவீரொட்சைட்டு உருவாகும் வீதத்திற்குச் சமன்.
b) அமிலத்தின் செறிவை அதிகரிப்பதால் கந்தகம் உருவாகும் வீதம் கூடியளவில் அதிகரிக்காது.
c) மிகை $Na_2S_2O_3$ இற்குச் செறி HCI இன் அளவை அதிகரிப்பதன் மூலம் பெறப்படும் கந்தகத்தின் அளவை அதிகரிக்கலாம்.
d) குறித்தளவு HCI இற்கு $Na_2S_2O_3$ இன் செறிவை அதிகரிப்பதன்மூலம் $CI^-$ இன் செறிவை அதிகரிக்கலாம்.

45) கீழ்த்தரப்படும் பொறிமுறைப் படிகளில் எது சரியானது எவை சரியானவை?
a) $CH_4 \rightarrow CH_3 + H$

b)


c)


d)


46) பின்வருவனவற்றில் எது / எவை நீர்க்கரைசல் முன்னிலையில் இருவழி விகாரத்திற்குட்படும்?
a) $CI_3$ 2) S 3) $P_4$ 4) $NO_2$

A,B எனும் திரவங்கள் இலட்சியக் கரைசலைத் தோற்றுவிப்பன. A யிலும் B ஆனது ஆவிப்பறப்படையும் தன்மை கூடியது. $n_A : n_B = 1:3$ எனும் மூல்விகிதத்தில் இரு திரவங்களும் கலக்கப்பட்டு மூடியதொகுதியில் சமநிலையடைய விடப்பட்டது. சமநிலையில் A,B யினது மூல்ப்பின்னங்கள் முறையே YA, TB எனவும் திரவநிலையில் மூல்ப்பின்னங்கள் முறையே $X_A$,$X_B$ எனவும் அவ்வெப்ப நிலையில் தூய A,B கரைசல் ஆகியவற்றின் ஆவியமுக்கங்கள் முறையே $P^0_A$,$P^0_B$, $P_r$ எனின் வினா 47,48 இல் சரியான தொடர்புகள் எவையாகும்.

47. a) $Y_A > 0.25$ b) $Y_B > 0.75$ c) $Y_A < 0.25$ d) $Y_B < 0.75$

48. a) $P^o_A + P^o_B = P_T$ b) $P_T > P^o_A$ c) $P_T > P^o_A + \frac{P^o_B - P^o_A}{2}$ d) $PT > P^o_B$

49) கீழ்த்தரப்படும் கூற்றுக்களில் எது சரியானது எவை சரியானவை?
a) எல்லா எசுத்தருக்கும் காபொட்சிகலிக்கமிலச் சமபகுதிகமுண்டு.
b) எல்லா கீற்றோனுக்கும் அல்டிகைட்டுச் சமபகுதிகமுண்டு.
c) எல்லா அற்ககோலுக்கும் ஈதர்சமபகுதிகமுண்டு.
d) எல்லா கீற்றோனுக்கும் ஈனோல் சமபகுதிகமுண்டு.

50) கீழ்த்தரப்படும் எச்சேர்வைகளின் நீர்க்கரைசல்கள் நீல, சிவப்பு பாசிச் சாயத்தாள்களில் மாற்றத்தை ஏற்படுத்தாது?
a) LiF b) NaCI c) $C_3CIO_4$ d) $NH_4CI$

**வினா 51 தொடக்கம் வினா 60 வரை பின்வரும் அறிவுறுத்தலைப் பின்பற்றுக.**

| விடைத்தெரிவு | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| கூற்று I | உண்மை | உண்மை | உண்மை | பொய் | பொய் |
| கூற்று II | உண்மை கூற்றுI இற்குரிய விளக்கம் | உண்மை கூற்றுII இற்குரிய விளக்கம் இல்லை | பொய் | உண்மை | பொய் |

| கூற்று I | கூற்று II |
|---|---|
| 51. Al ஆனது யேழுர் நீர்க்கரைசலுடன் $H_2$ வாயுவைத் தரும். | Na OH நீர்க்கரைசலுடன் Al ஆனது $\{Al(OH)_4\}$ அயனைத் தோற்றுவிக்கிறது. |
| 52. $CoCO_3$ நீர்க்கரைசலுக்கு ஐதான HCl சேர்க்க மஞ்சள் | $(CoCl_4)^{2-}$ அயனைத் தோற்றுவிக்க போதியளவு $Cl^-$ அயன் செறிவு பேதாது. |
| 53. $NF_3$ நீர்ப்பகுப்பு அடையாது. | F ஆனது மிக உயர்ந்த மின்னெதிரியல்புப் பெறுமானம் உடையது. |
| 54. $25^0C$ யில் $1 \times 10^{-9}$ $moldm^{-3}$ செறிவுடைய யேழுர் நீர்க்கரைசலின் pH =5 ஆகும். | $25^0C$ யில் நீர்க்கரைசலில் $(H_3O+)_{(ag)}$ $(OH^-)_{(aq)}$ = 1x10-14 $mol^2dm^{-6}$ ஆகும். |
| 55. $NaHCO_3$, HCl நியமிப்புக்கு பினோத்தலீன் காட்டி பயன்படுத்த லாம். | $NaHCO_3$, HCl நியமிப்பின் சமவலுப்புள்ளி pH=7 இல் ஆகும். |
| 56. ஒரு இரசாயனத் தாக்கத்திற்கு ஊக்கியைப் பயன்படுத்துப்போது ஏவற்சக்தி குறைந்த படிக்குப் பயன்படுத்தவேண்டும். | நேர் ஊக்கியானது விளைபொருட்கள் உருவாகும் வீதத்தை அதிகரிக்கும். |
| 57. அசற்றோன் நீரில் கரையும். இருமெதையில் ஈதர் நீரில் கரையாது. | அசற்றோனில் C-O பிணைப்பின் முனைவுத் தன்மை ஈதரிலுள்ள C-O பிணைப்பின் முனைவுத் தன்மையிலும் அதிகமாகும். |
| 58 $CO_2$ வாயுவானது 300K இல் Z=1 எனும் பெறுமானத்தை எடுக்கும் வாய்ப்பற்றது. | $CO_2$ வாயு மூலக்கூறுகளுக்கிடையில் கவர்ச்சி விசை காணப்படுகின்றது. |
| 59. செறிந்த வன்னமிலங்களாலும் அமோனியா பேன்ற காரங்களாலும் இறப்பர்ப்பாலை திரள்வதைத் தடுக்கலாம். | செறிந்த வன்னமில, அமோனியா கொண்ட ஊடகங்களில் இறப்பர்த் துணிக்கைகள் எதிரேற்றப்பட்ட அயன் வடிவில் காணப்படுகின்றன. |
| 60. $5^0$ C யில் $CH_3$ $CH_2NH_2$ ஆனது $HNO_2$ உடன் $CH_2CH_2OH$ இனைத் தரும். | $5^0$ Cயில் $CH_3CH_2N_2Cl$ உறுதியற்ற சேர்வை ஆகும். |

61) அறைவெப்பநிலையில் ஒரு திரவ ஐதரோக்காபன் புரோமின் நீரை நிறநீக்கம் செய்தால் அந்த ஐதரோக்காபன் பின்வருவனவற்றுள் எது?

1) $C_2H_2$ 2) $C_2H_4$ 3) $C_7H_{16}$
4) $C10H_20$ 5) $C_2OH_4O$

62) $C_3H_6Cl_2$ எத்தனை சமபகுதியங்களைக் கொண்டுள்ளது?
1) 6 2) 5 3) 4
4) 3 5) 2

63) $CH_3$ - CH= C - CO - CH CH3 இன் IUPAC பெயர்
(C இல் $CH_3$, CH இல் $C_2H5$)

1) 3, 5 - டைமெதயில் எப்ற் - 5 ஈ - 4 ஒன்
2) 4 - மெதயில் - 2 - எதயில் எட்சு - 4 - ஈ - 3 - ஒன்
3) 2 - எதயில் - 4 - மெதயில் எட்சு - 4 - ஈ - 3 - ஒன்
4) 5 - எதயில் - 3 - மெதயில் எட்சு - 2 - ஈ - 4 - ஒன்
5) 3, 5 - டைமெதயில் எட்சு - 2 - ஈ - 4 - ஒன்

64) சேதனச் சேர்வையொன்று பின்வரும் இயல்புடையது
(a)  உடன் மஞ்சள் நிற வீழ்படிவைக் கொடுத்தது.

b) தொலன்சின் சோதனைப் பொருளுடன் வெள்ளியாடியைக் கொடுத்தது.
c) பீலிங்கின் கரைசலுடன் தாக்கமில்லை இச் சேர்வை பின்வருவனவற்றுள் எது?
1) $CH_3CHO$ 2) $CH_3CH_2OH$
3) $C_6H_5CGO$ 4) $C_6H_5OH$
5) $C_6H_5COCH_3$

65) $Sp_2$ கலப்புவகை ஓபிற்றல் காணப்படுபவை
a) $C_6H_5CH_3$ 2) $CH_3CHO$
c) $CH_3OCH_3$ 4) $C_2H_2$

66) $C_8H_8O$ ஐ மூலக்கூற்றுச் சூத்திரமாகவுள்ள அரோமாற்றிச் சேர்வை பிராடியின் சோதனைப் பொருளுடன் செம்மஞ்சள் நிற வீழ்படிவைக் கொடுக்கும் சமபகுதியங்களின் எண்ணிக்கை
1) 3 2) 4 3) 5 4) 6 5) 7

67) $CH_3COCH_2CO_2CH_3$+ ⌬- NHNH2 → Q விளைவு, Q ஆக அமைவது.
1) $CH_3COCH_2CONH$ - ⌬
2) ⌬ - NH - N= $CH_2COCH_3$ ($CH_3$)
3) ⌬ - $NHCH_2CO_2CH_3$
4) $CH_3COCH_2CO$⌬ ⌬ - $NHNH_2$
5) ⌬- NH - N = C - $CO_2H$ (C இல் $OCH_3$)

68) பின்வருவனவற்றில் எது /எவை தொலன்சின் சோதனப் பொருளுடன் வெப்பமேற்ற வெள்ளி ஆடியைத் தரும்.
a) $CH_3CH_2OH$ b) $CH_3CHO$
c) $CH_3COCH$ d) HCOOH
1) a,b 2) b.c 3) c,d 4) b,d 5) a,d

69) $CH_3CHO$ இலிருந்து ஆரம்பித்து இலத்திரிக் அமிலத்தை தொகுக்க வேண்டியுள்ளது. இதற்கு மிகப் பொருத்தமான முதல் படிமுறை.
1) $CH_3CHO$ ஐ பீலிங்கின் கரைசலுடன் வெப்பமேற்றுதல்
2) $CH_3CHO$ ஐ தொலனின் சேதனப் பொருளுடன் வெப்பமேற்றுதல்
3) $CH_3CHO$ ஐ NaCN ஐதான HCl உடன் சேர்த்தல்
4) $CH_3CHO$ ஐ $CH_3MgBr$ உடன் சேர்த்தல்.
5) $CH_3CHO$ ஐ Na / $C_2H_5OH$ உடன் சேர்த்தல்

70) ஒரு எசுததரை நேரடியாக உருவாக்க பொருத்தமற்ற சோடியாக அமைவது
1) $CH_3COOH + CH_3CH_3CH_2OH$
2) $CH_3COOH + CH_3 - CH - CH_3$ (CH இல் OH)
3) $CH_3COCl + CH_3CH_2OH$
4) $C_6H_5COOH + CH_3CH_2OH$
5) $C_6H_5OH + CH_3COOH$

71 பின்வருவனவற்றில் எது / எவை சோடியத்துடன் தாக்கமுற்று ஐதரசன் வாயுவை வெளியேற்றும்.



1) a,b 2) b,c 3) a,c 4) a 5) a,b,c

72) பின்வருவனவற்றுள் அமிலவலு ஏறுவரிசையில் உள்ளது எது?
1) $CH_3CH_2OH$, $C_6H_5OH$, $CH_3COOH$, HCOOH
2) HCOOH, $CH_3COOH$, $C_6H_5OH$, $CH_2OH$
3) $CH_3COOH$, HCOOH, $C_6H_5OH$, $CH_3$ $CH_2OH$
4) $CH_3$ $CH_2$ OH, $C_6H_5OH$, HCOOH, $CH_3$ COOH
5) $C_6H_5OH$, $CH_3$ $CH_2OH$, $CH_3COOH$, HCOOH

73) பின்வருவனவற்றின் எவை $C_6H_5COOH$ உடன் தாக்கமுறும்
a) $CH_3NH_2$ b) $CH_3CH_2OH$ c) $H_2O$ d) $CH_3CONH_2$
1) a,b 2) b,c 3) a,b,c 4) b,c,d 5) a,b,c,d

74) பின்வருவனவற்றில் எது $NaNO_2$ / ஐதான HCl உடன் தாக்கமடைந்து முதல் அற்ககோலைத் தரும்
1) $(CH_3)_2$ $CHNH_2$ 2) $(CH_3)_3CNH_2$
3) $CH_3CH_2NHCH_3$ 4) $C_6H_5$ $NH_2$ 5) $C_6$ $H_5$ $CH_2$ $NH_2$

75) $CH_3$ COOH இலிருந்து ஆரம்பித்து ⌬ - C(=O) - $CH_3$ என்ற சேர்வையை தொகுக்க வேண்டியுள்ளது. இம் மாற்றத்தின் முதற் படிமுறைக்கு தேவையான பதார்த்தம்
1) $LiAlH_4$ 2) $PCl_3$ 3) Na/$C_2H_5OH$
4) Na 5)$Na_2CO_3$

# கூட்டணிக் கட்சிகள் நெருக்கடி மத்திய அரசு தள்ளாட்டம்

(புதுடில்லி)

புதுடில்லி: கூட்டணி கட்சிகளிடமிருந்து வரும், அடுத்தடுத்த நெருக்கடிகளால், மத்திய அரசு தள்ளாடுகிறது. மம்தாவை தொடர்ந்து, தற்போது தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவாரும், மத்திய அரசுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளார். இதனால், சரத் பவாரிடம் காங்கிரஸ் தலைவர்கள் இணக்கப் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர்.

மத்திய அமைச்சரவையில், பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அடுத்த இடத்தில் பிரணாப் முகர்ஜி இருந்தார். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக, அவர் பதவி விலகியதால், இரண்டாம் இடத்தில் சரத் பவார், அமர்த்தப்படுவார் என, செய்திகள் வெளியாகின. இந்த விவகாரத்தில், காங்கிரஸ் மேலிடம், அதிரடியாக காய் நகரத்தியது. இராணுவ அமைச்சரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான அந்தோனியை, இரணடாவது இடத்தில் அமர்த்தியது. சமீபத்தில் நடந்த மத்திய அமைசசரவைக் கூட்டத்தில், பிரதமருக்கு அடுத்த இடத்தில் அந்தோனி அமர்ந்திருந்தார்.

காங்கிரஸ் கட்சியின் இந்த அரசியல் தந்திரம், தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவாருக்கு, கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது. மாலை நடந்த மத்திய அமைச்சரவைக் கூட்டத்தை, சரத் பவாரும், அவரது கட்சியைச் சேர்ந்த மற்றொ மத்திய அமைச்சரான பிரபுல் படேலும் புறக்கணித்தனர். மத்திய அமைச்சரவையில், பவாருக்கு, இரண்டாவது இடம் ஒதுக்கப்படாததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், அமைசசரவைக் கூட்டத்தை, அவர், புறக்கணித்ததாகவும், பவாரும், படேலும், தங்களின் அமைச்சர் பதவிகளை இராஜினாமா செய்ய விருப்பம் தெரிவித்து, பிரதமருக்கு கடிதம் அனுப்பியதாகவும், தகவல் வெளியானது. இதனால், பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து, அன்றிரவே, பிரதமர் மன்மோகன் சிங்கை, சரத் பவார் சந்தித்துப் பேசினார். அப்போது, அமைச்சரவையில், தனக்கு ஏற்பட்ட அவமரியாதை குறித்து, பிரதமரிடம் அதிருப்தி தெரிவித்ததாகத் தெரிகிறது.

# தீப்பெட்டி ஆலையில் தீ

(புதுடில்லி)



தமிழ்நாடு கோவில்பட்டி காந்தி நகரில் தீப்பெட்டி தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் தொழிற் சாலை முற்றாக எரிந்து சாம்ப லாகியுள்ளது. அங்கு தயாரிக்கப்பட்ட தீக்குச்சிகள் தொழிற் சாலையின் பின்பகுதியில் உள்ள குடோனில் வைக்கப் பட்டிருந்தன. நேற்றிரவு அங்கு திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

இது குறித்து கோவில்பட்டி தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

எனினும் ரூ.10 இலட்சம் மதிப்பிலான தீக்குச்சிகள் மற்றும் பல்வேறு பொருட்கள் எரிந்து நாசமாகின. தீ விபத்துக்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. இது குறிதது பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சத்தீஸ்கர் முதலமைச்சர் மீது 140 கோடி ரூபா ஊழல் குற்றச்சாட்டு



(புதுடில்லி)

சத்தீஸ்கர் மாநிலத்தில் ராமன் சிங் தலைமையில் பாரதிய ஜனதா ஆட்சி நடந்து வருகிறது. ராமன்சிங் மீது முக்கிய எதிர்க்கட்சியான காங்கிரஸ் கடசி ஊழல் குற்றசாட்டு ஒன்றை சுமத்தியுள்ளது.

சத்தீஸ்கர் மாநிலம் கோர்பா மாவட்டத்தில் பாரத் அலுமினியம் நிறுவனம் (பால்கோ) உள்ளது. இந்த நிறுவனத்தின் நிலம் மற்றும் சொத்துக்கள் சமீபத்தில் சீரமைப்பு செய்யப்பட்டன. அப்போது முதலமைச்சர் ராமன்சிங், மற்றும் பால்கோ நிறுவனத்தின் முன்னாள் அதிகாரிகள் உம்மன், குஞ்சன் குப்தா ஆகியோர் ரூ.140 கோடிக்கு ஊழல் செய்ததாக காங்கிரஸார் குற்றம் சாட்டினார்கள். மேலும் இதனால் அரசுக்கு வருமான இழப்பு ஏற்பட்டு இருப்பதாகவும் கூறப்பட்டது.

இந்த நிலையில் ராமன்சிங் மீது ரூ.140 கோடி ஊழல் செய்ததாக சத்தீஸ்கர் மாநில காங்கிரஸ் தலைவர் புபேஸ் பகெல் ராய்ப்பூர் செசன்ஸ் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்துள்ளார். இந்த வழக்கு விசாரணை நேற்று முன்தினம் ராய்ப்பூர் நீதிமன்றில் நடந்தது.

குற்றச்சாட்டு தொடர்பாக ஆதா ரங்களை சமர்ப்பிக்குமாறு கூறிய நீதிமன்றம் இந்த வழக்கின் அடுத்தக் கட்ட விசாரணை வருகிற 4 ஆம் திகதி நடைபெறும் என்று உத்தரவிட்டுள்ளது.

# மிசோராமில் நிலச்சரிவு பேருந்து கவிழ்ந்து 18 பேர் பலி



(சென்னை)

மிசோராம் மாநிலத்தின் தலைநகர் ஐசாலில் இருந்து 100 கி.மீ தொலைவில் அமைந்துள்ள கேபாங் என்கிற கிராமத்தில் நேற்று அதிகாலை சிறிய அளவில் நிலச்சரிவு ஏற்பட்டது.

இந்த நிலச்சரிவில் சிக்கி அரசு பேருந்து ஒன்று பெரிய பள்ளத்தாக்கில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் பேருந்தில் பயணம் செய்த 18 பேர் பலியாகி உள்ளனர். மேலும் 17 பேர் படுகாயமடைந்துள்ள்னர்.

காயமடைந்தவர்கள் ஐசால் அரசு மருத்துவமனையில் சிசிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இறந்தவர்களில் 9 பேரின் உடல்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளது.




# பிணை வழங்கக் கோரி நீதிபதிக்கு 100 கோடி இலஞ்சம்



(ஐதராபாத்)

கர்நாடக முன்னாள் அமைச்சர் ஜனார்த்தன் ரெட்டிக்கு பிணை வழங்க, அவர் குடும்பத்தினர் தமக்கு ரூ. 100 கோடி வரை இலஞ்சம் தர தயாராக இருந்ததாக, இவ்வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள நீதிபதி இல்ட்சுமி நரசிம்ம ராவ் சி.பி.ஐ. அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

கர்நாடக மாநிலம், பெல்லாரியில் ஓபுலாபுரம் சுரங்க நிறுவனம் நடத்தி வந்தவர், மாநில முன்னாள் அமைச்சர் ஜனார்த்தன் ரெட்டி. இவர் மீது எழுந்த பல்வேறு குற்றச்சாட்டுகள் குறித்து, சி.பி.ஐ. விசாரணை நடத்தியது. தொடர்ந்து, அவர் கைது செய்யப்பட்டு, தற்போது பெங்களூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அவர் மீதான வழக்கு ஐதராபாத்தில் உள்ள சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. இந்த வழக்கை முதன்மை கூடுதல் சிறப்பு நீதிபதி டி.பட்டாபிராம ராவ் விசாரித்து வந்தார். ஜனார்த்தன் ரெட்டி பிணை வழங்கக்கோரி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். ஆனால், அவருக்கு பிணை வழங்கினால் சாட்சிகளை கலைத்து விடுவார் எனக் கூறி அதற்கு சி.பி.ஐ. எதிர்ப்பு தெரிவித்தது.

இந்நிலையில், அவருக்கு மே 11ம் தேதி, சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் நிபந்தனை பிணை வழங்கியது. இந்நிலையில், அவரை பிணையில் விடுவிக்க, 1.80 கோடி ரூபாயை நீதிபதி பட்டாபிராமராவ் இலஞ்சம் பெற்றார் என சி.பி.ஐ. கண்டறிந்தது. ஐதராபாத்தில் உள்ள வங்கி லாக்கரில் கணக்கில் வராத ஒரு கோடியே 80 இலட்ச ரூபாய் இருந்ததை சி.பி.ஐ. கண்டுபிடித்து கைப்பற்றியது.

அந்த லாக்கரின் சாவி, நீதிபதி பட்டாபிராமராவின் மகனிடமிருந்து கைப்பற்றப்பட்டது. இதை அடுத்து நீதிபதி பட்டாபிராமராவ் பணிநீக்கம் செய்யப்பட்டார்.

இவ்வழக்கு தொடர்பாக இம்மாத ஆரம்பத்தில் மேலும் இரண்டு நீதிபதிகள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவரான இலட்சுமி நரசிம்மராவிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் நடத்திய விசாரணையில் ஜனார்த்தன் ரெட்டி ஜாமினில் வெளிவர அவரது குடும்பத்தினர் தனக்கு ரூ. 100 கோடி வரை தர முன்வந்ததாக தெரிவித்துள்ளார்.

கர்நாடக முன்னாள் அமைச்சர் ஒருவர் பிணையில் வெளிவர ரூ. 100 கோடி வரை இலஞ்சம் தர முன்வந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தண்ணீரில் அம்மன் உருவம்



(சென்னை)

கடலூர் திருப்பாதிரிபுலியூர் சுப்புராயலு நகர் குப்பன் குளத்தில் பூஞ்சோலையம்மன் கோவில் உள்ளது. இங்கு ரூ.15 லட்சம் செலவில் திருப்பணிகள் நடந்து வருகின்றன. இதையொட்டி கோவில் மண்டபத்தின் வலது பக்கத்தில் அம்மன் உருவபடத்தை வைத்து வழிபட்டு வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் அம்மனுக்கு முன்பு சுமார் இரண்டரை அடி உயர அண்டாவில் தண்ணீர் நிரப்பி வைத்திருந்தனர். அண்டாவிலிருந்த தண்ணீரில் அம்மன் உருவம் தெரிவதாக தகவல் வெளியானது.

இதையடுத்து இந்த தகவல் ஊர் முழுவதும் பரவியது. இதைத்தொடர்ந்து மக்கள் அங்கு கூட்டம் கூட்டமாக வந்தனர். அண்டாவில் அம்மன் உருவம் தெரிவதை பார்த்து பரவசமடைந்தனர்.

சிலர் தேங்காய் பழம் வைத்து கற்பூரம் ஏற்றி வழிபட்டனர்.

இதுகுறித்து குப்பன்குளம் ஊர் தலைவர் சாமிநாதன் தெரிவிக்கையில்,

தினமும் அண்டாவில் உள்ள தண்ணீரை புதிதாக மாற்றி வைப்போம் நேற்றுமுன்தினம் காலை தண்ணீரை அப்புறப்படுத்தி விட்டு சிறுவர்கள் புதிய தண் ணீரை ஊற்ற வந்தார்கள். அப்போது தண்ணீரின் மேற்பகுதியில் அம்மன் உருவம் தெரிவதை பார்த்து எங்களிடம் தெரிவித்தனர். நாங்களும் வந்து பார்த்து ஆச்சரியம் அடைந்தோம் என்று கூறினார்.

# திரையரங்கில் துப்பாக்கி வேட்டு

# அமெரிக்காவில் 14 பேர் உயிரிழப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்க திரையரங்கில் திடீரென நுழைந்த மர்ம நபர் ஒருவர் அங்கிருந்த பார்வையாளர்களை நோக்கி கண்மூடித்தனமாக சுட்டதில், 14 பேர் பலியாகினர். 50 பேர் படுகாயமடைந்தனர்.

அமெரிக்காவின் கொலராடோ மாகாணத்தின் டென்வர் நகரில், அரோரா என்ற இடத்தில் உள்ள திரையரங்கில், வவ்வால் மனிதனின் கதையை அடிப்படையாக கொண்ட, தி டார்க் நைட் ரைசஸ் என்ற படத்தின் முன்னோட்டக் காட்சி திரையிடப்பட்டது. ஏராளமானவர்கள் திரையரங்கில் இருந்தனர். திரையரங்க அவசர வழி வழியாக நுழைந்த ஒருவர் புகையிலிருந்து பாதுகாக்கும் முக கவசத்தை அணிந்திருந்தார். உள்ளே நுழைந்த உடன் கண்ணீர் புகை குண்டை வீசினார். இதனால், திரையரங்கம் முழுவதும் புகை மூட்டம் சூழ்ந்தது. இதை தொடர்ந்து அந்த நபர், கண்மூடித்தனமாக பார்வையாளர்களை நோக்கி இயந்திரத் துப்பாக்கியால் சுட்டதில், 10 பேர் சம்பவ இடத்திலேயே இறந்தனர். நான்கு பேர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, சிகிச்சை பலனின்றி இறந்தனர். காயமடைந்த 50 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தகவல் அறிந்து விரைந்த பொலிஸார், 24 வயதுடைய அந்த நபரை கைது செய்துள்ளனர். இவர் தங்கியிருந்த வீட்டில் வைத்திருந்த வெடிமருந்து பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. எதற்காக இந்த துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது என்பது குறித்து, அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

இச்சம்பவத்துக்கு அமெரிக்க அதிபர் அதிர்ச்சியும் கண்டனமும் தெரிவித்துள்ளார். "குற்றவாளி யாராக இருந்தாலும் அவர் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார். பலியானவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறேன் என அதிபர் ஒபாமா தெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்

# போதிய உடற்பயிற்சி இல்லாததால் ஆண்டுதோறும் 50 இலட்சம் பேர் மரணம்



(லண்டன்)

டிலான்செட் என்ற மருத்துவ பத்திரிக்கை ஒன்று உடற்பயிற்சி குறித்து ஆய்வு செய்து தகவல் வெளியிட்டுள்ளது. அதில் நோய்களை விட உடற்பயிற்சி இல்லாமல் மரணம் அடைபவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் போதிய உடற்பயிற்சி இல்லாமல் மட்டும் 50 இலட்சம் பேர் உயிரிழப்பதாக அந்த ஆய்வு கூறுகிறது. சமீப ஆண்டுகளாகத்தான் மக்கள் உடற்பயிற்சியில் அதிக ஆர்வம் காட்டாமல் இருப்பதாகவும் அந்த ஆய்வு கூறுகிறது. உடற்பயிற்சி செய்தால் இதய நோய், சர்க்கரை நோய், ஒருவகை புற்றுநோய் போன்றவற்றை 10 சதவீதம் குறைத்துவிடலாம் என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

சைக்கிள் ஓட்டம் தோட்டவேலை செய்வது போன்றவற்றை செய்தால் கூட அது உடலுக்கு போதுமான பயிற்சி அளிக்கும். வாரத்துக்கு இரண்டரை மணி நேரமாவது உடற்பயிற்சி செய்தால் அது உடலுக்கு போதுமானது என்றும் ஆய்வு அறிக்கை கூறுகிறது.

# சர்ச்சையைக் கிளப்பிய எயிட்ஸ் மருந்து



எயிட்ஸ் வராமல் தடுக்க, அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட 'த்ருவதா' என்ற புதிய மருந்து, சர்ச்சையையும் ஏற்படுத்தி உள்ளது.எய்ட்ஸ் நோய் தாக்கிய பிறகு, அதை முற்றிலும் சரி செய்ய இதுவரை மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை. இருப்பினும் பாதிப்பை குறைக்க ஏற்கனவே மருந்துகள் இருக்கின்றன. தற்போது அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மருந்து, எச்.ஐ.வி., பரவாமல் 73 சதவீதம் தடுக்கும் என நம்பப்படுகிறது. இம்மருந்துக்கு எதிர்ப்பு குரலும் வலுக்கிறது. மருந்தை யார் எதிர்க்கின்றனர் என நீங்கள் நினைக்கக் கூடும். அதற்கு வேறு காரணம் இருக்கிறது.

இம்மருந்தால், அச்சம் நீங்கி, தவறான பழக்க வழக்கங்கள் அதிகரித்து, சமூக ஒழுக்கம் பாதிக்கப்படும் என்பது தான் காரணம். எயிட்சால் பாதிக்கப்படாத நபர் தொடர்ச்சியாக, 'த்ருவதா' மருந்தை எடுத்துக் கொள்ள வேண்டும். கணவர் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டிருந்தால், மனைவி இந்த மருந்தை பயன்படுத்துவது நல்ல பலனைத் தரும்.

2010இல் நடந்த ஆய்வில், 'த்ரு வதா' மருந்து 44சதவீதம் எச்.ஐ. வி., பரவுவதை தடுத்தது. தொடர் ஆராய்ச்சியால், தற்போது 73 சதவீதம் தடுக்கிறது. இந்த மருந்தை தொடர்ந்து எடுத்துக் கொண்டால் மட்டுமே நோய் பரவாது என்கின்றனர். பிரிட்டனில் 'த்ருவதா' மருந்து எயிட்ஸ் நோய் சிகிச்சைக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. எயிட்ஸ் வராமல் தடுக்க பயன்படுத்துவதில்லை.சர்ச்சைகள் ஒரு பக்கம் இருக்க, இம்மருந்து மீதான ஆராய்ச்சி இன்னமும் தொடர்கிறது

# ஜனாதிபதி, பிரதமரின் சம்பளங்கள் பிரான்சில் குறைப்பு

பிரான்ஸ் அதிபர், பிரதமருக்கான சம்பளத்தை 30 சதவீதம் வரை குறைக்க அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் கடும் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளதால், பல்வேறு சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒருபகுதியாக பிரான்ஸில் அதிபர், பிரதமர், அமைச்சர்களுக்கான சம்பளத்தை குறைக்க முடிவு செய்யப்பட்டது. அந்நாட்டு நாடாளுமன்ற கீழவையில் அதிபர், பிரதமர், அமைச்சர்களுக்கான சம்பளத்தை குறைக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன்படி அதிபர் பிரான்ஃவா ஹொலாந்தின் மாத சம்பளம் சுமார் ரூ.14 இலட்சம் என்பதில் இருந்து ரூ.10 லட்சமாகக் குறையும். கடந்த மே மாதத்தில் ஹொலந்த், பிரான்ஸ் அதிபராகப் பதவியேற்ற பின் எடுத்த முதல் சிக்கன நடவடிக்கை இது. முதலில் அதிபர், பிரதமரின் சம்பளத்தைக் குறைத்து விட்டு, பின்னர் பொது மக்கள் தொடர்பான விஷயத்தில் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர் திட்டமிட்டுள்ளார்.



# பாதுகாப்பு பணிகள் பாதிக்கப்படுமா? தனியார் நிறுவனத்தால் சிக்கல்

(லண்டன்)

ஒலிம்பிக் போட்டியின் போது, பாதுகாப்பு பணிக்காக 10 ஆயிரம் வீரர்களை வழங்குவதாக கூறியிருந்த தனியார் நிறுவனம், போதியளவான வீரர்களை வழங்காததால் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

லண்டனில் எதிர்வரும் 27ஆம் திகதி தொடங்கும் ஒலிம்பிக் போட்டியை சீர்குலைக்க, பயங்கரவாதிகள் சதித் திட்டம் தீட்டியுள்ளதாக புலனாய்வு துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதனையடுத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒலிம்பிக் போட்டிகள் நடக்கும் அரங்கங்களுக்கு அருகே உள்ள கட்டிடங்களின் மீது ஏவுகணைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள பொலிஸார், இராணுவத்தை தவிர்த்து, தனியார் நிறுவனத்தை சேர்ந்த 10 ஆயிரம் வீரர்களை வழங்க கோரி ஜி4எஸ் என்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது.




ஆனால், இந்த நிறுவனம் தற்போது திடீரென, எங்களால் 4 ஆயிரம் வீரர்களை மட்டுமே வழங்க முடியும் என தெரிவித்துள்ளது. இதனால் இந்த நிறுவனத்துடனான ஒப்பந்தம் இரத்தாகும் சூழல் ஏற்பட்டுள்ளது. மேலும் ஒலிம்பிக் போட்டிகான நாள் நெருங்கி விட்ட நிலையில், நிலைமையை சமாளிக்க இராணுவத்தினர் முன்வந்துள்ளனர்.

# அமெரிக்க இராணுவத்திற்கு 33இலட்சம் கோடி ரூபா ஒதுக்கீடு



அடுத்த ஆண்டுக்கான இராணுவ செலவினங்களுக்காக அமெரிக்கா சுமார் 33 இலட்சம் கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளது.

2013 ஆம் ஆண்டுக்கான இராணுவ செலவினங்களுக்கான நிதியொதுக்கீடு தொடர்பில் கடந்த இரண்டு தினங்களாக விவாதிக்கப்பட்ட நிலையிலேயே இந்த நிதி ஒதுக்கீடு இடம்பெற்றுள்ளது.

இதற்கமைய அடுத்த ஆண்டுக்கான இராணு செலவினங்களுக்காக 33 லட்சத்து 38 ஆயிரத்து 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியில் ஆப்கானிஸ்தான் மற்றும் வெளிநாட்டு படைகளுக்காக 4 இலட்சத்து 15ஆயிரம் கோடி செலவிடப்படவுள்ளது.இந்த நிதி ஒதுக்கீடு தொடர்பில் செனட் சபையின் ஆய்விற்கு பிறகு ஜனாதிபதி பராக் ஒபாமா கையெழுத்திடுவார் என தெரிவிக்கப்படுகிறது.

# செவ்வாய் கிரகத்திற்கு 2030இல் செல்லலாம்

பூமியில் இருந்து செவ்வாய் கிரகத்திற்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்தை நாசா உருவாக்கியுள்ளது.இந்த திட்டம் 2030 ஆண்டு அமுல்படுத்தப்பட உள்ளது. இவ்வாறு செவ்வாய் கிரகத்திற்கு செல்லும் விஞ்ஞானிகள் அங்கு 18 மாத காலங்கள் தங்கியிருக்க திட்டமிடப்பட்டுள்ளது.

செவ்வாய் கிரகத்திற்கு செல்வதற்கு ஆறு மாத காலமும், அங்கிருந்து பூமிக்கு திரும்பி வர ஆறு மாத காலமும் செல்லும்.

இதனடிப்படையில் மொத்தமாக சுமார் 3 வருடங்கள் விஞ்ஞானிகள் இந்த பயணத்தில் இருப்பர்.இந்த நிலையில் இவர்களுக்கு எந்த விதமன உணவுகளை தயாரிப்பது என்பது தொடர்பில் தற்சமயம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# வடக்கின் வசந்தத்தில் வஞ்சிக்கப்படும் மக்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் திட்டத்தினூடான மின்சாரம் பல கிராமங்களுக்கு வழங்கப்பட்டுவரும் நிலையில் கிளிநொச்சி விவேகானந்தநகர்ப் பகுதியில் மின் இணைப்புக்கு நடப்பட்ட மின் கம்பங்கள் மின்சார சபையினரால் பிடுங்கிச் செல்லப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

ரெலிக்கொம் கோபுரத்துக்கு அருகாமையிலுள்ள வீதியில் நடப்பட்ட மின்கம்பங்களே இவ்வாறு மின்சார சபையினரால் பிடுங்கிச் செல்லப்பட்டதாக தெரிவித்த அப்பகுதி மக்கள் இது தொடர்பாக பிடுங்கியவர்களிடம் கேட்டபோது தமது தேவைக்குப் பிடுங்கிச் செலல்லப்பட்டதாக தெரிவித்ததாகவும் குறிப்பிட்டனர்.

இது ஒருபுறம் இருக்க இந்த ரெலிக்கொம் அருகாமை வீதி புனரமைப்புக்கென கடந்த மாதங்களில் சல்லிக் கற்கள் பறிக்கப்பட்டு அவை சில வாரங்களில் பரவப்பட்டும் இருந்தன. அண்மையில் திடீரென வந்த இந்த வீதி ஒப்பந்தகாரர்கள் பரவப்பட்ட சல்லிக் கற்கள் அனைத்தையும் மீண்டும் ஏற்றிச் சென்றுள்ள சம்பவமும் இந்த விவேகானந்தநகர் பகுதியில் இடம்பெற்றுள்ளதாகவும் அப்பகுதி பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த இரு சம்பவங்கள் தொடர்பிலும் அப்பகுதி மக்கள் கடும் கவலையடைந்திருப்பதாக அங்குள்ள கிராம சேவையாளரும் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக கிராமத்தின் அபிவிருத்தி ஆர்வலர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கும் போது அபிவிருத்தியை எதிர்நோக்கியிருக்கும் மக்கள் குறிப்பிட்ட இந்தக் கிராமத்திற்கு ஏன் புயல் வீசுகின்றது என தமக்குப் புரியவில்லை என்றும் தெரிவிக்கின்றார்.

கிளிநொச்சி கிருஷ்ணபுரம் பகுதி விவசாயிகள் தமது விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான போக்குவரத்து வசதிகளின்றி சிரமப்படுவதாக, பிரதேச சபையின் உறுப்பினரும் அப்பகுதியின் மக்கள் பிரதிநிதியுமான கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

குறிப்பாக கிருஷ்ணபுரத்தையும், அம்பாள்குளம் கிராமத்தையும் இணைக்கும் பகுதியில் வாய்க்கால்கள் அமைந்திருப்பதாகவும் இந்த வாய்க்கால் ஊடாக பயணிக்கும் மக்களும் விவசாயிகளும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் கிருஷ்ணசாமி குறிப்பிட்டார்.

இதனால் கிருஷ்ணபுரம் விவசாயிகள் பலர் பாரதிபுரம் கிராமம் ஊடாக தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு எடுத்துச் செல்லும்போது நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளதாகவும் இதனை இலகுபடுத்த இந்த வாய்க்கால் பகுதியில் பாலம் ஒன்று அமைக்கப்பட வேண்டியது அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பகுதியில் பாலம் அமைக்கப்படுவதன் அவசியம் குறித்த கோரிக்கை ஒன்றும் ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரிடம் முன்மொழியப்பட்டுள்ளதாகவும் இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு பங்களிப்பு வழங்கிவரும் நாடாளுமன்ற உறுப்பினர் இந்த முன்மொழிவுகளையும் ஏற்று அதற்கு செயல்வடிவம் தருவார் என்ற நம்பிக்கை தமக்கிருப்பதாகவும் கிருஷ்ணசாமி மேலும் தெரிவித்தார்.

# திருவடி முதியோர் இல்லம் மீள ஒப்படைக்கப்பட்டது

(கிளிநொச்சி)

வன்னியில் நடைபெற்ற இறுதிப்போருக்குப் பின்னர் இந்த முதியோர் இல்லம் படையினரின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. இந்த முதியோர் இல்லத்தை மீண்டும் இயக்குவதற்கு அதனை மீளவும் ஒப்படைக்குமாறு குறித்த முதியோர் இல்லத்தின் நிர்வாகத்தினர் தொடர்ச்சியாக படையினரையும் அரசாங்கத்தையும் கேட்டு வந்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் திருவடி முதியோர் இல்லத்தை மீளவும் இயங்கும் வகையில் குறித்த நிர்வாகத்தினரிடம் படையினர் ஒப்படைத்துள்ளனர்.

இது குறித்த தகவலை திருவடி முதியோர் இல்ல நிர்வாகத்தின் தலைவரும் கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னாள் அரசாங்க அதிபருமான தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார். இந்த முதியோர் இல்லத்தில் 75 வரையான முதியோர் யுத்த காலத்தில் பராமரிக்கப்பட்டு வந்தனர். பின்னர் இவர்கள் திருகோணமலையில் உள்ள முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டு அங்கே தற்காலிகமாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

# வடக்கில் பல இடங்களில் வெடிபொருட்கள் மீட்பு

வவுனியா, முல்லைத்தீவு மற்றும் யாழ்பாணம் ஆகிய இடங்களில் கடந்த ஒருவார காலத்தில் பெருமளவான வெடிபொருட்களும் ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளதாக யாழ் பிராந்திய பொலிஸ காரியாலயப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன கடந்த 17 ஆம் திகதி யாழ்ப்பாணம் மானிப்பாய்ப் பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து ரி-56 ரக துப்பாக்கியும் அவற்றிற்கான 18 ரவைகளும் 2 கைக்குண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு பிரதேச சபைக காரியாலயத்தின் கிணற்றுக்குள் இருந்து விமான எதிர்ப்புக் குண்டுகள் 3 மீட்கப்பட்டுள்ளதுடன் 560 ரவைகளும் மீட்க்கப்பட்டுள்ளன மாங்குளம் புகையிரதப்பதையில் கிரனைற் லோஞ்சர் ஒன்றும் மூன்று குண்டுகளும் மீட்க்கப்பட்டுள்ளன. வவுனியா செட்டிகுளம் பகுதியில் கடந்த 13 ஆம் திகதி வவுனியா செட்டிகுளம் பகுதியில் விசேட அதிரடிப்படையினரால் 127 டெக்னேற்ரர்கள் மீட்க்கப்பட்டுள்ளதாகவும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

அதேபோல் நேற்று சனிக்கிழமை முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் 200 கிராம் நிறையுடைய ரி.என்.ரி பொருட்களும் மீட்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (02,பா)

# முதலாவது ஒருநாள் போட்டி இந்திய அணிவெற்றி

(அம்பாந்தோட்டை)

இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கிடையில் அம்பாந்தோட்டை மைதானத்தில் நேற்று இடம்பெற்ற முதலாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் இந்திய அணி 21 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 314 ஓட்டங்களைக் குவித்தது. இதில் சேவாக் 96, ஹோலி 106 ரெய்னா 50, டோனி 35 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் பெரேரா 3, குலசேகர மற்றும் மத்தியூஸ் தலா 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுகபு 315 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய இலங்கை அணியில் சங்ககார தனிநபராக நின்று போராடியபோதிலும ஏனைய வீரர்கள் ஒத்துழைப்பு வழங்காததன் காரணமாக 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 293 ஓட்டங்களை எடுத்து 21 ஓட்டத்தால் தோல்வியை தழுவியது. சங்ககார 133 (15 ஆவது சதம்) பெரோ 44, தரங்க 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பதான், யாதவ், அஸ்வின் மூவரும தலா 2 சகீர்கான், ஓஜா இருவரும தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர். ஆட்டநாயகனாக ஹோலி தெரிவானார்.




# தரைவழி தொலைபேசி இணைப்பு தீவகத்திற்கு வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதிக்குத் தரைவழித் தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்குச் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நடவடிக்கை எடுத்துவருகின்றது.

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையாக யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறை வீதி வழியாக இந்த தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்கான கம்பங்கள் நாட்டப்படுகின்றன.

கடந்த யுத்தகால சூழ்நிலைக்ள் காரணமாக யாழ்ப்பாணத்தில் இருந்து தீவுப்பகுதிக்கான தரைவழித் தொலைத்தொடர்பு சேவை பாதிக்கப்பட்டிருந்ததுடன் முற்றாகச் செயழிழந்திருந்தது. தற்சமயம் அல்லைப்பிட்டிச் சந்தியில் இருந்து மண்டைதீவுச் சந்திவரையுமான பகுதிகளில் தொலைத்தொடர்புக் கம்பங்கள் நாட்டப்பட்டு வருகின்றன. (பா)

# இறுதிக்கட்ட நிதி ஐ.எம்.எப் இணக்கம்

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வந்த கடனுதவியின் இறுதிக்கட்ட 415 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் இணக்கம் தெரிவித்துள்ளது. 2.6 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனுதவியாக வழங்க ஏற்கனவே சர்வதேச நாயண நிதியம் சம்மதித்திருந்தது. அக்கடனுதவி இலங்கைக்கு கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வந்த நிலையிலேயே நேற்று முன்தினம் இறுதிக்கட்ட கடனுதவியான 415 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க சர்வதேச நாணய நிதியம் சம்மதம் தெரிவித்துள்ளது.

## அமெரிக்கத்...

தனிப்பட்ட நபர்கள் மீதான தாக்குதல்கள் அண்மைக் காலங்களாக அதிகரித்துள்ளதால் தற்போது யாழ். மாவட்டத்தில் வாழ்கின்ற மக்கள் அச்ச உணர்வுடன் வாழ்வதாகவும் வீதிச் சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டிருந்தபோதும் சில இடங்களில் இராணுவப் பிரசன்னங்கள் அதிகமாக காணப்படுவதாக தான் எடுத்துக் கூறியதாகத் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் கல்வியின் செயற்பாடு அபிவிருத்தி போன்ற விடயங்கள் குறித்துத் தூதுவர் கேட்டறிந்ததாகவும், குடாநாட்டில் நகர்ப்புற கல்வி தற்போது அபிவிருத்தி கண்டுவரும் நிலையில் கிராமப் புறங்களின் கல்வி நிலை மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதாக தான் எடுத்துக் கூறியுள்ளதாக அவர் தெரிவித்தார். தமிழ் மக்களிற்கு நிரந்தரமான அரசியல் தீர்வு இலங்கை அரசாங்கம் வழங்கவேண்டும் என்பதில் அமெரிக்கா விருப்பத்தோடு இருப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் தெரிவித்துள்ளதாக ஆயர் மேலும் தெரிவித்தார். (02)

## மீள்குடியமர்ந்த...

அடிப்படைத் தேவைகளில் முக்கியமாக தற்காலிக மற்றும் நிரந்தர வீட்டுத்திட்டம், மலசலகூடம், குடிநீர், விவசாய நிலங்களின் பராமரிப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் மீளக்குடியமர்ந்த மக்களது வாழ்வாதாரத்தை உயர்த்துவதுடன், கல்வி, மின்சாரம் போன்ற விடயங்களும் இதுவரை விடுவிக்கப்படாத பொதுமக்களின் வாழ்விடங்கள் மற்றும் காணிகளை மீளப்பெற்றுக் கொள்வது தொடர்பாகவும் அந்தந்த பிரதேச செயலாளர்களிடம் கேட்டறிந்து கொண்ட அமைச்சர் குறித்த விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது தெளிவுபடுத்தினார்.

முக்கியமாக மீளக்குடியமர்ந்த மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் விவசாயம், கைத்தொழில், கால்நடை வளர்ப்பை ஊக்குவிப்பது தொடர்பிலும் அமைச்சர் கவனம் செலுத்தினார்.

இதில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினூடாக 50 மில்லியன் ரூபாவை அரச அதிபருக்கு பெற்றுத் தருவதற்கும், வடமாகாணத்தின் அபிவிருத்தியைக் கருத்தில்கொண்டு மேலும் 500 உழவு இயந்திரங்களை பெற்றுத்தருவதற்கும் அவற்றைக்கொண்டு மீள்குடியேறிய பகுதிகளில் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கும் துறைசார்ந்தோர் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் இதன்போது உறுதிமொழி வழங்கினார். இந்தக் கலந்துரையாடலில் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் உட்பட பிரதேச செயலர்களும் கலந்துகொண்டனர்.

## ஆலயத்தில்...

இடம்பெற்றுவருவதாக தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு வந்த மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி சின்னையா விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தினை பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லுமாறு உத்தரவிட்டார். இதேநேரம் குறித்த யுவதியின் தாயும் தந்தையும் பிரிந்து வாழ்ந்துவரும் நிலையில் யுவதியின் தாயார் வெளிநாடு ஒன்றுக்கு செல்வதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டுவந்த நிலையில் குறித்த யுவதி கடும் மன உளைச்சலுக்குள்ளாகியிருந்ததாக அப்பகுதி தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கரைச்சிப் பிரதேச...

இழந்தவர்களாகவே காணப்படுகின்றனர். போரின்போது ஏற்பட்ட இழப்புக்களின் பக்கவிளைவாக இவர்களில் சிலர் தற்போதைய சந்தையில் பெறப்பட்ட வாணிபங்களை சீரான முறையில் இயக்க முடியாதிருக்கின்றனர்.

இந்த நிலையில் மக்களுக்கு ஏற்பட்ட போரின் தாக்கங்களை விளங்கிக் கொள்ளாத பிரதேச சபை நிர்வாகம் மீளாய்வு என்ற பெயரில் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் சிலரின் வாணிப உரிமையை மறுத்து வருவதாகவும் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதற்கு அப்பால் தாம் இது தொடர்பில் யாரிடம் முறையிடுவது என்பது தொடர்பிலும் வர்த்தகர்களுக்கு அங்கலாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. பொதுச்சந்தை இடமாற்றம் செய்வதற்கும் திர்க்கமான முடிவெடுக்கும் சக்தியற்ற பிரதேச சபையால் பழைய வாணிப உரிமையாளர்களின் உரிமத்தை மட்டும் எவ்வாறு மறுக்கமுடியும் என்பது தொடர்பிலும் வர்த்தகர்கள் பலர் கேள்வி எழுப்புகின்றனர். எது எப்படியோ வர்த்தகர்களின் நலன் சார்ந்த விடயங்களில் பிரதேச சபை தனக்கு சார்பான போக்கை கடைப்பிடித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மன்னார் ஜோசப் வாஸ் மீனவர்களுக்கு கடற்றொழில் செய்ய மாற்று இடம்



(மன்னார்)

மன்னார் ஜோசப்வாஸ் நகர் மீனவர்களுக்கு மன்னார் சங்குப்பிட்டி பிரதான வீதியில் உள்ள தள்ளாடி படைத்தளத்திற்கு சற்றுத் தொலைவில் உள்ள கடற்கரை பிரதேசத்தில் கடற்றொழில் செய்வதற்கான இடம் தற்காலிகமாக ஒதுக்கப்பட்டுள்ளதாக மன்னார் பிரதேச செயலர் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி எஸ். மோகநாதன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த கலந்துரையாடலின் போது மன்னார் பிரதேச செயலர் திருமதி ஸ்ரான்லி டி மெல், மன்னார் மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர், உதவி மாவட்டச் செயலாளர், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் மன்னார் மாவட்டத்தில் உள்ள மீன்பிடிச் சங்கங்களின் தலைவர்கள், உப தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னார் கோந்தைப்பிட்டி மீன்பிடி இறங்கு துறைமுகப் பகுதியில் ஜோசப்வாஸ் நகர் மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டு வந்த நிலையில் இரண்டு மீனவ சமூகங்களுக்கு இடையில் ஏற்பட்ட முறுகல் நிலை பாரிய பிரச்சினையாக மாறியுள்ள நிலையில் குறித்த அசாதாரண சூழ் நிலையைத் தணிக்கும் முகமாகவும், ஜோசப்வாஸ் நகர் மீனவர்களுக்கு தற்காலிகமாக கடற்றொழிலில் ஈடுபட மாற்று இடம் வழங்கும் முகமாகவும் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் உள்ள அதிகமான மீன் பிடிச் சங்கங்கள் ஜோசப்வாஸ் நகர் மீனவர்களுக்கு தொழில் செய்வதற்கு இடம் வழங்க மறுப்புத் தெரிவித்திருந்தன.

இந்த நிலையில் இங்கு கலந்து கொண்ட அனைவரினதும் கோரிக்கைகளுக்கு அமைவாக மன்னார் ஜோசப்வாஸ் நகர் மீனவர்களுக்கு தற்காலிகமாக தொழில் செய்வதற்கு மன்னார் சங்குப்பிட்டி பிரதான வீதியில் உள்ள தள்ளாடி படைத்தளத்திற்கு சற்று தொலைவில் உள்ள கடற்கரைப் பிரதேசத்தில் கடற்றொழில் செய்வதற்கான இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாக மன்னார் பிரதேச செயலர் தெரிவித்தார்.

குறித்த இடத்தினை மீனவர்களும், அதிகாரிகளும் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

## ஒன்பது பொலிஸார் பணி இடைநிறுத்தம்

(கொழும்பு)

கிரிஉல்ல பொலிஸ் நிலைய அதிகாரிகள் ஒன்பது பேர் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கிரிஉல்ல, தண்டகமுவ பிரதேசத்தில் தயாரிக்கப்பட்ட மது பானத்தை அருந்தியதாக இவர்கள் மீது குற்றஞ்சுமத்தப் பட்டுள்ளது.

இதனால் இவர்கள் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# சர்வதேச பாதுகாப்பு மாநாட்டில் 19 நாடுகள் கலந்துகொள்ளும்

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள சர்வதேச பாதுகாப்பு கருத்தரங்கில் கலந்துகொள்ள 19 நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

63 நாடுகளுக்கு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ள போதிலும் இதில் 19 நாடுகள் கருத்தரங்கில் கலந்து கொள்ள இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

"நிலையான சமாதானமும், ஸ்திரத்தன்மையும்" என்ற தொனிப் பொருளில் இம்முறை சர்வதேச பாதுகாப்பு மாநாடு நடைபெறவுள்ளது.

அமெரிக்கா, பிரித்தானியா, பங்களாதேஷ், பிரேஸில், சீனா, ஈரான், ஈராக், மலேசியா, மாலைதீவு, நேபாளம், நைஜீரியா, பாகிஸ்தான், தாய்லாந்து, நெதர்லாந்து, புரூணை, கென்யா, சவுதி அரேபியா, உகண்டா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் பாதுகாப்பு கருத்தரங்கில் கலந்து கொள்ள இணக்கம் வெளியிட்டுள்ளன.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரையில் இந்தமாநாடு கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

இராணுவ உயரதிகாரிகள், அரசியல்வாதிகள், வெளிநாட்டு பாதுகாப்புநிபுணர்கள், அரசாங்க உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்த மாநாட்டில் உரையாற்றவுள்ளனர்.

இந்த மாநாட்டில் பிரதம உரையை பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ ஆற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது

# ஊழல்களைக் கட்டுப்படுத்த அமைச்சர் நவீன் ஆலோசனை



(கொழும்பு)

அமைச்சர்களின் சம்பளத்தை உயர்த்துவதன் மூலம் நாட்டில் இடம்பெற்று வரும் ஊழல் மோசடிகளைக் கட்டுப்படுத்த முடியும் என அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கான சம்பளங்கள் உயர்த்தப்பட்டால் அமைச்சுக்களில் இடம்பெறும் பல்வேறு ஊழல் மோசடிகளைத் தடுத்து நிறுத்த முடியும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பொகவந்தலாவையில் இடம்பெற்ற பயிற்சி பட்டறை ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கப்பூர் போன்ற நாடுகளில் அமைச்சர்கள் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதில்லை. சிங்கப்பூரில் அமைச்சர்களுக்கு ஒரு மில்லியன் டொலர் சம்பளம் வழங்கப்படுகிறது.

எனவே, இலங்கை அமைச்சர்கள் பிரதியமைச்சர்களுக்கும் சம்பளங்கள் உயர்த்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

# சிறுவர் துஷ்பிரயோகம் கட்டுப்படுத்த நடவடிக்கை

அதிகரித்துவரும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களை கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் அதற்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் மனித உரிமை ஆணைக்குழு செயற்படவுள்ளதாக தெரிவித்துள்ளது.

இதன்பொருட்டு பொலிஸ், கிராம சேவையாளர்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரதும் உதவிகளை நாடவுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை பாடசாலை மற்றும் கிராமங்கள் ஊடாக விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# தாதிய பயிற்சிபெறும் 346 பேர் வடக்கு, கிழக்கிற்கு நியமனம்

(கொழும்பு)

புதிதாக தாதிய பயிற்சி நெறிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 346 பேரும் வடக்கு, கிழக்கிலுள்ள வைத்தியசாலைகளில் பணியாற்ற வேண்டுமென சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தாதிய பயிற்சிநெறிக்கு புதிதாக இணைக்கப்பட்டவர்களுக்கான நிகழ்வு பத்தரமுல்லையில் இடம்பெற்றவேளை அதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

புதிதாக தாதிய பயிற்சி நெறியில் இணைந்துள்ளவர்கள் தமது பயிற்சிக் காலம் நிறைவடைந்ததும் வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள வைத்தியசாலைகளில் பணியாற்ற வேண்டுமெனத் தெரிவித்தார்.

தாதிய பயிற்சிநெறிக்கு விஞ்ஞான பாடத்தை கற்ற மாணவர்கள் மட்டுமல்லாது கலை மற்றும் வர்த்தகப் பிரிவில் பயின்ற மாணவர்களும் இணைத்துக்கொள்ளப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நெடுந்தீவு மக்களின் தேவைகள் இந்தியத் தூதுவருக்கு எடுத்துரைப்பு



நெடுந்தீவுக்கு விஜயம் மேற்கொண்ட இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா உட்பட்ட குழுவினரிடம் நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளர் தானியேல் றெக்சியன் நெடுந்தீவு மக்களின் தேவைகள் குறித்த மகஜர் ஒன்றைக் கையளித்தார்.

இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்தா, இந்திய யாழ்ப்பாணத் துணைத்தூதுவர் வே.மகாலிங்கம் ஆகியோருடன் நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட சமூக அமைப்புக்கள் மற்றும் நெடுந்தீவு பிரதேச சபை உறுப்பினர்கள், மற்றும் அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோருடனான சந்திப்பின் போதே இந்த மகஜர் கையளிக்கப்பட்டது.

இம் மகஜரில் நெடுந்தீவு மக்கள் பாவனைக்கு புதிய பஸ், கடற்போக்குவரத்து படகு ஒன்றுக்கும், குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்றுக்குமான கோரிக்கை விடப்பட்டிருந்தது. மேலும் அம்மகஜரில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் பற்றியும் இதனால் மீனவ மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும், இந்திய வீட்டுத்திட்டம் நெடுந்தீவில் விஸ்தரிப்பது பற்றியும், நன்னீர் மீன்வளர்ப்புத் திட்டத்திற்கு இந்திய அரசின் உதவிகளும் கோரப்பட்டது.

இம்மகஜரில் குறிப்பிட்ட புதிய பஸ்வண்டி ஒன்றை உடனடியாக வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்த தூதுவர், கடற்போக்குவரத்து படகு மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரக் கோரிக்கைக்கு தாம் உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

மேலும் மீனவர் அத்துமீறல் தொடர்பான விடயத்திற்கு இந்திய அரசுடனும், இந்திய மீனவ பிரதிநிதிகளுடனும் கலந்தலோசித்து முடிவெடுப்பதாகவும் குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடல்களுக்கு நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளர் தானியேல் றெக்சியன் மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி ஆகியோர் தலைமை வகித்தனர்.

மேலும் நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தலைவர் ஏ.டபிள்யூ.அரியநாயகம் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க நெடுந்தீவுத் தலைவர் எ.அருந்தவசீலன், மற்றும் நிழல் சபை உறுப்பினர்கள் ந.தர்மகுமார், ஜே.ஜோண்சன்கெனடி மற்றும் கடற்றொழில் சமாசத் தலைவர் க.பொ.அமிர்தநாதர் ஆகியோர் உட்பட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

நேற்று பகல் 12.00 மணியளவில் அங்கு சென்ற குழுவினர், கடற்படையினரின் ஆடை உற்பத்தி நிலையத்துக்கும் விஜயம் செய்ததோடு, மாலை 3 மணிக்கு நெடுந்தீவிலிருந்து திரும்பினர்.

# தனியார் பஸ் கட்டணம் அதிகரிக்கக் கோரிக்கை

(கொழும்பு)

தனியார் பஸ் கட்டணங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக உயர்த்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தனியார் பஸ் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

தற்போதைய பொருளாதார நிலைமையின் கீழ் பஸ் போக்குவரத்தை முன்னெடுப்பதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சம்மேளனத்தின் செயலாளர் அஞ்ஜன பிரியஞ்சித் தெரிவித்தார்.

வருடாந்த பஸ் கட்டண அதிகரிப்பை மேற்கொள்வதற்கான உரிமை சட்ட ரீதியாக காணப்படுவதால், அரசாங்கம் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பஸ் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய தேவை காணப்படுகின்ற போதிலும் அந்த அதிகரிப்பை தாங்கிக்கொள்ள முடியாத நிலையில் பயணிகள் உள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன குறிப்பிட்டார்.

செலவீன அதிகரிப்பு காரணமாக பஸ் சேவைகளை முன்னெடுப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்ட கெமுனு விஜேரத்ன, விலை அதிகரிப்புக்குப் பதிலாக நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சின் செயலாளர் விக்டர் சமரவீர தெரிவிக்கையில், கடந்த பெப்ரவரி மாதம் நிதியமைச்சில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் இணக்கமொன்று எட்டப்பட்டிருந்ததாக தெரிவித்தார்.

அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி வரை பஸ் கட்டண அதிகரிப்பை கோருவதில்லை என்ற தீர்மானத்திற்கு அனைத்து பஸ் சங்கங்களும் இணக்கம் தெரிவித்திருந்ததாக அவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூலை 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.